

Registered as a Newspaper

PUMP
with
Standard Accessories
Select

NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

## அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 4-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்

நீயூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலை: 4 யாழ்ப்பாணம் சுக்கில ஆவணி மீ 17 உ சனிக்கிழமை ஸபர் 1410 ஷவ்வால் பிறை 01 (02-09-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 67

## செய்திச் சாரம்

### ஆனைப்பந்தியில் சூட்டுச் சம்பவம்

யாழ்ப்பாணம்; செப்: 2
ஆனைப்பந்தியில் நேற்று இடம் பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்;
வயிற்றுப் பகுதியில் குடல் வெளியேறிய நிலையில் அவர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்;
காயமடைந்தவர் ஆனைப் பந்தியைச் சேர்ந்த சேகர் (வயது-26) எனத் தெரிவிக்கப் பட்டது; (உ-10)

### இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், செப்: 2
கிளிநொச்சி ஜெயந்தி நகர் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் காயம் அடைந்தார்; (உ-76)

### முகாம் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், செப்: 2
கிளிநொச்சி டிப்போ சந்தியில் அமைக்கப்பட்டிருந்த அமைதிப்படை முகாம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மூடப்பட்டது; (உ-76)

### வேட்டுச் சத்தம்; மக்கள் ஓட்டம்

பண்டத்தரிப்பு, செப்: 2
சித்தங்கேணி - சங்கானைப் பகுதி வயல் வெளிப்பக்கமாக நேற்றுக் காலை 6.30 மணியளவில் திடீரெனத் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன;
அதையடுத்து வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் சிதறி ஓடினர்; அப்படி ஓடியவர்களில் ஒருவர் தவறி கிணற்றிக்குள் விழுந்து விட்டார் எனச்சொல்லப்பட்டது; (ஓ-120)

### மிருசுவிலில் தேடுதல்

பச்சிலைப்பள்ளி, செப். 2
மிருசுவில், உசன், விடத்தற் பளை ஆகிய பகுதிகள் நேற்றுச் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது;
ஒருசிலர் தடுத்து வைக்கப் பட்டு பகல் விடுவிக்கப்பட்டனர்; (ஓ-117)

### பொலீஸ்மீது சூடு!

கொழும்பு, செப். 2
புத்தளம், பாலாவிச்சந்தியில் கடந்த வியாழன் காலையில் சேவையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது வாகனம் ஒன்றில் சென்ற இனந்தெரி தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்;
ஒரு பொலீஸ்காரர் அந்த இடத்திலேயே இறந்தார்; வேறு இரண்டு பொலீஸார் காயமடைந்தனர்; (உ-எ)

### அக்டோபர் 2ஆம் திகதியே ஆரம்பமாகும்

கொழும்பு, செப்; 2
நாளை மறுதினம் ஆரம்பமாகவிருந்த சகல தொழில் நுட்ப கல்லூரிகளும் வருகிற அக்டோபர் மாதம் 2 ஆம் திகதியே ஆரம்பமாகும் என்று உயர்கல்வி அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்தது; (உ எ)

### ஹெவி டீசலும் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், செப். 2
இலங்கை மின்சாரசபையின் சுன்னாகம் மின் உற்பத்தி நிலயத்துக்கு 70 ஆயிரம் லீற்றர் ஹெவி டீசல் நேற்று வந்து சேர்ந்தது;
இதனையடுத்து சில தினங்களுக்கு சுழற்சி முறை மின்சாரம் யாழ் மாவட்டத்துக்குக் கிடைக்கும் எனத் தெரிவிக்கப் பட்டது; (உ-3)

### தபால் சேவை பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 2
யாழ்ப்பாணத்துக்கும் தென் பகுதிக்குமான தபால் சேவைகள் கடந்த ஒரு வாரமாக பாதிக்கப்பட்டுள்ளன.
வெளியூர்களுக்கான தபால்கள் யாழ். தபால் நிலயத்தில் தேங்கிக் கிடக்கின்றன; ஆனால் உள்ளூர் தபால் சேவைகள் வழமை போல் நடைபெற்று வருகின்றன; (ஓ-3)

### அரச அதிபர் பதவி ஏற்பு

யாழ்ப்பாணம், செப். 2
யாழ்: அரசாங்க அதிபராக திரு; எஸ். தர்மபாலன் நேற்றுப் பதவி ஏற்றார்;
நேற்றுக் காலை பதவி ஏற்ற பின் செயலக அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடினார்; (ஓ-3)

### மாப்பிளையும் கைது!

கொழும்பு, செப் 2
பாணந்துறை பெக்கம என்ற இடத்தில் மாப்பிள்ளை கோலத்தில் இருந்த தீவிரவாத சந்தேக நபர் ஒருவரை பொலீஸார் கைது செய்தனர்;
தகவல் கிடைத்து பொலீஸார் அந்தத் திருமண வீட்டை முற்றுகையிட்டனர்; அந்த வேளையில் தான் திருமண வைபவம் முற்றுப்பெற்றிருந்தது;
பொலீஸார் மாப்பிள்ளையைக் கைது செய்து அழைத்துச் சென்றபோது மணமகள் கதறி அழுதார்; உறவினர்கள் அதிர்ச்சியடைந்து நின்றனர்; (உ-எ)

### கோட்டையில் குண்டு வெடிப்பு!

கொழும்பு, செப்; 2
கொழும்பு, கோட்டையில் தொலைத்தொடர்புத் திணைக்களத் தலைமையகத்தில் உள்ள கார் தரிக்குமிடத்தில் நேற்று முன்தினம் காலை குண்டு ஒன்று வெடித்தது;
திணைக்களப்பிரதி இயக்குனரின் காருக்கு அருகில் இச் சம்பவம் இடம்பெற்றது; (உ-எ)

### ஆந்திராவில் நிலக்கண்ணி!

ஹைதரபாத், செப். 2
ஆந்திர மாநிலத்தில் கரீம்னர் கிராமத்தில் நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் பத்துப் பேர் கொல்லப்பட்டனர்;
நக்ஸலைட் தீவிரவாதிகளே இச்செயலுக்குப் பொறுப்பு என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

### பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப்; 2
இன்று நடைபெற இருந்த சிறுப்பர் தெரிவுக்கான பரீட்சைகள் பின் போடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

ஐ. தே. க. அதிருப்தியாளர்களுடன் — சிறப்புச் செய்தி

# எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டு அரசு அமைக்க முயற்சி!

## நாடாளுமன்ற மட்டத்தில் சதி நடப்பதற்கு அதிக வாய்ப்பு!

கொழும்பு; செப்டம்பர் 2

ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியில் அதிருப்தியுற்றிருக்கும் எம்.பிக்களையும் சேர்த்து, கூட்டு அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஈடுபட்டிருக்கின்றன. கொழும்பில் அரசியல் அவதானிகளை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸிகள் இந்தத் தகவலை வெளியிட்டன.

கொழும்பில் இராணுவச் சதி நடப்பதற்கு வாய்ப்புகள் ஏதும் இல்லை என்றும், ஆனால் நாடாளுமன்ற மட்டத்தில் சதி நடைபெறலாம் என்றும் அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

எனினும் இத்தகைய நடவடிக்கையின் மூலம் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவை அவரது பதவியில் இருந்து இறக்கமுடியாது என்றும்—

ஆனால் தனது நிறைவேற்று அதிகாரங்களை அவர் பிரயோகிப்பதில் தடங்கல்களை ஏற்படுத்த முடியும் என்றும் அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

தற்போதைய நாடாளுமன்றத்தில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 125 ஆசனங்களே உள்ளன;

எதிர்க்கட்சிகள் அனைத்தும் சேர்த்து 100 ஆசனங்களை வைத்திருக்கின்றன;

ஆளும் கட்சியில் இருந்து 13 எம்: பிக்கள் விலகி, எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவளிக்க முன்வந்தால் ஐ.தே.க; அரசு கவிழும்;

ஜனாதிபதி பிரேமதாஸாவின் செயற்பாடுகள் குறித்து அவரது ஆளும் ஐ தே; கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களே

(4ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வசதி நிறுத்தப்பட்டது!

யாழ்ப்பாணம், செப் 2
மா, அரிசி உட்பட உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உணவுத் திணைக்களம் இனிமேல் கடன் வசதி செய்து கொடுக்கமாட்டாது; அந்த வசதி நேற்றுமுதல் நிறுத்தப் பட்டது;

இனிமேல் பணம் செலுத்தியோ அல்லது வங்கியால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட காசோலைகளைச் செலுத்தியோ தான் மா, அரிசி போன்ற பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியும்;

கடன் வசதியை நிறுத்தும் உத்தரவு கொழும்பு உணவுத் திணைக்களத்திடம் இருந்து யாழ் உணவுத் திணைக்களத்துக்கு நேற்றுக் கிடைத்தது;

இதுவரை காலம் உணவுத் திணைக்களம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோக உத்தரவுகளை (Issuing Orders) வழங்க அவை பொருள்களை உணவுத் திணைக்கள களஞ்சியங்களில் இருந்து பெற்று ஒருமாத காலத்தில் பணத்தையோ அல்லது காசோலையோ கொடுத்து வந்தன;

புதிய நடைமுறையால் ப; நோ; கூ; சங்கங்கள் பண நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி வரும் என்றும், உணவு முத்திரை விநியோகத்தை நிறுத்த வேண்டிய நிலை உருவாகும் என்றும் ப; நோ; கூ; சங்க வட்டாரங்கள் கவலை தெரிவித்தன; (அ-3)

### சுபநேரம்

(02-9-1989)
ஆவணி 17 சனிக்கிழமை
நக்ஷத்திரம்: உத்தரம்
சுபநேரம்:
3-05 முதல் 4-35 வரை ராகுகாலம்.
09-05 முதல் 10-35 வரை இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## விறகு வெட்டச் சென்று பின்னர் காணமற் போன மூவரில் இருவர் சடலமாக மீட்பு!

முல்லைத்தீவு, செப் 2
நெடுங்கேணி வீதியிலுள்ள காட்டிற்கு உழவுயந்திரத்தில் விறகு வெட்டச் சென்று பின்னர் காணமற்போன மூவரில் இருவரின் சடலங்கள் எரிந்து சருகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

முள்ளியவளைக் காட்டுப்பகுதியில் சடலங்கள் கிடப்பதை அறிந்து இறந்தவர்களின் பனைவிமார் மற்றும் உறவினர்கள் அங்கு சென்று கால்கள் மற்றும் அரைகுறையாக எரிந்த உடைகள் கொண்டு அடையாளம் கண்டனர்;

கொலையுண்ட இருவரும் முல்லைத்தீவு கரச்சிக் குடியிருப்பைச் சேர்ந்தவர்களாவர்;

கொலையுண்டவரில் ஒருவர் செல்லத்துரை பாலசுப்பிரமணியம் (வயது 39) இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார் அடுத்தவர் கனகையா கனகசிங்கம் (வயது 40) இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆவார்;

காணமற்போன தாசச சந்தேகிக்கப்பட்ட மூன்றுவது

(4ஆம் பக்கம் பார்க்க)

## அரிசி, எரிபொருளுடன் சரக்கு ரயில் வந்தது!

யாழ்ப்பாணம்; செப். 2
கொழும்பில் இருந்து சரக்கு ரயில் ஒன்று எரிபொருள், அரிசி ஆகியவற்றுடன் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது;

இந்த ரயிலில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணை ஆகியவற்றுடன் ஆயிரத்து 920 மூடை அரிசியும் கொண்டுவரப் பட்டன;

மேலும் ஒரு சரக்கு ரயில் இன்று வரும் என எதிர்பார்க்கப்படுகிறது; (ஓ-3)

## 5 வது தினமாக நேற்று தெற்கில் வேலை நிறுத்தம்

கொழும்பு, செப்: 2
தென் பகுதியில் ஐந்தாவது தினமாக நேற்றும் வேலை நிறுத்தம் நடந்தது;

நேற்று நடந்த வன்செயல்களில் 24 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 17 பேர் பொது மக்கள்; 5 பேர் தீவிரவாத சந்தேக நபர்கள், இரண்டு பெண்களின் சடலங்கள் அடையாளங் காணப்படவில்லை.

சிதுவை என்னுமிடத்தில் இ; போ; ச; சாரதி ஒருவர் இனந்தெரியாதோரால்நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

அடையாளங்காணப்படாத பெண்களின் சடலங்கள் கண்டி மாவட்டத்தில் மஹியாவ என்னுமிடத்தில் கண்டு பிடிக்கப்பட்டன. அவை தாயும் மகளுடையதாகவும் இருக்கலாம் என்று கருதப் பட்டது;

சிதுவையில் தகம ஓயா பாலத்தின் கீழ் கைகள் பின்னால் இழுத்துக் கட்டப்பட்ட நிலையில் ஏழு பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன;

மாத்தளை மாவட்டத்தில் வெலங்கஹவத்தை, ரத்தோட்டை ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் எரிந்த நிலையில் 17 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன; (உ-எ)

## சுங்க அதிகாரிகளும் வேலைக்குச் செல்லவில்லை!

கொழும்பு, செப் 2
விமான நிலயத்தில் பணிபுரியும் சுங்கத் திணைக்கள அதிகாரிகளும் கடந்த திங்கள் முதல் வேலைக்குச் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது;

இதனால் பயணிகள் கடுமையான சுங்கச் சோதனைக்குள்ளாக்கப்படுவதில்லை என்று விமான நிலய வட்டாரங்கள் தெரிவித்தன;

ஆனால் விமான நிலயத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் பயணிகளை வழமையான சோதனைக்கு உட்படுத்தி வருகின்றனர்;

செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் சுங்கப் பிரிவு ஊடாக விமானப் பயணிகள் எதுவித சோதனையுமின்றி சென்று வந்தனர் என்று நிலய வட்டாரங்கள் தெரிவித்தன; (உ-எ)

## தெற்கு வன்செயல்கள் மதவாச்சிவரை தீவிரம்

வவுனியா, செப். 2
தென்னிலங்கை வன்செயல்கள் மதவாச்சி வரையும் பரவி வந்து விட்டன; கடந்த புதன் கிழமை அப்பகுதியில் பலர் கொலை செய்யப்பட்டனர் எனத் தெரிய வந்தது; வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன;

மதவாச்சிப் பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு பல இளைஞர்கள் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டு சடலங்கள் வீதியோரத்தில் கிடக்கக் காணப்பட்டதாகத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இராமேஸ்வரத்திலிருந்து வெடிமருந்து கடத்தமுயற்சி

பெரும்பாலான வெடிமருந்துக்கள் மற்றும் ஜெலிக்னைட்டுகள் என்பன நேற்று இராமேஸ்வரம் கடற்கரை பகுதியில் வைத்துக் கைப்பற்றப் பட்டதாகச் சொல்லப்பட்டது;

இவை இலங்கைக்குக் கடத்தப் பட இருந்ததாகச் சந்தேகிக்கப்பட்டே கைப்பற்றப்பட்டதாக யூ.என்.ஐ. தெரிவித்தது:

இந்த வெடிமருந்துப் பொருள்களுடன் மூன்று இலங்கைத் தமிழர்களும்கைது செய்யப்பட்டனர் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது; (ஓ-9)

## வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தேவை எனக் கருதும்வரை ஸ்ரீலங்காப்படை இருக்கும்

கொழும்பு, ஆ 2
வடக்கு- கிழக்கு மாகாணத்தில் தேவை என்று கருதப் படும்வரை இலங்கை இராணுவம் இருக்கும்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க முன்கண்டவாறு செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்;

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எமது இராணுவம் எவருடனும் யுத்தத்தில் ஈடுபடப் போவதில்லை என்றும் ஜெனரல் ரணதுங்க தெரிவித்தார். (ஓ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சண்டிலிப்பாய் வடக்கில் 50 பரப்பு தோட்டக் காணி சகல வசதிகள் கொண்ட வீட்டுடன் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம். ஆர். எஸ். றிம்பர் மேஜி ... பிரதானவீதி, சங்கானை (1744)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் [Medical Books] ... நவீன கம்பியூட்டர் நூல்கள் [Latest Computer Books] கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் ... வான வாழ்த்து மடல்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். ... பேட் [புத்தகசாலை] இல 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [1551]

Honda Reconditon C 90, C 70, C 50 Chaly CD 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. ... 390, மெயின் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [1872]

நல்லினை அல்சேஷன் ஆண் நாய் 2½ வயது: விற்பனைக்கு உண்டு. தொடர்பு: C. Selva raja, சுதுமலை அம்மன் கோவிலடி, சுதுமலை மேற்கு (Spoken English நிலையம்) (2006)

Hot Point 14:5 குளிர்சாதனப் பெட்டி Vespa Scooter 50 C C யும் விற்பனைக்குண்டு: ஆண்களும், பெண்களும் உபயோகிக்கலாம்: சனி, ஞாயிறு தினங்களில் எந்நேரமும், ஏனைய நாட்களில் 3 00 மணிக்குப் பின் பார்வையிடலாம். ... வகுமாரன், பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை (1770)

### G. C. E. (O/L) கணிதம்

5 மாதிரி வினாத்தாள்களும் 1988 வினாத்தாள் (விடைகளும்) மயூரதி வெளியீடு- 4 ரூபா 13 75 7 மாதிரிவினாத்தாள்கள் செய்கைகளுடன் மயூரதி வெளியீடு- 5. ரூபா 17 50: பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, ஞானசுரபி, துர்க்கா ஸ்ரேஷன், மற்றும் புத்தகசாலைகள்: (1389)

### காணியும், வீடும் விற்பனைக்குண்டு

அரியாலை கண்டி வீதிக்கு அருகாமையில் உள்ள முள்ளி வீதியில் 2 பரப்புக் காணி வீட்டுடன் உண்டு. தொடர்பு முகவரி: 42/2, கோவில் வீதி, ... ஒழுங்கை, யாழ்ப்பாணம்: [1873]

### கோழிக்குஞ்சுகள் விநியோகம்

Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் புரொயிலர் குஞ்சுகள் 10-09-89 இல் விநியோகிக்கப்படவுள்ளன: முன்கூட்டியே பதிவு செய்யவும்: புரொயிலர், இறைச்சிக்கோழிகளும் விற்பனைக்குண்டு: பரம் ஏஜன்சி, ஊரெழு. (1766)

V. K. M. Farm Centre (ஒறிஸ்டம்பு) புரொயிலர் குஞ்சு, பேட்டுக் குஞ்சு, சேவற் குஞ்சு [பிலிமத்] முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்: 7-9-89 வியாழக்கிழமை 8-9-89 வெள்ளிக்கிழமை பதிந்தவர்கள் பெற்றுக் கொள்ளலாம்: 17/1 கனகசபை அவெனியூ, சிவலிங்கப் புளியடி. [1870]

### இறைச்சிக் கோழி விற்பனை

V K. M: Farm Centre Broiler கோழி, பேட்டுக் கோழி, சேவல் கோழி, விருத்துக் குஞ்சு, சூப் குஞ்சு விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். No. 17/1கனகசபை அவெனியூ, சிவலிங்கப் புளியடி, யாழ். இந்துக் கல்லூரி, பின்பக்கம். [1869]

### தேவை

மருதனார்மடத்துக்கு அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட வியாபார [பலசரக்கு - Groceries] நிலையம் ஒன்றினை பொறுப்பேற்று நடத்துவதற்கு முகாமையாளர் அல்லது பங்காளர் உடன் தேவை. தொடர்பு K S பிள்ளை, Dilka, மேல் மாடி பஸ்நிலையம் முன், யாழ்ப்பாணம். (சி/3585)

மணிக்கூடு திருத்துவதற்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை. தொடர்பு: சதீஸ், றெக்கோடிங் ஸ்ருடியோ, 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் [1796]

தமிழிலும், ஆங்கிலத்திலும் தேர்ச்சியுடைய அனுபவம் வாய்ந்த அச்சுக்கோப்பாளர் தேவை: இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 10-09-89க்கு முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும். நிர்வாகி, A C.M Press, 182, 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் [1793]

திருநெல்வேலி பலாலி வீதியில் (சந்திக்கு அருகாமை) அல்லது கே. கே. எஸ். வீதி பகுதியிலும் சகல வசதிகளும் கூடிய வீடு ஒன்று உடனடியாகத் தேவை: தொடர்பு: கிருஷ்ணபாம் 41, பலாலி வீதி திருநெல்வேலி, வடக்கு: (1834)

கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி பகுதியில் ஏறக்குறைய (10) பத்து பரப்பு கிணற்றுடன் கூடிய தோட்டக்காணி தேவை. (II) Vespa Scooter 82 இற்கு பிந்தியது தேவை: J. P. T. L td. 3 நவீன சந்தை, மேல் மாடி, யாழ்ப்பாணம்: (C/3596)

### மணமகன் தேவை

இந்து உயர் வேளாள குல O/L படித்த 29 வயதுடைய அழகிய உதயத்தில் செவ்வாய் அமைந்த மணமகளுக்கு மணமகன் தேவை. சீதனமாக ஐந்து லட்சம் பணமாகவும் வீடு வளவும், நகையும் தரப்படும். வெளிநாட்டிற்குச் செல்லவும் அல்லது படிப்பு வசதிக்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்: சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்: 88, C/o உதயன், யாழ்ப்பாணம். (1868)

அந்தணர் குல 31 வயது, 7 இல் செவ்வாய் உடைய மணமகளுக்கு அதே இன மணமகன் தேவை: கணிசமான அளவு சீதனம் வழங்கப்படும். தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்: 584, C/o Uthayan: (1743)

### மணமகள் தேவை

லண்டனில் Financial Controller, B. Sc 30 வயது மகநட்சத்திரம் பாவம் 11/16 இந்து வேளாள சாதகருக்கு லீசாவுள்ள 25 வயதான அழகான, உயரமான B Sc அல்லது தொழிற் தராதர முள்ள மணமகள் தேவை, 591, C/o Uthayan (2013)

கவிற்சலாந்து நாட்டில் நிரந்தரமாக வசிக்கும் உரிமை பெற்ற யாழ் இந்து வேளாள உயர்குல 34 வயதுடைய நற்குணமுள்ள மணமகனுக்கு பெற்றோர் அழகிய நற்குணமுள்ள கல்வி கற்ற மணமகளைத் தேடுகின்றனர். மணமகனுக்கு 8இல் செவ்வாய் உண்டு. முதற்கடிதத்திலேயே சாதகம், புகைப்படம் போன்றவற்றுடன் விண்ணப்பிக்கவும் ஏற்கப்படாதவை திருப்பி அனுப்பப்படும். 588, C/o Uthayan. [1792]

31 வயதுடைய 5' 8'' உயரமுடைய யாழ். பொற்றொழிலாளர் குல பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியருக்கு மணமகள் தேவை; சாதகக் குறிப்பு புகைப்படம் உட்பட பூரண விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: படம் திருப்பி அனுப்பி வைக்கப்படும். 587, C/o Uthayan. (1791)

### VACANCY

Vacancy for Lady Clerk, proficient in English and preferably over 30 years, in business establishment Field work included Accommodation provided if needed- Francis Joachim, "Padua" Pandateruppu (C/3590)

### பிரெஞ்சு மொழி வகுப்புகள்

ஆரம்ப பிரெஞ்சு மொழி (Beginners Course) 8-9-89 சனிக்கிழமை காலை 9 மணி முதல் ஆரம்பமாகின்றது: தொடர்பு: Alliance Francaise De Jaffna யாழ். பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம், 130, முதலாம் குறுக்குத் தெரு' யாழ்ப்பாணம். (1713)

### ஜோதிடம்

(3 9-89) நாளை ராகு, கேது மாற்றம் ரூ. 3 50 எங்கும் கிடைக்கும். ராகு, கேது மாற்றமும் சனி பார்வையும் தென் இலங்கைக்கு இரத்தக் களரியை ஏற்படுத்தும்: நூலாசிரியர் (ஆத்மசோதி) சத்தியதாஸன், விநியோகஸ்தர்: பூபாலசிங்கம், புத்தகசாலை: (1798)

### கல்வி

91 A/L கணித மாணவர்களுக்கான கணிதம், பௌதிகம் அடிப்படைத் Theory உடன் பயிற்சிகள் சனி, ஞாயிறு 3—5 மணி வரை 3 9-89 ஆரம்பம். O/L 4 Dக்கு மேலெடுத்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்க. N: நகுலேஸ்வரன், சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. [1862]

ஆங்கிலம், தமிழ், இந்து நாகரிகம் கற்பிக்கப்படும். ஆசிரியர் கலாநிதி வேலன்: கண்ணாடி அலுமாரி, மின் உபகரணங்கள் புதிய தம்புரா ஆகியனவும் விற்பனைக்கு உண்டு 149/1, கோவில் வீதி, நல்லூர்: [1843]

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/3601)

### I B M

Personal System/2 for Information on I. B. M. ps/2 Local Area Networks, Communication Products, I. B. M. Software Contact Dheenan Gunaratnam, Keels Business Systems. 130, Glennie Street, Colombo 2, Phone: 422753 (2011)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவில் இருந்து பரந்த அறிவைப் பெறுவதற்கு உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் விண்ணப்பிக்கவும். I E; T. 11B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர்மேல்மாடி] [1088]

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



● பரமேஸ்வரன் முரளீதரன் ●

ஆண்டவன் அளிப்பு: 22- 03- 1971

ஆண்டவன் அழைப்பு 05- 06 1989

முன்னு 'குதித்தவரே முரளி!
முன்னின்று சென்ற தெய்வமே ஐயா!
அண்ணல் அவன் அழைத்தானோ? ஆறுதல் தந்தானோ?
எங்கள் மனம் ஆறுதல் அடையவில்லை ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய கண்ணீர்ப்
பூக்களைக் காணிக்கையாகச் செலுத்துகின்றோம்;

அப்பா அம்மா, சகோதரிகள், சகோதரன்,
அப்பம்மா, அம்மம்மா,
உறவினர்கள், நண்பர்கள்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.
02- 09- 89 (2008)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



## திருமதி விமலாதேவி மகேஸ்வரன்

மலர்வு: 25- 07 1951

உதிர்வு: 09- 03- 1989

அன்பே!
காலமெல்லாம் நீ என்னருகில் -பிரிவு
உடலுக்கு உணர்வுக்கல்ல!
நானிருக்கும் வரை - நீ
என்னுள் இருப்பாய்.

செ. மகேஸ்வரன் (மனோ),
திருமதி க. செல்லையா,
திரு திருமதி இரத்தினசபாபதி
சகோதர சகோதரிகள்.

18, சிறும்பியடி வீதி,
யாழ்ப்பாணம்: ((சி/3314)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 - 11 - 1915

மறைவு 13 - 09 - 1988

திதி: 02-09-1989

## திரு. சுப்பிரமணியம் சின்னப்பு

[குழந்தை]

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! எங்கள் அன்புத் தெய்வமே! எங்கள் உயிர்த் தந்தையே! எங்களை வளர்த்து நல்நிலைப்படுத்தப் பட்டபாடு பட்டீர்கள். ஈற்றில் உங்கள் தவப் புதல்வனின் பிரிவு தாங்காது நோய்வாய்ப்பட்டுத் திடீரென எங்களை விட்டுப் பிரிந்து விட்டீர்கள். உங்கள் பிரிவு தாங்காது வாடும் எங்களின் நல்வாழ்விற்காக எங்களை ஆசிர்வதியுங்கள் தந்தையே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அச்சுவேலி, உலவிக்குளம் விக்கின விநாயகனையும், செல்வச் சந்நிதி முருகனையும் வேண்டுகிறோம்.

''திருத்தணிகை'' அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

02. 09. 1989



## திருமதி யோகசரஸ்வதி சின்னத்தம்பி

தோற்றம்: 04- 03- 1920

மறைவு: 03- 08- 1989


உங்கள் அன்பால் எங்கள் எல்லோரையுமே பிணைத்தீர்கள்! பல்வேறு சீரிய வழிகளில் எம்மை வழி நடத்தினீர்கள்! வாழ்க்கையில் பல நிறைவுகளையும் சௌகரியங்களையும் அனுபவித்தீர்கள், நிம்மதியாக இறந்தீர்கள் இவை எல்லாவற்றிற்கும் ஆண்டவனுக்குத் துதி செலுத்தி, உங்கள் ஆத்மா சாந்தியடைய உங்கள் பாசத்திற்குரிய நாம் அனைவரும் அப்பரம்பொருளை வேண்டுகின்றோம்;

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிங்கைவில்லா' ... உரும்பராய்

சகோதரிகள். (சி/3589)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## கந்தவனம் தவேந்திரன் (தவம்)

தோற்றம்: 22-10-1963

மறைவு: 13-09-1988

திதி: 02 09-1989

அன்பின் உறைவிடமாய் பாசத்துடன் வாழ்ந்து எம்மவரை எல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தி துயர்கடலில் ஆழ்த்திவிட்டுச் சென்ற அன்புச் செல்வம் தவேந்திரனே! நீர் மறைந்து ஓராண்டு சென்றாலும் இன்னும் எங்கள் கண்முன்னே காட்சி தருகிறீரே! என்றும் எங்கள் உள்ளத்தில் உலாவி எங்களை ஆசீர்வதிப்பீராக!! உங்கள் ஆத்மா சாந்திபெற எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்:

உங்கள் பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், சகோதரன்.

ஞா: பாஸ்கரோதயவீதி,
கல்வியங்காடு; (1864)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவு விலையில் அறிமுகம்!

**CHILTON TRIP SWITCH**

மின்பொறியியலில் புகழ் மிக்க
OTTERMILL CHILTON LTD
ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு

## சுந்தர்சன்

சந்தை முன்    மானிப்பாய்
(G/4141)


## இளைஞர், விதவைகள், அநாதைகளுக்கான தொழில் வாய்ப்பு.

வடக்கு-கிழக்கு மாகாண அரசானது, உதவி எதுவும் இதுவரை பெறாத இளைஞர்கள், விதவைகள், அநாதைகள், இடம்பெயர்ந்த குழந்தைகள் ஆகியோருக்கான புனர் வாழ்வு பிரதான திட்டம் ஒன்றினைத் தயாரிக்க முனைந்துள்ளது.

இத்திட்டமானது தேவைப்படும்பட்சத்தில், வருமானம் தோற்றுவிக்கும் திட்டங்கள், சமூக அபிவிருத்தித்திட்டங்கள், தொழிற்பயிற்சி வசதிகள் என்பனவற்றையும் உள்ளடக்கும். அரச உத்தியோகத்தர்கள், கிராமிய தொண்டர் அமைப்புக்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோர் மூலம் ஒவ்வொரு கிராம சேவைப் பிரிவுகளுக்கான திட்டத்தினைத் தயாரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கிராம மட்டத்திலான திட்டங்களைத் தயாரித்தலில் உதவ ஆர்வமுள்ள கிராம மட்டத்திலான தொண்டர் நிறுவனங்கள், சமூக சேவை நிறுவனங்கள் தங்களுடைய பெயர்களையும், விலாசங்களையும் அந்தந்தப் பகுதி மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளருக்கோ அல்லது நேரடியாக எனக்கோ அனுப்பி வைக்கலாம். அத்துடன் மேற்கூறியவை தொடர்பான உங்களிடம் ஏதாவது திட்டங்கள் இருப்பினும் அவற்றையும் பிரேரணைகள் வடிவில் அனுப்பி வையுங்கள்.

(ஒப்பம்) செயலாளர்
திட்டமிடல், இளைஞர் விவகார
மனிதவள அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாணசபை அரசு,
திருகோணமலை.
(C/3305)


## கொம்பியூட்டர் பயிற்சி

**Diploma In Basic Programming**

புதிய பிரிவுகள்: 4-9-89 (BATCH-1) 9.30 A.m
8-9-89 (BATCH-2) 9.30 A.m

1st Payment Rs. 500/-

**I.D.P Computer Centre**
342, K. K. S. Road, JAFFNA
(சிவன் கோவிலடி)
Branch:- 7th mile post MALLAKAM
(C/3586)


## முக்கிய அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாண அரசு

### வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள்

வடக்கு - கிழக்கு மாகாண அரசின் அமைச்சுக்கள் திணைக்களங்கள் என்பவற்றில் உள்ள வெற்றிடங்களுக்கான நிரந்தர நியமனங்கள் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்குக் காலம் விளம்பரங்கள் மூலம் வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுதியின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

இது வரை வடக்கு - கிழக்கு மாகாண அரசின் திட்டமிடல், இளைஞர் விவகார, மனிதவள அமைச்சுக்கோ அல்லது வேறு ஏதாவது அமைச்சுக்கோ அனுப்பப்பட்ட வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது;

எனவே, தற்போது வடக்கு - கிழக்கு மாகாண அரசில் கடமை புரியும் தற்காலிக (அமைய) ஊழியர்கள் உட்பட தகுதியுள்ள அனைவரும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விளம்பரங்கள் மூலம் வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் கோரப்படும் போது நேரடியாக விண்ணப்பிக்க வேண்டும்;

மேலும் இம்மாதம் 17ஆம் 18ஆம் 20 ஆம் திகதிகளில் உதயனிலும் வேறு பத்திரிகைகளிலும் எழுதுவினைஞர், தமிழ் சுருக்கெழுத்தாளர், ஆங்கில சுருக்கெழுத்தாளர் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தகுதியுள்ள அனைவரும் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்ட படி விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றனர்,

செயலாளர்,
திட்டமிடல், இளைஞர் விவகார,
மனிதவள அமைச்சு.
(இ-8308)

## இன்று காத்தவராயன்

யாழ் பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் ஆதரவில் இன்று பகல் இரண்டு மணிக்கு கலாநிதி பாலசுந்தரத்தின் "காத்தவராயன்" என்னும் நாடகம் இரண்டாவது தடவையாக மேடையேறுகிறது.

இதில் நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி பாலசுந்தரம் ஆகியோர் அரங்கவுரை நிகழ்த்துவார்கள். (த - 3)

கனகரத்தினம் ம.ம. வி.யில்

## தாவரவியற் பூங்கா திறப்பு விழா இன்று

கொக்குவில், செப்: 2

யாழ் பிரதேச பாடசாலைத் தாவரவியற் பூங்கா, இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பியால் யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் திறந்து வைக்கப்படும்.

யாழ் பல்கலைக்கழக தாவரவியல் துறைப் பேராசிரியர் கலாநிதி கே. தெய்வேந்திரராஜா அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்;

யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களம், தொண்டமனாறு வெளிக்கள நிலையம், யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் ஆகியன இணைந்து இதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகின்றன.

தொண்டமனாறு வெளிக்கள நிலையத் தலைவர் திரு. என். செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் கல்லூரி அதிபர் திரு. மு. இராமலிங்கம் வரவேற்புரையும் விஞ்ஞான கல்வி அதிகாரி திரு: பி. எஸ். சர்மா நன்றியுரையும் நிகழ்த்த சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. கே. எஸ். குகதாசன் அறிமுகவுரை நிகழ்த்துவார். (க-69)


## பெண் விற்பனையாளர்கள் தேவை

யாழ் நகரில் புதிதாக ஆரம்பித்துள்ள கம்பெனிக்கு பொருட்கள் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு சகல இடங்களிலுமிருந்து பிணைப்பணம் ரூபா. 1 500/ செலுத்தக் கூடிய பெண் விற்பனையாளர்கள் தேவை. சம்பளம் விற்பனையடிப்படையில் மாதம் ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெறக் கூடிய வாய்ப்புகள் உண்டு.

**590, C/o, உதயன்,
யாழ்ப்பாணம்.**
(2012)


உ

## திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் சுக்கில வருடம் ஆவணி மீ 17 ஆம் திகதி (02 - 09 - 1989) சனிக்கிழமை பகல் 11 மணிக்கும் 12 30 மணிக்கும் இடையில் வரும் சுபவேளையில்

| எமது புத்திரன் திருநிறை செல்வன் | எமது புத்திரி திருநிறை செல்வி |
|---|---|
| **யோகராசாவுக்கும்** | **மல்லிகாதேவிக்கும்** |

ஜேர்மனியில் மணமகன் இல்லத்தில் திருமணம் நடைபெற பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளது.
இவ் அழைப்பிதழை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்:

செல்லத்துரை மகேஸ்வரி [தம்பதிகள்],
"அருள் வாசா"
தச்சன்தோப்பு, நாவற்குழி.

வீமர் நாகம்மா [தம்பதிகள்],
கூவில் (வடக்கு)
கீரிமலை;

[2005]


## உலகளாவிய தொடர்புகள்

டுவின்ஸ் கொமியூனிகேஷன்ஸ் (பிரைவேட்)
லிமிட்டெட் வழங்கும்
**24 மணி நேரச் சேவைகள்**

பிரான்ஸ் கனடாவில் உள்ள உங்கள் உறவினர்களுக்கோ, தொழில் சார்ந்த சகாக்களுக்கோ எமது பிரான்ஸ் - கனடா முகவர் ஊடாக ஃபாக்ஸ் [Fax] மூலம் துரிதமாக தகவல்களைப் பரிமாற எம்மை நாடுங்கள்:

கீழ்க் காணும் எமது முகவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்:-

**வவுனியா**
மு. காசிப்பிள்ளை
சக புத்திரர்கள்

**யாழ்ப்பாணம்**
ஸ்டூடியோ டில்கா
202 A, ஆஸ்பத்திரி வீதி.

**மட்டக்களப்பு**
தயா எலக்ரிக்கல்ஸ்
111, திருகோணமலை வீதி.

**திருகோணமலை**
ஃபியூஜிகா என்டர்பிரைசஸ்
32. ராஜவரோதயம் வீதி.

எமது சேவைகள்:

- ★ வெளிநாட்டு (IDD) / உள்ளூர் நேரடித் தொலைபேசித் தொடர்புகள்
- ★ ஃபாக்ஸ் (FAX) வசதிகள்
- ★ டெலக்ஸ் (TELEX) / வெளிநாட்டுத் தந்தி
- ★ போட்டோ பிரதிகள் (பெருப்பித்தல் / குறைத்தல் உட்பட)
- ★ ஆங்கில தட்டெழுத்து வசதிகள்

மேல் விவரங்களுக்கு!-

**டுவின்ஸ் கொமியூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்**

161, 1/1 காலி வீதி, பம்பலப்பிட்டி    கொழும்பு — 4

தொலைபேசி: 501838 501839, 501840
டெலக்ஸ்: 22777, 22778, TWINS CE
ஃபாக்ஸ்: 94 - 1 - 501841

**Twins Communications (Pvt.) Limited.**
(இ-3591)

## ஜேர்மன் - வாராந்தப் பயணம்

(கடவுச்சீட்டுத் தந்து ஒரு வாரத்தில் பயணத்தை மேற்கொள்ளலாம்)

- ✶ Papua New Guinea
(பப்போ நியூ கினியா) Labourer 1000 USD
- ✶ சிங்கப்பூர் தாதிமார்
(ஏழு வெற்றிடங்கள் மட்டுமே உண்டு)
பணிப்பெண்கள் — 4200/-

அவுஸ்திரேலியா குழுவின் பயண முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும்.

குறிப்பு: எந்த நாட்டுக்கும் முற்பணம் அறவிடப்படமாட்டாது PASS PORT - BOND உடன் செய்து கொடுக்கப்படும்.

க. இந்திரலிங்கம் (சந்திரன்)

**நிரோஷன் என்ரபிறைஸ்**

பருத்தித்துறை வீதி,
மயிலிட்டி    காங்கேசன்துறை
(இ/3600)    (T. B. வைத்தியசாலைக்கு முன்பாக)


வடக்கு - கிழக்கு மாகாண அரசு
காணி விவசாய அமைச்சு

## கேள்விகள்

காணி. விவசாய அமைச்சினால்
திருகோணமலை
மட்டககளப்பு
வவுனியா

ஆகிய இடங்களில் கறவைத்தீன், கோழித்தீன் ஆலைகள் நிறுவப்படவிருக்கின்றன. இத்தொழிற்சாலைகளுக்கு மணித்தியாலம் 2 தொன் உற்பத்தி செய்யக்கூடிய இயந்திர உபகரணங்களைச் செய்து நிறுவுவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

செய்வதற்கும், நிறுவுவதற்கும் எடுக்கக்கூடிய காலம் 4 (நாலு) மாதம்.

கேள்விகள் 1989 செப்டெம்பர் மாதம் திங்கட்கிழமை 18ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு முன் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பப்படல் வேண்டும்,

செயலாளர்
காணி, விவசாய அமைச்சு
கிறீன் வீ , திருகோணமலை.
(இ/3310)

## சுகாதார உதவியாளராக (Health Visitors) பயிலுநர்கள் தெரிவு - 1989

சுகாதார உதவியாளராகப் பயிற்சியளிப்பதற்கு கீழ்க்காணும் தகுதியுள்ள ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவி தற்காலிகமானது. நிரந்தரபதவிகளுக்கு உரித்துடையவராகமாட்டார்கள்; மாதாந்தம் ரூபா 2000/- அலவன்சாக வழங்கப்படும். வேறு படிகள் வழங்கப்படமாட்டா.

தகைமைகள்:

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை — 18 முதல் - 40 வருடம் வரை;
3. கல்வித் தகைமை;

(அ) கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (பழையது) 6 பாடங்களில் சித்தி (இரண்டு தடவைகளில்) இவற்றுள் தாய்மொழி/தமிழ் இலக்கியம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியும் அத்துடன் இரசாயனம், பௌதிகம், உயிரியல், விலங்கியல் தாவரவியல் இவற்றுள் ஏதாவது இரண்டு பாடங்களில் திறமைச்சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்:

(ஆ) க. பொ: த; (சாதாரண தர)ப் பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) 6 பாடங்களில் சித்தி (இரண்டு தடவைகளில்): இவற்றுள் தாய் மொழி / தமிழ் இலக்கியம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியும், இவற்றுடன் இரண்டு விஞ்ஞான பாடங்களிலும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்;

(இ) தேசிய கல்வித் தராதரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி. (இரு தடவைகளில்) இவற்றுள் தாய்மொழி / தமிழ் இலக்கியம், கணிதம் ஆகியவற்றுடன் இரண்டு விஞ்ஞானப் பாடங்களிலும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்:

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் சித்தி பெற்றோருக்கு அல்லது அதற்குக் கூடிய பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேற் குறிப்பிட்ட தகுதி உடையவர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தாமே தயாரித்து 15 09 1989 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கத்தக்கதாக இப் பணிமனைக்கு அனுப்பி வைக்கவும்;

டாக்டர். ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
59, விக்டோரியா வீதி,    யாழ்ப்பாணம்;
யாழ்ப்பாணம்;
(இ/3313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணை வளம்படுத்தி அதிக விளைவைத் தந்து பயிர்களைப் பாதுகாக்க, மண்ணிலுள்ள கறையான், எறும்பு, பூச்சிகளை அழிக்க
நீமியா இயற்கை உரம்
கமக்காரர்களுக்கும், வீட்டுத்தோட்டம் வைத்திருப்போர்களுக்கும் ஓர் வரப்பிரசாதம்.
500 கிரும் நிறையுள்ள பைக்கற் ஒன்றை ரூபா 5/-க்கு வாங்கி உபயோகித்து பயன் பெறுங்கள்;
வியாபாரிகளுக்கு விஷேட சழிவுண்டு;
மில்க்வைற், யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

02 - 09 - 1989 சனிக்கிழமை



" உறுதியானதும் நன்கு தீர்மானித்ததுமான முயற்சியைச் செய். நீ வெற்றியடைவாய்; முழு முயற்சி முழு வெற்றி "
— ஸ்ரீ சுவாமி சிவானந்தா
செப்ரம்பர் 8 ஆம் திகதி வரும் இவர் பிறந்த தினத்தை முன்னிட்டு இவர் எழிலுருவம் கொண்ட ஸ்ரிக்கர் பெற்றுக்கொள்ள மில்க்வைற் மேலுறையிலுள்ள திருக்குறள் 25 அனுப்பவும்;
மில்க்வைற், யாழ்ப்பாணம்

## போலிச் சாராய விற்பனை தடை செய்யப்பட்டது

### ரெலோ அறிக்கை

யாழ்ப்பாணம், செப்; 2
தமிழ் மக்களின் நலனைக் கெடுக்கும் எந்தவொரு அபாயகரமான நுகர் பொருளும் தமிழ் ஈழமண்ணில் தடை செய்யப்பட வேண்டியதொன்றாகும்; சசிப்பு உயிர் கொல்லி என்றும் அதைத் தடைசெய்ய வேண்டும் என்றும் போராட்டம் ஆரம்பித்த காலம் தொட்டு சகல விடுதலை இயக்கங்களும் சசிப்பு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது யாவரும் அறிந்ததே.

ஆனால் சிங்கள நாட்டின் ஏதோ ஒரு மூலையில் அரசாங்க வடிசாலை திணைக்களத்தின் லேபிளையே பாவித்து போலி ஆட்கொல்லிச் சாராயத்தை போத்தல்களில் அடைத்து விற்பனை செய்வதை தடை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் அவசியமும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்திற்கு இன்று ஏற்பட்டுள்ளது.

30-08-89 அன்று எம்முடைய அழைப்பிற்கிணங்கி எமது காரியாலயத்திற்குவந்து எம்மால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி விடயம் பற்றிய கூட்டத்தில் கலந்துகொண்ட உத்தரவு பெற்ற வியாபாரிகள் கூட மேற்படி போலிச் சாராயம் உடலுக்கு ஊறு விளைவிக்கக்கூடியதென்பதை ஐயம் திரிபுற ஒப்புக்கொண்டுள்ளனர்; எனவே இச்சாராய விற்பனையை தமிழ் ஈழ விடுதலை இயக்கமானது 8-9-89- இல் இருந்து தடைசெய்கிறது;

இவ்வாறு ரெலோ விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது; அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

இதை கள்ளத்தனமாக கொழும்பிலிருந்து கடத்தி வரும் வாகனச் சொந்தக்காரர்மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்; தேவைப்பட்டால் வாகனமும் பறிமுதல் செய்யப்படும்;

வியாபாரிகள் கொள்ளை லாபம் அடைவதற்காகவே, இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றனர்; இது மக்களை அழிக்கவல்லது. என்று தெரிந்தும் குறைந்த விலைக்கு இந்த உயிர் கொல்லியை வாங்கி கூடிய விலைக்கு விற்று இலாபமடைகின்றனர்.

சிலர் பீப்பாய்களில் கடத்தி வந்து போத்தல்களில் யாழ் நகரில் வைத்து அடைக்கின்றனர். இது தமிழ் இனத்திற்கு செய்யும் மிகப்பெரிய துரோகம் என இவர்கள் உணர மறுக்கிறார்கள்.

எனவே நாம் இயக்க ரீதியாக இவற்றை தடை செய்கிறோம். அரசாங்க வடிசாலையில் தயாரிக்கப்படும் சாராயம் தடை செய்யப்படமாட்டாது என்பதையும் குறிப்பிடுகிறோம்

இப்படி ரெலோ விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அனுதைப் பிள்ளைகளுக்கு இலவச சேமிப்பு

யாழ்ப்பாணம், செப் 2
தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய அனுதை இல்லத்தைச் சேர்ந்த பத்துச் சிறுவர் சிறுமியருக்கு சேமிப்புக் கணக்கு இலவசமாகத் தொடங்கப்பட்டது;

துர்க்கை அம்மன் ஆலயத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வங்கியின் கரும பீடத்திலேயே அவர்களுக்கு இலவசமாக சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது;

பிரதான கரும பீடத்தை, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார்;

பத்து அனுதைப் பிள்ளைகளுக்கும் தலா 100 ரூபா பெறுமதியுள்ள சேமிப்புக் கணக்கு தொடக்கி வைக்கப்பட்டது;

ஆலயக் கொடியேற்ற நாளான நேற்றே ஏராளமானவர்கள் கரும பீடத்தில் கூடியிருந்தனர்; (ஒ-3)

## உரும்பராய் பகுதி மக்களுக்கு
## சுன்னுகம் மக்கள் வங்கியில் நாலாயிரம் ரூபா நிவாரணம்

யாழ்ப்பாணம், பெப். 2
சுன்னுகம் மக்கள் வங்கிக் கிளையில் எதிர் வரும் ஆறும், ஏழாம் திகதிகளில் உற்பத்தி திறன் வாய்ந்த தொழில்முயற்சிக்கான நிவாரணப் பணம் ரூபா 4 ஆயிரம் வழங்கப்பட இருக்கிறது;

உரும்பராய் மேற்கைச் (J/139) சேர்ந்த 68 பேருக்கு ஆறும் திகதியும், உரும்பராய் கிழக்கைச் (J/138) சேர்ந்த 813 பேருக்கு ஏழாம் திகதியும் நிவாரணம்வழங்கப்படும்;

சம்பந்தப்பட்டவர்கள் தமது பகுதி கிராமசேவையாளரிடம் இருந்துதொடர் இலக்கங்களைப் பெற்றுக்கொண்டு குடும்பப் பதிவு அட்டையுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்; (ஒ-3)

## நேற்று நகைகள் மீளளிப்பு

யாழ்ப்பாணம், செப் 2
சுன்னுகம் மக்கள் வங்கிக் கிளையில அடகு வைக்கப்பட்ட 377 நகைகள் நேற்று உரியவர்களிடம் மீளளிக்கப்பட்டன;

இரண்டாவது தொகுதி நகைகள் திங்கட்கிழமையன்று மீளளிக்கப்படும் இது தொடர்பான கடிதங்கள் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது;

நேற்று தமது நகைகளை மீளப் பெறத் தவறியோருக்கு திங்களன்று அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது; (உ-3)

## வடக்கு, கிழக்குக்கு ஐ. நா. படையை அனுப்ப அரசு ஆலோசிக்கவில்லை!

கொழும்பு, செப்; 2
இந்திய அமைதிப்படை திரும்பிய பின்னர் வடக்கு-கிழக்குக்கு இலங்கை இராணுவம் அனுப்பி வைக்கப்படும்; அங்கு ஐ. நா: அமைதிப்படை அனுப்பப்படுவது பற்றி அரசு ஆலோசிக்கவில்லை;

ஜனுதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் நேற்று முன்தினம் செய்தியாளர் மத்தியில் முன்கண்டவாறு தெரிவித்தார்;

அவர் மேலும் சொன்னதாவது:-

அமைதிப்படை விலகல் திட்டமிட்டு செயல்படுவதற்கு முன்னேடியான ஆயத்த நடவடிக்கையாகவே 4 ஆயிரம் அமைதிப்படையினர் தாயகம் திரும்பியுள்ளனர்;

படை விலகலுக்கும் அதிகார பரவலாக்கலுக்கும் தொடர்பு இல்லை என்பதை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது.

சமாதானசபை அமைப்பும் பணிகள் குறித்தும் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை என்று திரு; வீரக்கோன் மேலும் சொன்னர்; (ஒ-எ)

## 20 ஆம் திகதிக்கு முன்னர்
## வீடு திருத்தும் கடனுக்கு விண்ணப்பிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், செப்; 2
கடந்த கால அசம்பவிதங்களின் போது பாதிப்படைந்த வீடுகளைத் திரும்ப அமைப்பதற்கும், திருத்துவதற்கும் நிதி உதவி மற்றும் கடனைப் பெறுவதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்பாக அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர்களிடம் சமர்ப்பிக்குமாறு அரசாங்க செயலகம் அறிவித்துள்ளது;

பாதிக்கப்பட்ட வீடுகளைத் திருத்தவும், புனரமைக்கவும் ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் நிதி உதவியும், கடனும் வழங்க புனர்வாழ்வு அமைச்சால் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது;

வீடுகளைத் திருத்தவும் புனரமைக்கவும் 700 ரூபாவுக்கு குறைந்த மாத வருமானம் உடையவர்களுக்கு15,000ரூபா நிதி உதவி வழங்கப்படும்:

700 ரூபாவுக்கும் 1500 ரூபாவுக்கும் இடைப்பட்ட வருமானம் உடையோருக்கு 15000 ரூபா நிதி உதவியும், 15,000 ரூபா கடன் வசதியும் செய்து கொடுக்கப்படும்;

1,500 ரூபாவுக்கு மேல் மாத வருமானம் உடையோர் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தில் பதினையாயிரம் ரூபாவுக்கு மேல் கடன் பெற விண்ணப்பிக்கலாம்; (அ 3)

## இளவரசி ஆன் - பிலிப்ஸ் திருமண வாழ்வு முறிந்தது!

லண்டன், செப் 2
பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத்தின் ஒரே மகள் இளவரசி ஆன் கணவர் மார்க் பிலிப்ஸை விட்டுப் பிரிந்து வாழப்போகிறார்கள் என்று பக்கிங்ஹாம் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன;

பதினைந்து வருடங்களுக்கு முன்னர் திருமணமான இருவருக்கும் இடையே சில ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே கருத்து வேறுபாடு நிலவி வந்தது என்றும் இப்போது இருவரும் பிரிந்து வாழத் தீர்மானித்து விட்டனர் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிப்பதாக பி.பி. சி; அறிவித்தது;

இளவரசி தம்பதிக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர்; (உ எ)

## ஒன்பது முகாம்களில் 3,260 பேர் தடுத்துவைப்பு

### ஜெனரல் சேபால ஆட்டிக்கல தகவல்

கொழும்பு, செப். 2
நாட்டின் தென் பகுதியில் ஒன்பது தடுப்பு முகாம்களில் 3 ஆயிரத்து 260 பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்;

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிக்கல நேற்று முன்தினம் செய்தியாளர் மத்தியில் இதனைத் தெரிவித்தார்;

அவர் மேலும் சொன்னதாவது;

ஜே வி.பி.யின் கட்டுப்பாட்டின் கீழ் நாட்டின் எந்தப் பிரதேசமும் இல்லை;

1987 ஜூலை மாதம் தொடக்கம் 146 சிப்பாய்களும் 225 பொலீஸாரும் கொல்லப்பட்டனர்;

பழிவாங்கும் கொலைகளில் ஆயுதப் படையினர் ஈடுபடவில்லை; பல குழுக்கள் இன்று செயல்பட்டு வருகின்றன; ஆகவே பழிவாங்கல் நடவடிக்கையில் படையினர் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டப்படுவது நியாயமானதல்ல;

எச்சரிக்கைக்குப் பயந்து ஆயுதப் படைகளில் இருந்து வீரர்கள் வெளியேறவில்லை; இதற்குப் பதிலாக ஒய்வு பெற்ற வீரர்கள் மீண்டும் படையில் சேர முன்வந்துள்ளனர்;

ஜே; வி; பி; யினரின் நடவடிக்கைகள் எப்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படும் என்பது குறித்து திகதி நிர்ணயம் செய்ய முடியாது;

— இப்படி ஜெனரல் ஆட்டிக்கல சொன்னர்; (உ-எ)

## மோட்டார் சைக்கிள் விபத்து! ஒருவர் பலி; மூவர் படுகாயம்

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேரும் படுகாயம் அடைந்தனர்; அவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார்;

இந்த விபத்துச் சம்பவம் கடந்த வியாழனன்று உரும்பிராய் - மருதனர்மடம் வீதியில் இடம்பெற்றது;

விபத்தில் படுகாயமடைந்த ஆர்; மதியாபரணம் (வயது 59) என்பவரே நேற்று யாழ்; ஆஸ்பத்திரியில் மரணமானுர்;

இவரது மரணம் தொடர்பான விசாரணைகள் நேற்று யாழ். பொலிஸ் பிரிவில் இடம் பெற்றன (உ-10)

## நேரு விருது அரபாத்திற்கு

புதுடில்லி, செப்; 2
ஜவஹர்லால் நேரு நல்லெண்ண விருது இவ்வாண்டு பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரான யாசிர் அரபாத்திற்கு வழங்கப்படவுள்ளது;

இத்தகவலை புதுடில்லி அரச வெளியிட்டது;

பாராட்டுப் பத்திரத்துடன் இந்தியப் பணத்தில் 15 லட்சம் ரூபாவும் அவருக்கு வழங்கப்படும்; (உ-எ)

## பேசும் சாதனையை தீரன் மீண்டும் முறியடித்தார்!

சென்னை, செப் 2
432 மணித்தியாலங்கள் தொடர்ந்து பேசி பேசும் சாதனையை திரு: தீரன் கடந்த வியாழக்கிழமை மீண்டும் முறியடித்தார்;

திரு; தீரன் மதுரையைச் சேர்ந்த பாடசாலைத் தலைமையாசிரியர்;

வி. ஜி; பி தங்கக்கடற்கரை உல்லாச விடுதியில் கடந்த ஆகஸ்ட் 13 ஆம் திகதி இடைவிடாது பேசும் சாதனையை ஆரம்பித்தார்;

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தலைப்பில் பேசினுர்;

கடந்த ஜூன் மாதம் 360 மணித்தியாலங்கள் தொடர்ந்துபேசிய திரு. எஸ்;இ. ஜெயராமன் நிகழ்த்திய சாதனையை அவர் முறியடித்தார்: [உஎ]

## பிஜியில் பிரேஞ்சுப் பிரதமர் இந்தியா கடும் ஆட்சேபம்!

புதுடில்லி, ஆக 31
பிஜி தீவுக்குப் பிரெஞ்சுப் பிரதமர் மிச்செல் ரொகார்ட் விஜயம் செய்ததற்கு இந்திய அரசு பலத்த கண்டனம் தெரிவித்திருக்கிறது;

ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசைக் கவிழ்த்த ராணுவத் தலைவர் கேர்னல் ரபுக்கா தலைமையிலான அரசுக்கு அங்கீகாரமளித்ததாக பிரெஞ்சுப் பிரதமரின் விஜயம் அமைந்திருக்கிறது என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங் சொன்னர்;

## பழைய மாணவர் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப் 1
காரைநகர் யாழ்நகர் கலாசாலையின் பழைய மாணவர் சங்க வருடாந்த கூட்டம் கல்லூரி மண்டபத்தில் நாளை காலை 9 மணிக்கு சங்கத் தலைவர் திரு: எஸ். ஜி சிவகுருநாதன் தலைமையில் நடைபெறும்: சிறப்பு விருந்தினராக கலாசாலை அதிபர் திரு; கே; கே. எஸ்; சேஞதிராசா கலந்து கொள்வார்; (க)

## எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து...

அதிருப்தி கொண்டுள்ளனர்;

அவர்களை எல்லாம் வளைத்துப் பிடித்து, அணி திரட்டி, அரசை நாடாளுமன்றத்தில் தோல்வியுறச் செய்ய எதிர்க்கட்சித் தலைவர்கள் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர்;

ஆளும் கட்சி எம். பிக்கள் ஐ; தே; கவிலிருந்து கட்சி மாறினுலும், தற்போதைய தேர்தல் சட்டங்களின் மூலம் உடனடியாக அவர்களை பதவியிலிருந்து அகற்றமுடியாது:

கட்சி மாறிய எம்; பியின் பதவியைப் பறிப்பதாயின் முதலில் அது தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைத்து விசாரணை நடத்த வேண்டும்;

அவ் விசாரணையின் முடிவில் அந்த எம். பி கட்சி மாறியது தவறுனது என நாடாளுமன்றத் தெரிவுக் குழு முடிவு செய்யவேண்டும்:

ஆனல் ஆளும் கட்சியைச் சேர்ந்த பதின்மூன்றிற்கும் அதிகமான எம். பிக்கள் கட்சி மாறிய பின்னர், அத்தகைய நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட்டால் அக்குழுவில் ஐ தே; கவுக்கு அதிகளவு பிரதிநிதித்துவம் கிடைக்க வாய்ப்பு இல்லாமல் போய் விடும்.

ஆகவே அத்தகைய சந்தர்ப்பத்தில் கட்சி மாறிய எம். பிகளை நாடாளுமன்ற தெரிவுக் குழு விசாரணைகள் மூலம் பதவியிழக்கச் செய்வது இயலாத காரியமாகிப்போகலாம்;

ஆனல் எம்; பிக்கள் கட்சி மாறி, ஐ தே; கட்சி அரசு கவிழ்ந்தாலும் ஜனுதிபதி பிரேமதாஸாவை பதவியில் இருந்து இறக்கமுடியாது;

அவர் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று ஜனுதிபதி ஆவார்: அவரைப் பதவியிலிருந்து நீக்குவதானுல் அது நாடாளுமன்றத்தில் நீண்டகால தொடர் நடவடிக்கையாகவே இருக்கமுடியும்;

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து ஐ; தே; க அரசு கவிழ்ந்தால் திரு; பிரேமதாஸானால் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைக்க முடியாது:

அரசமைப்புச் சட்டப்படி ஒரு நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட ஓராண்டுக் காலம் முடிவடைந்த பின்னரே அதனை ஜனுதிபதி கலைத்து, புதிய தேர்தலை நடத்த உத்தரவிடமுடியும்;

ஆகவே எதிர்க்கட்சிகள் அங்கம் வகிக்கும் கூட்டணி அரசு ஒன்றை நியமிக்கும் நிர்ப்பந்தம் ஜனுதிபதிக்கு இந்த நிலைமையில ஏற்படுகின்றது;

இந்த நிலையில் தேசிய அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் விடுத்துள்ள கோரிக்கை அரசியல் வட்டாரங்களில் அக்கறையை ஏற்படுத்தியுள்ளது:

தென்பகுதியில் அதிகரித்து வரும் கொலைகள் பழிவாங்கல் ஆகியவற்றின் மத்தியில் தேசிய அரசு ஒன்றைச் சகல கட்சிகளும் அமைக்கவேண்டும் என்ற நிலைக்கு ஆதரவு [illegible] (உ-எ)

## தெற்கு--
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது;

இதனிடையில் மதவாச்சி பொலீஸ் நிலைய அதிகாரியும் புதனிரவு சுட்டுக்கொலை செய்யப்பட்டார்;

மேலும் மதவாச்சி பிரபோததும பகுதியிலும் வர்த்தகர் ஒருவர், பௌத்தபிக்கு ஒருவர் உட்பட இளைஞர்கள் சிலரும் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் பத்துக்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப் பட்டதாகவும் அறியவந்தது: [அ-164]

## காணுமற்--
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நபரான வி, நித்தியானந்தன் என்பவர் விடுவிக்கப்பட்டுள்ளார்;

நேற்று முன்தினம் [31ஆம் திகதி] வெளியான உதயனில் காட்டிற்கு விறகு வெட்டச் சென்ற ஒருவர் சூட்டுக்கு இலக்காகி மரணமானுர் எனவும் மற்றும் மூவரைக் காணவில்லை எனவும் செய்தி வெளியானது தெரிந்ததே (ஒ92)

## நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு:
28-09-1922
●●●
உதிர்வு:
25-07-1989

### திருமதி யோகவதி அவர்கள்
(டாக்டர் நவரெத்தினத்தின் மனைவி)

உங்கள் அன்பான புன்சிரிப்பாலும் பண்பான பேச்சாலும் பணிவான நடத்தையாலும் எங்கள் இதயம் கவர்ந்த அன்பின் தெய்வமே, எங்கு சென்ருய்? காலமெல்லாம் எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பாயெனஇருந்தோம் காலன் உன்னைப் பறித்தானே! நீங்கள் எங்குசென்ருலும் நீங்கள்விட்டுச் சென்ற பாசம் எங்களை விட்டு எப்போதும் நீங்காது: எங்களை ஆருத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே உங்களை எக்கணமும் மறவோம்;

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

02-09-89 சனிக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் 03-09-89 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சொள்ளும்படி உற்ருர், உறவினர். நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்;

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர். பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

டாக்டர் சி நவரெத்தினம்
220, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (2015)

## மரண அறிவித்தல்

### செல்வி பொன்னம்பலம் வசந்தி

நயினுதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் வசந்தி 1- 9- 89 இல் காலமானுர்; இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் காமாட்சி தம்பதிகளின் புதல்வியும் சற்குணனந்தன் (சித்திராஸ் அரியாலை) சர்வானந்தன் (ஆசிரியர் யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தி யா/ சன்மார்க்க வித்தியாலயம்), சபானந்தன் [இத்தாலி], நித்தியானந்தன், சிவானந்தன், சாந்தினி [இத்தாலி], கேசவராணி [இத்தாலி], மாலினி, கமலராணி, செல்வராணி ஆகியோரின் அன்புச் தங்கையும் ஆவார் அன்னரது ஈமக்கிரிகைகள் 2- 9- 89 சனிக்கிழமை 4 மணிக்கு நயினுதீவில் நடைபெறும்;

தகவல்;
பொ. சற்குணனந்தன்.
(சித்திராஸ் அரியாலை)
(1916)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினுல் யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 202/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02-09-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.NOSEN NESON'S
Funeral Undertakers
● Caskets, Embalming, Funeral Coaches
No. 563, Hospital Road, Vembadi Junction, Jaffna.

சஞ்சீவி சஞ்சிகை

02 - 09 - 1989 சனிக்கிழமை

அந்தியகால சேவைக்கு
உங்கள் அருகிலேயே இருக்கும் அன்பன்!
"நேசன்ஸ்"
★ பிரேதப் பெட்டிகள் ★ ஊர்வல வாகனம்
★ மலர்வளையங்கள் ★ எம்பாமிங்.
நேசன்ஸ்
(வேம்படி சந்தி)
563, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## கருத்துக் கலசம்

மயூரா

### அழிவை நோக்கி...

கந்தசஷ்டி காலத்தில் உயிர்ப் பாதுகாப்பு வாரம் கொண்டாடப்பட வேண்டும் என ஒரு கோரிக்கை எழுந்துள்ளது.

உயிர்களைக் கொல்லக் கூடாது; அவற்றின் மீது கருணைகாட்ட வேண்டும்; இம்சை செய்யக் கூடாது என்று பல சமயங்கள் புத்தி புகட்டுகின்றன. உயிர்கள் எனப்படும் போது மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மரங்கள் என்று எல்லாமே அடங்குகின்றன. அற்ப பிராணிகள், நுண்ணுயிர்கள் என்பவற்றை இம்சை செய்வதைத் தானும், தவிர்க்கவேண்டும் என்பதே போதனை.

ஆனால் இந்தப் போதனை மனிதர்களால் நூற்றுக்கு ஒரு சதவீதமேனும் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பது கேள்விக்கு உரிய விவகாரம். மனிதர்களே மனிதர்களை இம்சைப்படுத்துகிறார்கள்; கொலை செய்கிறார்கள்; உடன் பிறப்புக்களே தமக்குள் அடிபட்டுச் சாவைத் தேடுகிறார்கள். அவ்வாறிருக்க நுண்ணுயிர்கள், மரங்கள், பிராணிகளை இம்சைப்படுத்தாது, மனிதன் கருணை காட்டுவான் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

தேசத்திற்குள் இனங்கள் மோதுவது, ஓர் இனத்துக்குள்ளேயே ஒன்பது கோஷ்டிகள் மோதுவது, நாட்டுக்கு நாடு மோதுவது என்று எங்கு பார்த்தாலும் மனிதன் சண்டை போட்டுக் கொள்கிறான்; வெறும் மோதல்கள் மட்டுமா நடக்கின்றன? கொலைகளே மலிந்துவிட்டன.

உலக வாழ்வின் முழு முதல் அம்சமான, அரியதாகக் கருதப்படும் உயிருக்கு உரிய மதிப்புத் தரப்படுவதில்லை; மகத்துவம் வழங்கப்படுவதில்லை. உயிரை எப்போதும் கொல்லலாம், எப்படியும் கொல்லலாம் என்ற நிலையையே மனிதன் நடைமுறையில் கடைப்பிடித்து வருகிறான்.

சொல்வது ஒன்று செய்வது வேறு; போதனை ஒன்று சாதனை நேர் எதிரானது; கொள்கை ஒன்று நடைமுறை முரணானது என்ற நிலைப்பாட்டையே அவன் கைக்கொள்கிறான்.

சமாதானம், அமைதி, என்று கூறிக் கொண்டே யுத்தங்கள் நடக்கின்றன. ஆயுதப் பரிகரணம் என்று மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டே நவீன உயிர்க்கொல்லி ஆயுதங்கள் உற்பத்தி செய்யப் படுகின்றன.

மனிதனுடைய இந்த முரண்பட்ட சுபாவத்தால், உள்ளொன்றும் புறத்தில் வேறானதுமான குணநிசயத்தால் உலகம் அழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

இவை மாறும் வரை உலகம் உய்ய முடியாது. ஆணவம், அகந்தை, அதிகாரம் ஆகியன மனித மனங்களில் இருந்து அறுக்கப்படும் வரை, அதர்மமே நீடிக்கும்; நிலைக்கும்.

அதர்மம் அளவுக்கு அதிகமாகி உலகை நரக லோகமாக்கும் போது, தர்மத்தை இயற்றப் பகவான் தோன்றுவான் ★

# வாசகன் கவிதையை அனுபவிக்க உரைகாரர் உதவி தேவைதானா?

தமிழில் ஒரு பழக்கம் பரவலாக இருக்கிறது.

சிலப்பதிகாரம் பற்றிப் பேசுபவர்கள், அதற்கு உரை எழுதப்பட்டிருப்பதையும் சேர்த்துப் பேசுகிறார்கள்.

இளங்கோவடிகள் எத்தனை முக்கியமோ, அவர் சொன்னது எத்தனை முக்கியமோ அத்தனை முக்கியம் அல்லது சிறப்பு வாய்ந்தது அடியார்க்கு நல்லார் சொன்னதும் என்று ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இதேபோலத் திருக்குறள் பற்றிப் பேசுபவர்கள் எல்லோருமே பரிமேலழகர் உரை, மணக்குடவர் உரை என்று வேறு பலர் எழுதிய உரைகளையும் சேர்த்து முக்கியத்துவம் தந்து பேசுகிறார்கள்,

பழைய கவிதையைக் கவிதையாக, கவி சொன்ன அளவில் நேர்முகமாக எதிர்கொள்ளும் பழக்கம் நமக்கு ஏற்படவில்லை.

சில சந்தர்ப்பங்களில் உரைகாரர்கள் மூலநூல் ஆசிரியர்களையும்விட முக்கியமானவர்களாக சிறப்பானவர்களாக இருக்கலாம்!

கவிதையை, மூலக் கவியின் சொற்களில் நேருக்கு நேர் எதிர்கொண்டு வாசித்து அனுபவிப்பது என்பதுதான் கவிதையின் ஒரு விசேஷ அனுபவமாக அமைகிறது.

இந்த அனுபவம் தமிழ்க் கவிதை அன்பர்களுக்கு ஏற்பட்டுவிடாதபடி உரைகாரர்களையும் சேர்த்துத்தான் படிக்க வேண்டும் என்கிற நியதியை ஏற்படுத்திவிட்டார்கள் - செய்துவிட்டார்கள்.

கவிக்கும், வாசகனுக்கும் இடையே உரைகாரர் ஒருவர் வந்துதான் ஆக வேண்டும் என்கிற கட்டாயம் ஏற்படுகிறதே. இது சரியா என்பது கேள்வி.

### உபத்திரவமாக இருக்கக் கூடாது

சில சமயம் உரைகாரர்களின் உதவியில்லாமல் மூலக் கவிதையைச் சரிவரப் புரிந்து கொள்ள இயலவில்லை என்பது உண்மையாகவே இருக்கலாம்.

பதங்கள், பிரயோகங்கள், வார்த்தைச் சேர்க்கைகள், அர்த்தம் காலத்தினால் மாறிப் போயிருக்கலாம்.

இங்கெல்லாம் நம் காலத்தவர்களுக்கு முந்தியவர்களான உரைகாரர்களின் உதவி தேவைப்படலாம்.

அது உதவியாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, உபத்திரவமாக இருக்கக் கூடாது.

ஆனால் கவிதை அனுபவம் எப்படி ஏற்படுகிறது? கவிதை உயிருள்ள கவிதையாக இருந்தால் - திருவள்ளுவர் பற்றியோ, இளங்கோ பற்றியோ சந்தேகத்துக்கிடமில்லையே. நேரடியாகவே வாசகனோடு பேசும்போதுதான் கவிதை அனுபவம் ஏற்படுகிறது.

சங்கக் கவிதைகளில் இன்று அர்த்தம் கண்டு கொள்வது கடினமாக இருக்கலாம்.

ஆனால் 'யாயும் யாயும் யாராகியரோ' என்றும், 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்றும் படிக்கும்போதே கவியுள்ளம் நேரடியாக வாசகர் உள்ளத்தை எட்டிவிடுகிறது.

இவ்வளவு சுலபமாகப் புரியாத, எட்டாத கவிதைகளுக்கு அரும்பத அகராதி தேடலாம்; உரைகாரர் உதவி அவசியம் ஆகியபோது நாடலாம்.

கீட்ஸ், (Truth is Beauty Beautyistruth) என்று சொல்கிற சற்றுச் சிரமமான சிந்தனையைக்கூட அதிகமாக உரையாசிரியர் உதவியில்லாமல்தானே படிக்கமுயலுகிறோம்!

### நாம் செய்த பிசகு

பக்தி இலக்கியம் போல மற்றத் தமிழ் இலக்கியங்கள் முக்கியமாகச் சங்கக் கவிதைகளில் சிறந்த கவிதைகள் கூடப் பொதுமக்களை எட்டாது போனதற்குக் காரணம் மூலக் கவிதையோடு சேர்த்து உரைகாரர்களையும் படிப்பதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது.

சங்ககாலம், இறந்தகாலம் என்று சொல்வது இலக்கியத்தின் நோக்கத்தையே மாசுபடுத்துவதாகும்.

கவிதை எழுந்தகாலம் எதுவும் இறந்தகாலம் அன்று!

கவிதை எட்டுகிற உள்ளங்களில் அது எப்போதுமே நிகழ்காலம்தான்; அதுதான் இலக்கியத்தின் ஆதாரசக்தி.

இதில் குறுக்கிட மூலக் கவிகளின் காலத்துக்கு அப்பாற்பட்ட, பிற்பட்ட, வேறு காலத்தைச் சேர்ந்த உரைகாரர்களைக் கூப்பிடுவதுதான் நாம் செய்த பிசகு என்று எனக்குத் தோன்றுகிறது.

'வளைந்தது வில்லு, விளைந்தது பூசல்' என்று சொல்கிற பக்திக் கவிதையைவிடக் கடினமானதல்ல சங்கக் கவிதைகள்.

மாணிக்கவாசகரைப் பாராயணம் பண்ணிவிடுகிறோம்; இரண்டாவது - கவிதையை விளக்க உரைகாரர்களைக் கூப்பிடுகிறோம்.

இரண்டுவிதத்திலும் கவிதை அனுபவம் மறைந்துபோய் விடுகிறது என்று நான் எண்ணுகிறேன்.

உரைகாரர்களை நான் குறைகூறவில்லை. மூலக் கவிதைகளை நேரடியாகப் படித்துப்பார்த்துக் கவிதை அனுபவத்தை நேரடியாகப் பெறுவதற்கு முனையாதது தான் வாசகர்களின் தவறு.

சமஸ்கிருதத்தில் சஹ்ருதயர்கள் என்று ஒரு கொள்கை சற்றேறக்குறைய ஒரு பத்து நூறாண்டுகளாக அமுலில் இருந்து வருகிறது.

### நல்ல வாசகர்கள்

கவி சிருஷ்டிப்பவன் போன்ற அளவுக்குக் கவிதை உள்ளம் உள்ளவர்களே நல்ல வாசகர்கள் என்ற கொள்கை மிகவும் சிறப்பானதாகப் படுகிறது. உரைகாரர்கள் கவியின் சஹ்ருதயர்களாகக் காட்சியளிக்கின்றார்கள். மற்ற வாசகர்களின் சஹ்ருதயத்துவம் பின்தள்ளிப் போய்விடுகிறது.

தமிழ்க் கவிதையை வாசகர்களே கவிகளின் சஹ்ருதயர்களாக இருந்து உடனடியாக, நேரடியாகக் கவியின் வார்த்தைகளை உள்வாங்கி, சிரமப்பட்டாலும் உணர்ந்து கொண்டு கவிதை அனுபவம்பெற முன்வரவேண்டும்.

அப்போதுதான் சங்கக் கவிதைகளும், சிலப்பதிகாரமும் மக்களிடையே நடமாடும் உயிருள்ள கவிதையாக இடம்பெறும் என்று எனக்குத் தோன்றுகிறது.

இலக்கியம், கவிதை என்று கலைத்துறை எதுவானாலும் நம்முடையதாவது நாம் கவியுள்ளத்தை நேரில் காணும் போதுதான். ★

- க. நா. சுப்பிரமணியம் -

# 12 வருட சூரிய மண்டலப் பயண முடிவில் அண்டவெளியில் பிரவேசித்த விண்கலம்!

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்......

20.8.1977 அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள கேப் கனவெரல் விண்வெளித்தளம். விஞ்ஞானிகள் குழுமி நிற்கின்றனர்.

டைட்டன் - சென்ரூர் ரொக்கட் வொயேஜர் - 2 விண்கலத்தை விண்ணுக்கு எடுத்துச் செல்கிறது.

வெளி உலக கிரகங்களான வியாழன், சனி ஆகியவற்றைப்பற்றி அறிந்து கொள்ளவே வொயேஜர் 2 அனுப்பப்படுகிறது. சாத்தியமானால் யுரேனஸ் நெப்டியூன் கிரகங்களுக்கும் வொயேஜர்-2 செல்லக் கூடும் என்று அப்போது விஞ்ஞானிகள் எண்ணினர்.

வொயேஜர் - 2 விண்கலம் நீண்டகாலத்துக்கு வான வெளியில் சஞ்சரித்து, பல புதிய தகவல்களை அனுப்புமா? என்பதை அன்று - 12 ஆண்டுகளுக்கு முன்னர் - கேப்கனவெரலில் அது ஏவப்படும் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் உறுதியாகச் சொல்லமுடியாத நிலையில் இருந்தனர்.

வொயேஜர் - 2 இன் பயணம் ஆரம்பத்திலேயே ஆட்டம் கண்டது. விண்ணுக்கு ஏவப்பட்ட சில நிமிடங்களில் அதன் கட்டுப்பாட்டு அறையில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டது.

எட்டு மாதங்களின் பின்னர் அதன் வானொலித் தகவல்களைப் பெறும் சாதனம் பழுதடைந்தது.

இதனால் பூமியில் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் சக்தியை வொயேஜர் - 2 இழக்கத் தொடங்கியது.

200க்கு அதிகமான விஞ்ஞானிகள் பொறியியலாளர்களும் ரிமோட் - கண்ட்ரோல் முறையினால் திருத்தங்களைச் செய்து இயங்க வைத்தனர்.

அதன் பின்னர் விண்கலம் தினமும் 12 முதல் 16 மணித்தியாலயங்களைப் பூமிக்கு அனுப்பிக் கொண்டிருந்தது.

### முதலில் வியாழன்

வியாழக் கிரகத்தை (ஜூபிடர்) 9 - 7 - 1979 இல் வொயேஜர் - 2 தாண்டிச் சென்றது.

சனிக்கிரகத்தை 25-8-1981 அன்று தாண்டிச் சென்றது.

யுரேனஸ் கிரகத்தை 24 - 1 - 1986 அன்று தாண்டிச் சென்றது.

சரியாக பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து (25 - 8 - 1989)- கடந்தவாரம் நெப்டியூன் கிரகத்தை வொயேஜர் - 2 தாண்டியது.

கிரகங்களைப் பார்வையிட்டு, படம் பிடித்து பூமிக் கிரகத்திற்கு அனுப்பிவைக்கும் கடைசிப் பணியாக வெயோஜர் - 2 விண்கலத்தின் நெப்டியூன் விஜயம் அமைந்தது.

உண்மையில் நெப்டியூன் விஜயத்தை வொயேஜர் - 2 கலம் கடந்த ஜூன் 5 ஆம் திகதி ஆரம்பித்தது.

அப்போது நெப்டியூனில் இருந்து பதினொரு கோடி 7 லட்சம் கிலோ மீற்றர் தூரத்தில் வொயேஜர் - 2 கலம் இருந்தது.

வொயேஜர் - 2 கலத்தின் நெப்டியூன் விஜயம் உத்தியோகபூர்வமாக வருகிற அக்டோபர் மாதம் 2 ஆம் திகதி தான் முடிவடைகிறது. அப்போது நெப்டியூனில் இருந்து 5 கோடி 60 லட்சம் கிலோ மீற்றர் தூரத்தில் வொயேஜர் - 2 சென்று கொண்டிருக்கும்.

வொயேஜர்-2 இல் இரண்டு அன்டெனுக்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஒன்று கிரகங்களின் வானொலி அலைகளை இழுத்தெடுக்கவும் மற்றது பூமியை நோக்கியும் அமைக்கப்பட்டுள்ளன.

சூரியனில் இருந்து 450 கோடி கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் நெப்டியூன் உள்ளது.

### கிரக உலா

நெப்டியூனின் அருகில் இருந்து வொயேஜர்-2 அனுப்பிய தகவல்கள் ஒளி வேகத்தில் பூமியை வந்தடைய நான்கு மணித்தியாலங்கள் எடுத்தன.

- தீபன்ராஜா -

தனது 'கிரக உலா' வின் போது வொயேஜர்-2, நெப்டியூன் கிரகத்தைச் சுற்றி வலம் வரும் ஆறு சந்திரன்களைக் கண்டு பிடித்தது.

ஆனால் நெப்டியூனுக்கு எட்டுச் சந்திரன்கள் இருப்பதாக வொயேஜர் திட்ட விஞ்ஞானிகளில் ஒருவரான டாக்டர் கரோலின் பொர்கோ கூறுகிறார்.

சந்திரன்களில் ஒன்றான ட்ரிரோன் (Triton) சூரியமண்டலத்தில் உள்ள மிகக் குளிர்ச்சி வாய்ந்த உபகிரகம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

விண்வெளியில் 'கிரக உலா'வை முடித்துக்கொண்டு எல்லையில்லாப் பயணத்தை வொயேஜர்-2 தொடர்கிறது.

பூமி மண்டலத்தில் இருந்து புறப்பட்ட வொயேஜர் - 2 சூரிய மண்டலத்தில் உள்ள வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன் ஆகிய கிரகங்களைச் சந்தித்து, எடுத்து அனுப்பிய அரிய படங்கள் விஞ்ஞானிகளின் தீவிர ஆராய்ச்சியில் தற்போது உள்ளன.

### தங்க 'டிஸ்க்'

சூரிய மண்டல விஜயம் முடிந்து அண்டப்பெருவெளியில் நீண்ட, முடிவில்லாத பயணத்தைத் தொடரும் வொயேஜர்-2 கலத்தின் வெளிப்பகுதி வளையம் தங்க முலாம் பூசப்பட்டு உள்ளது.

பூமியின் படங்களும் பூமியில் உள்ள மற்றும் தகவல்கள் ஒலிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட 'டிஸ்க்' ஆக அந்தத் தங்க வளையம் பொருத்தப் பட்டுள்ளது.

முடிவில்லாத பயணத்தைத் தொடரும் வொயேஜர் - 2 கலத்தை, அண்டப்பெருவெளியில் உள்ள கிரகங்களில் வாழும் வேற்று உயிரினங்கள் கண்டால், அவை அதை வைத்துப் பூமியை அறிந்து கொள்ள முடியும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

2015 ஆண்டுக்கு அப்பாலும் வொயேஜர்-2 இன் பயணம் தொடரலாம். சில வேளை கோடிக்கணக்கான ஆண்டுகளும் இப்பயணம் நீடிக்கப்படும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ★



## யானை வடிவத்தில் விநாயகர் போதிக்கும் உண்மை!

விநாயகப்பெருமான் ஏன் யானை வடிவத்தில் காட்சி அளிக்கிறார்?

யானை மிக உயர்வானது. யானைக்கு ஓர் இயல்பு உண்டு.

யாராவது யானை மீது ஏறி அமர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டால் ஒரே ஒரு வழிதான் உண்டு. அதன் மீது ஏறி உட்காரலாம்; இதைவிட்டால் வேறு வழியே கிடையாது.

வேறு வழியுண்டா? ஒரு யானையைக் கொண்டு வந்து இங்கு நிற்கவைத்து அதன் வயிற்றிலே ஓர் ஏணியைச் சாத்தி, அந்த ஏணியைப் பிடித்து மேலே ஏறி,... அந்த நேரம் பார்த்து யானை புறப்பட்டால் ஏறியவன் என்ன ஆவன்?

அப்படியென்றால்... யானை மீது ஏறி அமர வேண்டும் என்றால் என்னதான் வழி உண்டு?

யானையின் காலைப்பிடிக்க வேண்டும்; அப்போது யானை கொஞ்சம் வளைந்துகொடுக்கும்; அதன்மேல் நமது காலை வைத்து யானையின் மேல் ஏறி அமரலாம்.

அப்போது யானைக்கு என்ன இயல்பு...?

தன் பாதங்களைப் பிடிக்கின்றவன் யாரோ அவர்களைத் தனக்கு மேலாக தூக்கிவிடுவது யானைக்கு உள்ள இயல்பு அல்லவா...!

அதேபோல விநாயகப்பெருமானுடைய திருவடிகளை யார் பிடிக்கின்றார்களோ அவர்களை வாழ்க்கையில் தனக்கு மேலாகத் தூக்கிவிடுவான் என்பதை யாம் விநாயகனுடைய யானை வடிவத்தில் இருந்து தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகிறது.

— புலவர் கீரன்

(வருகிற திங்கட்கிழமை 4-9-89 விநாயகசதுர்த்தியை இந்துக்கள் கொண்டாடுகின்றார்கள்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்கோதை வழங்கிய தண்டனை!

சஞ்சீவி சிறுகதை

சரியாக ஒன்பது மணி.

நீதிபதி ரொஸ்மண்ட் தனது விசேட செந்நிற உடையில், வெள்ளைத் தொப்பியுடன் ஆசனத்திற்கு வர எல்லோரும் எழுந்து மரியாதை செலுத்தினார்கள்.

ஒரு ஊசி விழுந்தால் கூட அனைவரும் திரும்பிப்பார்க்கும் அளவுக்கு 'கோர்ட்' நிசப்தமாக இருந்தது.

மலேசியரின் அதுவும் தனிநபரின் சொந்தப்பிரச்சினை என்பதால் 'கலரியில்' அவ்வளவு கூட்டமில்லை.

தேவபிரானின் சில நண்பர்களும், ஒரு சில பத்திரிகை நிருபர்களும் அடுத்ததாக விசாரிக்கப்படும் வழக்கிற்குரிய சாட்சிகளும் உறவினர்களும் அமர்ந்திருந்தனர்.

கோர்ட் குமாஸ்தா, தேவபிரானை முதலில் அழைத்தார். இவர்தான் வழக்காளி. இதுவொரு பொலீஸ் வழக்கு: என்ன உண்மையில் நடந்ததென கோர்ட் அறிய விரும்புகிறதென்று தேவனிடம் கேட்கப்பட்டது.

'கனம்...கோர்ட்டார் அவர்களே! நானொரு மலேசியப் பிரஜை. இந்த நாட்டிற்கு வந்து ஆறுமாதமாகிறது: அதோ அந்த குற்றவாளிக் கூண்டில் நிற்கிறாரே வயதான பெரிய மனிதர் அவருடைய பலசரக்குக்கடையில் காஷியராகவும் சாமான்கள் மொத்தமாக வரும்போது மூட்டாளாகவும் வேலை செய்கிறேன். வாரத்தில் மூன்று நாள் திங்கள் வியாழன் வெள்ளியில் பள்ளிக்கூடம் போகிறேன்.

'உனக்குப் போன ஞாயிற்றுக்கிழமை என்ன நடந்ததென்று சுருக்கமாகச் சொல்லு...'

இவனுக்காக ஆஜரான அரசாங்க வக்கீல் பொறுமையிழந்து இரைந்தார்.

'வழமைபோல் கடை பூட்டியிருந்தது... ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் தான் சில்லறைச் சாமான்களை எண்ணுவதும் கணக்குப் பார்ப்பதும் நிரப்புவதும் போன்ற அலுவல்களைச் செய்வோம் அன்றுதான் வழமையாக எனக்குச் சம்பளம் தருவார் அந்தப் பெரியவர்! அன்றும் எனக்குச் சம்பளம் தந்திருந்தார். நான் எண்ணிப்பார்த்தபோது ஒரு நாள் சம்பளம் குறைந்திருந்தது...! வழமையாக அவர்களுடைய குசினிக்குள் தான் நாமெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து டீ குடிப்போம். அதோ அந்தப் பெரியவர் அருகில் நிற்கிறாரே அவர் மனைவி பூங்கோதை இந்த வழக்கின் முதலாவது எதிரி'

இப்போது எதிரி சார்பில் ஆஜரான வக்கீல் அன்டர்சன் குறுக்கிட்டு அந்தப்பதத்தை இவர் உபயோகிக்கக்கூடாதென்று ஆட்சேபிக்கிறார்' ஆட்சேபனை எடுபடுகிறது: நீதிபதி தேவனை எச்சரிக்கிறார்...

'மன்னிக்க வேண்டும் ஐயா மூவருக்கும் அவர்தான் தேநீர் தயாரித்துப் பரிமாறுவார். அன்று நான் தேநீருக்காகக் காத்திருக்கும் போது எனது சம்பளவெட்டைப்பற்றி விளக்கம் கேட்டேன். அது தர்க்கமாக மாறவே பெரியவர் என்னைக் கையோங்கி கன்னத்திலடித்துவிட்டார்'

கண்களைத் துடைப்பது போல் கண்களைக் கசக்கிக் கொண்டே கடைக்கண்ணால் நீதிபதியைப் பார்த்துக் கொண்டு பாசாங்கு செய்தான்.

ஏன் ஐயா இதற்குப்போய் என்னை அடிக்கிறீர்கள்?... என்று... அவர் கைகளைப் பிடித்துக் கொண்டே கேட்டேன். அவர் மனைவி நான் அவரை அடிக்க முயல்கிறேனென்று நினைத்திருக்கவேண்டும், உடனே அடுப்பில் தேநீருக்காக கொதிக்க வைத்துக் கொண்டிருந்த பாலை எடுத்து என் முகத்திலும் நெஞ்சிலும் வீசி விட்டாள். நான் துடிதுடித்துக் கீழே வீழ்ந்து விட்டேன். பின்பு வேதனையில் நான் மயங்கி விட்டேன். பின் நான் விழித்துப் பார்க்கும்போது அம்புலன்ஸில் ஆஸ்பத்திரிக்குப் போய்க் கொண்டிருக்கின்றேன் - என்று சொன்னபோது உண்மையில் கண்கள் கலங்கியது இப்போது.

வாட்டசாட்டமான உயரமான இளைஞன் மேலாடையை கழற்றச்சொல்லி சுடுகாயத்தை அவதானமாகப் பார்க்கிறார் நீதிபதி. ஏதோ எழுதிக்கொள்கிறார்.

தலைமைக்குமாஸ்தா ரூலோ மீண்டும் இவ் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள முதலாம் எதிரி மிஸஸ் பூ...ங்... கோதை உன்னிக்கிருஷ்ணன் (பெயரை ஒழுங்காக உச்சரிக்க முடியாமல் விழுங்க) பூங்கோதையை கூட்டுக்குள் ஏறும்படி உன்னிக்கிருஷ்ணன் சைகை காட்டினார்.

வயசு இருபத்தியெட்டு. பார்த்தால் பட்டிக்காட்டுத்தனமும் கண்களில் கள்ளமோ கபடமோ இல்லாத குழந்தைத்தனம் - பயத்தால் மருண்டு வெருண்டுபோய் நின்றாள்.

...ஸ்பானிஷ் ... மொழி... தெரியுமா...?' பேசாமல் திருதிரு என முழித்தாள்... '...உனக்கு ஆங்கிலம் பேச வருமா?' - அப்போதும் பேசாமல் நின்றாள்.

உன்னிக்கிருஷ்ணன் 'இவளுக்கு இவளுடைய பாஷையைத்தவிர வேறொன்றும் தெரியாது' — என்றார்.

தலைமைக்குமாஸ்தா நீதிபதியின் காதுக்குள் ஏதோ சொல்லிவிட்டு, கோர்ட் பியோனை அனுப்பினார். பியோன் குந்தவையை அழைத்து வந்தான். 'இவள் தான் இந்தக் கோர்ட்டின் மொழிபெயர்ப்பாளர்!'

பூங்கோதையின் இருபத்தியெட்டு வருட வாழ்க்கையில் இதுதான் முதல் அனுபவம்: இப்படி 'பொலீஸ் கோர்ட்' என்று தன் பாஷையிலேயே ஒழுங்காகப் பேசுவதற்கு தடுமாறினாள். குந்தவை மிக யதார்த்தமாக மொழி பெயர்த்தாள்.

உன்னிக்கிருஷ்ணன் இருபது வருடத்திற்கு முன்பு இதே பலசரக்குக்கடையிலும் முதலாளியின் வீட்டிலும் 'எடுபிடியாக' வேலைசெய்வதற்காக உபேந்திராவினால் கூட்டிவரப்பட்டவர்.

சொந்தக்கிராமத்தில் அன்றாட சாப்பாட்டுக்கு வழி தெரியாமல் இருந்த வேளையில் இப்படியொரு வெளிநாட்டுப்பயணமும் வேலை வாய்ப்பும் அதிர்ஷ்டமாக்கப் பட்டது.

-நாற்பது வயசுவரை உன்னிக்கிருஷ்ணன் இவருடன் மாரடித்துவிட்டார்.

உபேந்திராவுக்குப் பிள்ளைகள் இல்லை. கணவன் மனைவி இறந்துபோக உன்னிக்கிருஷ்ணன் தனித்துப் போனார்.

வெளிநாட்டுக்கு வந்த இருபது வருடத்தில் முதன்முதலாக ஊருக்குப் போனார். அங்கு நின்ற ஆறுகிழமையில் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த பட்டிக்காட்டு பூங்கோதையைக் கல்யாணம் பண்ணிக்கொண்டார்: இருபத்திரண்டு வயது வித்தியாசம் இருவருக்கும்.

-கையோடு வெளிநாட்டுக்கு வந்து இந்த இரண்டு வருஷமாக குடித்தனம் நடத்துகிறார்.

அவளுடைய வறுமை, பட்டிக்காட்டுத்தனம், தன்னுடைய வெளிநாட்டு செல்வாக்கு என்பதால் தான் ஏழையென்றாலும் கட்டழகான இளம் பூங்கோதையை கல்யாணம் கட்டினாலும்-மிகவும் அன்பாக, மனசார நேசித்தார்.

வெளிநாட்டுக்கு வந்து ஒன்பது மாதத்தில் சந்திரபோஸும் இப்போது அடுத்த பத்துமாதத்தில் சகுந்தலையும் பிறந்திருக்கிறாள்.

தேவகுமாரன் இங்கு படிக்கவென்றுதான் வந்தான். இங்கு வந்தபின்புதான் 'வெளிநாடு' என்பது அப்படியொன்றும் சொர்க்கபுரி இல்லை என்றும் புரிந்தது.

புதிய பொருளாதார கலாசார சூழ்நிலை, தனிமை, வெறுமை. சொந்தக்காலிலேயே நிற்கவேண்டிய நிர்ப்பந்தம், ஊரைவிட பணத்தின் தேவை. அவசியம்—போலிகௌரவங்களும், எஜமான் — கூலி முறை குறைந்த நாடு:

யார் வேண்டுமானாலும் என்னவேலையும் செய்கிறதிறன்! தொழிலை இழிவாகப் பார்க்காத உயர்ந்த மனப்பான்மை! பணம் தேவைப்பட்டால் என்ன தொழிலும் செய்து சம்பாதிக்கக்கூடிய வாய்ப்பு!

ஆரம்பத்தில் உன்னிக்கிருஷ்ணன் செய்த வேலைகள் அனைத்தையும் இப்போது இந்த ஆறுமாதமாக தேவன் செய்தான்.

ஆனால் இவர் உபேந்திரா மாதிரி மோசமான எஜமான் அல்ல: மகனே மகனே என்று அவனோடு ஒத்தாசையாக வேலைசெய்வார். சம்பளத்தை ஒழுங்காகக் கொடுத்துவிடுவார். இங்கேயே அடிக்கடி சாப்பிடச் சொல்வார்.

இவனை நம்பி அடிக்கடி வெளியில் வேறு வேறு வேலைகளுக்கும் ஊருக்குப்போவார்.

கடைக்கு மேலேயே வீடு. ஆனால் குசினியும், பாத்ரூமும் கடையோடு சேர்ந்து கீழே தானிருக்கிறது.

இங்கு வேலைக்குச்சேர்ந்த இரண்டுகிழமையிலேயே பூங்கோதைக்கும் இவருக்குமிடையில் உள்ள வயசு வித்தியாசத்தைஅறிந்துகொண்டான்: வந்தவுடன் இவருடைய அழகான இளம்மகள் என்றுதான் நினைத்தான்.

அப்பவே மனசில் சலனம் ஏற்பட்டுவிட்டது! உண்மை தெரியாமல் ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணை ஏமாற்றிக் கொண்டுவந்து விட்டாரோ? என்று மனசுக்குள் தப்பாகக் கணக்குப்போட்டான்.

உன்னிக்கிருஷ்ணன் இல்லாதபோதும் அவர் கவனிக்காதபோதும் இன்வ ஜாடை காட்டுவதும், பார்ப்பதும், சீண்டுவதும் தரக்குறைவாக வம்பு பேசுவதும்- பூங்கோதை வளர்ந்தவிதம், வளர்க்கப்பட்டவிதம் இவை எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டாள்.

இவரிடம் சொன்னால் பெரிய தகராறில் - பொலீஸ்-கோடு என்று முடிந்துவிடுமோ என்ற பயம்வேறு அவளுக்கு.

அவளுடைய 'பொறுமை'- 'சகிப்புத்தன்மை' - 'பயம்' எல்லாவற்றையும் தனக்குச் சாதகமாக நினைத்துக் கொண்டான்.

வாய்ப்பேச்சு முடிந்து அங்க சேஷ்டைக்கு கைகள் முன்னேறியது:

அவள் குசினியில் தனிமையில் நின்று சமைக்கும்போதும் டீ போடும்போதும், கையைத் தொடுவான்: தலையைத் தொடுவான்: 'அழகான நீண்ட கூந்தல்' என்று வர்ணிப்பான்.

பூங்கோதை புருஷனை மனசார நேசிக்கிறாள். நன்றிக்கடனாய் இருக்கிறாள்.

இவரால்தானே தனக்கு இப்படியொரு வாழ்க்கை கிடைத்ததென்றும் வீட்டிலும் இரண்டு தங்கைகளுக்குக் கல்யாணம் கட்டி தம்பியைப் படிக்க வைக்கக் கூடியதாகவும், அன்றாடம் சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்ட அப்பா, அம்மா இப்போது வயிறார சாப்பிடுகிறார்கள், இவரால் இரண்டு பிள்ளைகளும் பிறந்துவிட்டன. இப்போது மூன்றாவது? வேறு என்ன வேண்டும்?

ஆரம்பத்திலிருந்தே தேவபிரான் பார்த்தவிதம் பழகியவிதம் 'இனந்தெரியாத வெறுப்பு' உண்டாக்கியிருந்தது:

★ ★ ★

அன்று உன்னிக்கிருஷ்ணன் மேலே தூங்கிக் கொண்டிருந்தார். ஞாயிற்றுக்கிழமை கடை பூட்டியிருந்தது. வழமைபோல் இவன் வேலை செய்துகொண்டு கடைக்கண்ணால் 'எப்போது அவள் குசினிக்குள் வருவாள்? என்று நோட்டம் விட்டுக்கொண்டிருந்தான்.

மாலை மூன்றரை மணி.

பிள்ளைக்கு பால் காய்ச்சவும் இவர்களுக்கு 'டீ' போடவும் பயந்து பதுங்கி ஓசைபடாமல் வந்தாள். ஆனாலும் கையில் வளையல் சத்தம், காலின் மெட்டிச் சத்தம் காட்டிக் கொடுத்தது: தலையில் குளித்து முழுகிப் பொட்டும் பூவுடன் பட்டுச்சேலையில் தலையுலர்ந்த கோலத்தில் தேவதை மாதிரி இருந்தாள். கையில் குழந்தை வேறு.

குக்கரில் பால் கொதித்தது: பதுங்கிப் பதுங்கிப்போய் அவள் திரும்புவதற்குள் பின்புறத்தில் நின்று இரண்டு கரங்களாலும் அவளை அணைத்தான்.

நெருப்புச் சுட்டதுபோல் துடித்துத் திரும்பினாள். கையிலிருந்த குழந்தைகூட கீழே கைதவறி விழப் பார்த்தது. தேவன் இன்னும் முயற்சி செய்தான்.

சாதுமிரண்டது: பொங்கி எழுந்தாள்: கொதித்துக் கொண்டிருந்த பாலை எடுத்த வேகத்திலேயே அவன் மீது எற்றினாள்:

'ஐ... யோ... ஐ...யோ......' என்று புழுப்போல் துடித்து சுருண்டு அவள் காலடியில் வீழ்ந்தான்.

மதுரையை எரித்த கண்ணகிபோல் பூரித்து நின்றாள். குழந்தை வீரிட்டுக் கத்தியது.

சத்தத்தைக் கேட்டு உன்னிக்கிருஷ்ணன் துடிச்சுப் பதைத்து ஓடி வந்தார்.

நடந்ததைத் தெரிந்து கொண்டார்.

அம்புலன்ஸுக்கு 'போன்' பண்ணினார், தொடர்ந்து பொலிசும் வந்தது.

★ ★ ★

அடுத்துக் கோர்ட் முதலியார் உன்னிக்கிருஷ்ணனை அழைத்தார். தலையைத் தாழ்த்தி, கரம்கூப்பி பண்பாட்டின்படி வணங்கி குற்றவாளிக்கூண்டில் ஏறினார்.

'ஐயா... என் வயசையும் உடம்பையும் பாருங்கள்; மல்லுக் கட்டுகிற வயசா இது...? என் சொந்த மகன்மாதிரி நேசிச்சேன். இப்படிப்பண்ணி விட்டானே...' அதற்குமேல் அவரால் பேசமுடியவில்லை. நா தழுதழுத்தது: கண்கள் கலங்கியது:

கோர்ட் அத்துடன் கலைந்தது:

★ ★ ★

தீர்ப்புக்காக நீதிமன்றம் மீண்டும் கூடியது.

தேவனைப் பார்த்து நீ ஏதும் சொல்லப் போகிறாயா......? என்று கேட்டார் நீதிபதி,

இவனுக்காக ஆஜரான வக்கீல் இவன் காதுக்குள் என்னமோ சொல்லிவிட்டு 'இல்லை' என்றார்.

நீதிபதி இவனைப் பார்த்து தீர்ப்பை வாசிக்கத் தொடங்கினார். பூங்கோதை மருண்டு போய் மெதுவாக அழுதாள். குந்தவை நம்பிக்கையோடு இருந்தாள்.

'இந்த நாட்டில் நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது: அதுமாதிரி கற்றுக்கொள்ளக் கூடாததென்றும் கொஞ்சம் இருக்கிறது. உங்களிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டியதும் நிறையவிருக்கிறது அதிலொன்று 'ஒருவனுக்கு ஒருத்தி' என்று வாழ்க்கை பூராவும் வாழ்கிற உங்கள் கலாசாரத்தினதும் பண்பாட்டினதும் தாம்பத்தியத்தினதும் புனிதத் தன்மை:

அதனை வேறொரு மண்ணில் நீங்களே கெடுக்கக்கூடாது: நாலு பேர் சிரிக்க வைக்கக் கூடாது: அவள் தன் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள எடுத்த 'தற்காப்பு நடவடிக்கை' என மன்னித்து உம்முடைய தவறுக்கு அவள் வழங்கிய தண்டனையேபோதுமென்று விடுதலை செய்கிறேன்.


அத்துடன் நீர் அவர்களது கடைப்பக்கமோ வீட்டுப்பக்கமோ போகவேண்டாமென எச்சரிக்கிறேன்'

கோர்ட் கலைந்தது:

தேவன் சாட்டையால் அடித்ததுபோல் வெட்கி நின்றான் ★

(யாவும் கற்பனை)

- ரமணீ சிர்மாறன் -



# உடலில் பதுங்கியிருந்து தாக்கும் புற்றுநோய் வராமலிருக்க என்ன செய்ய வேண்டும்?

- டாக்டர் எஸ். எஸ். வெங்கடராமன் -

(புற்றுநோய்ச் சிகிச்சை நிபுணர் - தமிழ்நாடு)

புற்றுநோய் என்று சொன்ன அளவிலேயே அந்நோய் கண்டவர்கள் இறந்துவிடுவார்கள் என்ற அச்சந்தான் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் தோன்றும்.

புற்றுநோய் என்றால் என்ன? உயிரைப்பறிக்கும் அளவிற்கு அவ்வளவு கொடிய நோயா? அவ்வாறு என்றால் அது ஏன்? இதற்கு ஒன்றுமே செய்ய முடியாதா? வந்திருப்பது புற்றுநோயாக இருக்கலாம் என்ற சந்தேகத்துடன் மருத்துவரை அணுகிச் சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் கேட்கும் கேள்விகள் தாம் இவை.

**புற்றுநோய் என்றால் என்ன?**

இயற்கையில் நம்முடைய உடலில் செல்கள் (உயிரணுக்கள்) பெருகிக்கொண்டேயிருக்கும்.

அனால், இவ்வாறு பெருகும் செல்கள் அளவோடு கட்டுப்படுத்தப்படுகின்றன,

உதாரணத்திற்கு உடலில் தோன்றும் ஒரு புண் எவ்வாறு ஆறுகிறது என்பதைக் கூறலாம். புண் நன்றாக ஆறியவுடன் புண்ணை ஆற்றுகின்ற தன்மை முற்றுப்பெற்று விடுகிறது.

புற்றுநோய் என்றால் உடலில் செல்கள் அளவு கடந்து பெருகுவதாகும். இவ்வாறு பெருகும் செல்கள் பின்னர் சுரப்பிகள் கல்லீரல், நுரையீரல் போன்ற முக்கிய உறுப்புகளுக்கும் பரவி, முடிவில் அவற்றிலுள்ள திசுக்களைத் தாக்கி, சாவில் போய் முடிகிறது.

**ஏன் உண்டாகிறது?**

இது கர்மவினையால் வரும் நோயல்ல. புகைபிடித்தல், புகையிலை மெல்லுதல், மது அருந்துதல், தவிர மிதமிஞ்சிய ஆடம்பர உணவுகள், ஊட்டச்சத்து குறைந்த உணவு, பால்வினை மோகம் மற்றும் சுகாதாரமின்மை போன்ற விவேகமற்ற செயல்களால் வலிய வரவழைத்துக் கொள்ளப்படும் நோய்.

**தொற்று நோயா? அல்லது பரம்பரை நோயா?**

இது ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவும் நோயல்ல. பொதுவாக இது பரம்பரையில் வருவதல்ல.

சில முலைப் புற்றுநோய்களும், பெருங்குடல் புற்றுநோய் போன்றவை மட்டுமே பரம்பரையாக வரக் கூடியவை.

**திடீரென்று தோன்றுவதா?**

இல்லை, இயல்பான செல்கள் புற்றுநோய்ச் செல்களாக மாறும் தன்மைக்குப் பல ஆண்டுகள் ஆகும். இத் தன்மையைத் தடுக்கவும், மாற்றவும் முடியும். இது புற்றுநோயின் ஆரம்பகாலமாகும்.

இந்த ஆரம்பக் காலத்தில் புற்றுநோய் கண்டுபிடிக்கப்... மருத்துவப் பரிசோதனைமூலம் கண்டுபிடித்து நூறு சதவீதம் நோயைக் குணப்படுத்தி விட முடியும்.

புற்று நோயின் மிகப்பெரிய ஆபத்து என்னவென்றால் அது உடலில் பதுங்கியிருந்து உடலைத் துன்புறுத்தாமல் அடியெடுத்து வைக்கிறது:

உடலில் வலி தோன்றினால் புற்றுநோயின் அடையாளம் அல்ல; அது புற்றுநோய் முற்றிவிட்டதற்கான அடையாளம்.

புற்றுநோயைத் தோற்கடிக்க அதைத் தடுப்பதும் ஆரம்பகாலத்திலேயே கண்டுபிடித்து விடுவதும் மட்டுமே சிறந்த வழியாகும்.

நோய் இருக்கிறதா என்று சோதனை செய்து பார்ப்பதால் ஆரம்பகாலப் புற்றுநோயையும், நோய்வரக் கூடிய நிலையையும் கண்டுபிடிக்க முடிகிறது. எனவே 100 சதவீதம் குணப்படுத்தவும் முடியும்.

**நோயின் அறிகுறிகள்:**

1. ஆறாத புண்.

2. உடலில் இயற்கைத் துவாரங்களில் (வாய், மூக்கு, மலவாய், பிறப்புக்குழாய்) இயல்புக்கு மாறாக இரத்தப் போக்கு அல்லது கசிவு இருத்தல்.

3. முலைகளிலோ அல்லது உடலின் வேறு பாகத்திலோ சதை தடித்திருத்தல் அல்லது உருண்டையாகத் தென்படுதல்.

4. அஜீரணம் அல்லது உணவை விழுங்குவதில் இடர்ப்பாடு.

5. சிறுநீர், மலசலம் கழிக்கும் இயல்பில் மாற்றம்.

6. மறு மச்சம் போன்று உடலில் காணப்படுபவைகளில் வெளிப்படையாகத் தெரியும் மாற்றங்கள்.

7. பல நாட்கள் உள்ள இருமலும் குரலில் கரகரப்பும்.

8. காரணம் சொல்ல இயலாத வகையில் உடலின் எடை குறைவு அல்லது சோர்வு, குறிப்பாக வயது முதிர்ந்தவர்களிடம் இந்த மாற்றம். ★

## தோல் புற்று நோய் வராமல் இருக்க உதவும் சைவ உணவுகள்

கரட் போன்ற காய்கறிகளில் அடங்கியுள்ள இயற்கைப் பொருளானது தோல் புற்றுநோயைத் தடுக்க உதவுவதாக இருக்கலாம் என்று ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்:

பீட்டா - கரோட்டின் என்னும் அப்பொருளை உடலானது ஒருவகை விட்டமின் 'ஏ' ஆக மாற்றுகிறது.

பல்வேறு புற்றுநோய்கள் வராமல் இந்த விட்டமின் காப்பாற்றுகிறது என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்:

சிட்னி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ரொபர்ட் பேக்கர், சிட்னியில் நடந்த ஒரு மாநாட்டில் இதைத் தெரிவித்தார்.

டாக்டர் பேக்கர் சக ஆராய்ச்சியாளர் டாக்டர் எச். ஸ்டைனெல் ஆகிய இருவரும் ஆராய்ச்சிக்கூட சுண்டெலிகளுக்கு பீட்டா-கரோட்டினைக் கொடுத்துப் பார்த்தனர்.

அச்சுண்டெலிகளில் சிலவற்றுக்கே தோலில் புற்றுநோய்க்கான கட்டிகள் காணப்பட்டன.

ஈரலிலும் பீட்டா- கரோட்டின் காணப்படுகிறது. இது அப்பொருளை விட்டமினாக மாற்றுகிறது. மற்ற விட்டமின்களை நிறையச் சாப்பிட்டால் தீங்கு விளையலாம்: ஆனால், மேற்கூறிய வைட்டமின் விஷயத்தில் அப்படி ஏற்படுவதில்லை.

பீட்டா - கரோட்டின் தோலில் கட்டிகள் ஏற்படாமல் தடுக்கிற 'இயற்கையான காப்புப் பொருளாக, விளங்குவதாகத் தோன்றுகிறது என்று டாக்டர் பேக்கர் சொன்னார்.

எனினும் தோல் புற்றுநோய் ஏற்பட்டுவிட்டால் அதைத் தடுக்கவோ குறைக்கவோ பீட்டா - கரோட்டின் உதவவில்லை என்றார் அவர்.

சைவ உணவு சாப்பிடுகிறவர்களிடையே தோல் புற்றுநோய் விகிதம் மிகக் குறைவு என்று சுட்டிக்காட்டிய அவர் இதற்கு பீட்டா - கரோட்டின் காரணமாக இருக்கலாம் என்றார். ★

வைத்திய சஞ்சீவி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தொலைபேசித்துறை வளர்ச்சியில் அமெரிக்கா செய்யும் புதுமை!

டெலிபோவில் மணி அடிக்கிறது:

வீட்டில் ஓய்வாக அமர்ந்திருக்கும் பிரமுகர் தனக்கு அருகில் உள்ள டெலிபோனை எடுத்துப் பேசத் தயங்குகிறார்.

ஒருவேளை அது கல்லூரியில் இடம்பெற சிபாரிசு செய்யுமாறு கோருகிற மிக தூரத்து உறவினராக இருக்கக்கூடும். எனவேதான் தயக்கம்.

டெலிபோன் செய்வது யாராக இருக்கும்? அவருக்குக் குழப்பம்.

ஒரு கல்லூரி மாணவியின் வீட்டில் டெலிபோன் மணி அடிக்கிறது. டெலிபோனை எடுத்ததும் ஒரு குரல் அவளது அழகை வருணிக்க முற்படுகிறது.

அக்கயவன் எங்கிருந்து பேசுகிறான் என்பது தெரிந்தால் அடிக்கடி இவ்விதம் தொந்தரவு செய்யும் அக்கயவனைப் பிடித்துவிட முடியும்.

டெலிபோன் மணி அடிக்க ஆரம்பித்ததும், அதாவது ரிசீவரை எடுப்பதற்கு முன்னரே அந்த டெலிபோன் அழைப்பு எங்கிருந்து வருகிறது என்பதை அறிந்து கொள்ள முடியுமானால் அது பலவகைகளிலும் வசதியாக இருக்கும்.

அவ்வித வசதியை ஏற்படுத்தித் தருவது தொழில்நுட்ப ரீதியில் சாத்தியமே.

அமெரிக்காவில் நியூ ஜெர்ஸி பெல் நிறுவனம் (New Jresey Bell) தனது செயல் வட்டாரத்தில் இவ்வித வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த ஏற்பாட்டின் கீழ் டெலிபோனுக்குக் கீழே அமைந்த சிறிய கருவியின் கண்ணாடித் திரையில் அந்த டெலிபோன் அழைப்பு எங்கிருந்து வருகிறதோ அந்த டெலிபோனின் எண் தெரிகிறது.



ஆனால் ஒன்று எங்கிருந்து டெலிபோன் அழைப்பு வருகிறது என்பதைத்தான் தெரிந்துகொள்ள முடியுமே தவிர, யார் டெலிபோன் செய்கிறார்கள் என்பதை அறிய முடியாது.

அமெரிக்காவில் டெலிபோன் துறையில் மேலும் புது அம்சங்கள் வரவிருக்கின்றன:

வீட்டில் அல்லது அலுவலகத்தில் முக்கியமான வேலையில் இருக்கிறீர்கள்.

யார் யாரிடமிருந்து டெலிபோன் வந்தால் 'பரவாயில்லை என்று நினைக்கிறீர்களோ அந்த இலக்கங்களை மட்டும் கம்பியூட்டரில் செலுத்தினால் போதும்.

அந்த இலக்கங்களிலிருந்து டெலிபோன் வந்தால் மட்டுமே அது அனுமதிக்கும். வேறு இலக்கங்களிலிருந்து டெலிபோன் அழைப்பு வந்தால், 'ஐயா வேலையாக இருக்கிறார்; 4 மணிக்குத் தொடர்பு கொள்ளுங்கள்' என்பது போன்ற செய்தியை அதுவே கூறிவிடும்.

டெலிபோன் வந்தால் பதிவு செய்துகொண்டு பதில் அளிக்கும் கருவி ஏற்கெனவே அமெரிக்காவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது அத்துடன்கூட டெலிபோன் அழைப்புகளை 'வடிகட்டும்' கூடுதல் வசதியும் கிட்டும்.

யார் டெலிபோன் செய்தாலும் டெலிபோன் மணி ஒரே மாதிரியாகத்தான் அடிக்கிறது. அப்படியின்றி நாம் குறிப்பிட்டுக் கூறுகிற இலக்கங்களிலிருந்து டெலிபோன் வந்தால் மட்டும் தனிப் பாணியில் மணி அடிக்கும்படியும் டெலிபோன் நிறுவனத்தினர் ஏற்பாடு செய்வார்கள். ★

## நாணயங்கள்

அணிசேரா நாடுகளின் தலைவர்கள் மாநாடு இம்மாதம் 4 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை யூகோஸ்லாவியா தலைநகர் பெல்கிறேடில் நடைபெறவிருக்கிறது அல்லவா.

இதை ஒட்டி அந்த நாட்டு தேசிய வங்கி, சிறப்புத்தங்க நாணயம் ஒன்றையும் வெள்ளி நாணயங்கள் இரண்டையும் வெளியிட்டிருக்கிறது.

வழக்கமாக யூகோஸ்லேவியா நாட்டு நாணயங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் உலோகத்தில் இன்னொரு நாணயத்தையும் வெளியிட்டுள்ளது.

இந்த நாணயங்களில் 9 ஆவது அணிசேரா நாடுகள் உச்சிமாநாடு என்று பொறிக்கப்பட்டுள்ளது. ★

## மயக்க மருந்து பாவிக்கும் முறை ஆதாம்-ஏவாள் காலத்தில் இருந்தது

மயக்க மருந்து கண்டுபிடித்த நேரத்தில் இங்கிலாத்து நாட்டு அரசி விக்டோரியாவுக்கு 8 ஆவது பிரசவம்:

மருந்து கண்டுபிடித்த 3 மருத்துவ நிபுணர்களும் அரண்மனைக்கு அழைத்து வரப்படுகிறார்கள்.

மகாராணிக்கு பிரசவ வேதனை தெரியாமல் இருக்க மயக்க மருந்து கொடுத்து பிரசவம் பார்க்கப்போகிறார்கள் என்ற செய்தி கிறிஸ்தவ சபைக்கு எட்டுகிறது.

சபையில் இருந்த மதக் குருக்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள்.

'அங்கீகரிக்கப்படாத கனியை முதல் மனிதன் ஆதாமுக்கு ஏவாள் கடவுள் கட்டளையை மீறி வழங்கியதால் இறைவன் கோபத்துக்கு ஆளானார்கள்.

இதனால் ஆவாளுக்கு இறைவன் சாபம் கொடுக்கிறார். பிரசவத்தோடு வலியும், வேதனையும் தலைமுறை தலைமுறையாக நிகழும் என்பதே இறைவனின் அந்த சாபம்.

இந்தச் சாபமாகப் பெண்களுக்கு பிரசவ நேரத்தில் ஏற்படும் வலி, வேதனையை குறைக்கப்பார்க்கிறீர்களே இது இறைவனின் கட்டளையை மீறிய செயல் ஆகாதா?' எனக் கேட்டார்கள் திருச்சபையினர்:

இதற்கு டாக்டர்கள் மிகத் தெளிவாகப் பதில் அளித்தார்கள்.

'இறைவனே முதன்முறையாக மயக்கம் கொடுத்து அறுவை சிகிச்சையை நடத்தி இருக்கிறார். அது பைபிளில் கூட இடம்பெற்று இருக்கிறதே உங்களுக்குத் தெரியாதா?'

இதைக் கேட்டுத் திகைத்துப்போன மதகுருமார்கள் அது பற்றி விளக்கும்படி கேட்டார்கள்.

அதற்கு டாக்டர்கள இறைவன் ஆதாமுக்கு தூக்கத்தை வரவழைத்தார். தூக்கத்தை வரவழைத்தார் என்றால் மயக்கத்தை ஏற்படுத்தினார்.

பிறகு ஆதாம் விலாப்புறத்தில் இருந்து ஒரு எலும்பை எடுத்து ஏவாளை உருவாக்கியதாக பைபிளில் உள்ளதே.

எனவே கடவுளே மயக்கம் கொடுத்து ஓர் அறுவைச் சிகிச்சை செய்தபோது நாங்கள் மயக்கம் கொடுத்து ஏன் பிரசவம் பார்க்கக்கூடாது?

எனவே இதில் எங்களுக்கு முன்னோடி இறைவனே' என விவரித்தார்கள் டாக்டர்கள்.

இப்படித்தான் மயக்க மருந்து முதன்முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ★

பஞ்சா மிர்தா
பலரச அமிர்தம்

## வியட்நாமியரின் - உடன் பிறப்பு சீனர்களின் - மக்கள் நண்பன் எது?

தொட்டில் முதல் சுடுகாடு வரை நமக்குப் பயன்படுகிற ஒரே தாவரம் மூங்கில்.

வியட்நாமியர்கள் மூங்கிலை 'உடன்பிறப்பு' என்கிறார்கள்.

சீனர்கள் அதனை 'மக்கள் நண்பன்' என்றழைக்கிறார்கள்.

மூங்கில் மற்றத் தாவரங்களை விட அதிக வேகத்துடன் வளருகிறது.

ஜப்பானில் ஒரு மூங்கில் 24 மணிநேரத்தில் 121 சென்ரி மீற்றர் வளர்ந்து ஒரு சாதனை படைத்திருக்கிறது.

சில இன மூங்கில்கள் 30 மீற்றர் உயரத்திற்கும் 30 சென்ரி மீற்றர் விட்டத்திற்கும் வளர்கின்றன.

மூங்கில் அன்டார்க்டிக்கா, ஐரோப்பாவைத் தவிர மற்ற எல்லாக் கண்டங்களிலும் சுதேசிப் பயிராகும்.

வெப்பநாடுகளின் கடல் மட்டத்தில் இருந்து 4 ஆயிரம் மீற்றர் உயரமுள்ள மலைப் பகுதிகள் வரை மூங்கில் வளரும்.

மூங்கிலில் கிட்டத்தட்ட ஆயிரம் இனங்கள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை ஆசியாவில் பிறந்தவையே.

மூங்கில் பலகோடி ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது. ஆண்டு முழுவதும் பசுமையாக இருக்கும் மூங்கில், புல்வகையைச் சேர்ந்ததாக இருந்தாலும் அதுவேறு எந்தப் புல்லையும் ஒத்திருக்கவில்லை.

என்ன மூங்கில் கதை மூங்கிலைப் போன்று வளருகிறது என்று எண்ணுகிறீர்களா! ★



இன்றே உங்கள் குழந்தைக்குத் தடுப்பு மருந்தைக் கொடுங்கள்.
தாமதித்தால் தவிக்க நேரிடும்.

சர்வமய குழந்தை நோய்த்தடுப்பு இலட்சியத்தை அடைய உதவுங்கள்

# கொடிய சின்னமுத்து நோயிலிருந்து உங்கள் குழந்தையைக் காப்பாற்றுங்கள்!

தாய்மாரே, உங்கள் குழந்தைக்கு 9 மாதம் ஆகிவிட்டதா? அப்படியானால் தாமதிக்காமல் உங்கள் குழந்தையை அண்மையில் உள்ள அரசினர் தாய் சேய் நலப் பராமரிப்பு நிலையத்திற்கு அல்லது வைத்தியசாலைக்கு கொண்டுசென்று சின்னமுத்து நோயிலிருந்து நிச்சயப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய தடுப்பு மருந்தை ஒரே தடவையில் பெற்றுக் கொடுங்கள்.

### சின்னமுத்து பயங்கர விளைவுகளை ஏற்படுத்த வல்லது

சின்னமுத்து ஒரு சாதாரண, தீங்கு விளைவிக்காத நோய் எனப் பல பெற்றோர் நினைக்கிறார்கள் இந்தப் பிழையான எண்ணத்தின் காரணமாக அவர்கள் தமது குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து கொடுப்பதில் அசட்டையாக இருந்துவிடுகிறார்கள் உண்மையில் சின்னமுத்து பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு கொடிய நோய்


இந்த நோயினால் மூளைக்காய்ச்சல், கண் குருடாதல், நியூமோனியா வயிற்றோட்டம் போஷாக்கின்மை முதலிய பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் அதுமட்டுமல்ல இதனால் உயிருக்குக்கூட ஆபத்து விளையலாம் எனவே அலட்சியமாக இருந்து உங்கள் அன்புச் செல்வத்தின் வாழ்வு பாழாவதற்கு இடமளிக்காதீர்கள் சின்னமுத்து நோய்க்கு எதிரான தடுப்பு மருந்தை உரிய வேளையில் கொடுத்து உங்கள் குழந்தையைக் காப்பாற்றுங்கள்

### பொன்னான வாய்ப்பு

சின்னமுத்துத் தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ளும் குழந்தைகளுக்குத் தங்கப் பஞ்சாயுதம் ஒன்றைப் பரிசாகப் பெறும் வாய்ப்புக் காத்திருக்கிறது. எனவே, உங்கள் குழந்தைக்கு இன்னமும் சின்னமுத்துத் தடுப்பு மருந்தைக் கொடுக்கவில்லையானால் இந்தப் பொன்னான வாய்ப்பைப் பயன்படுத்துங்கள்.

### தகைமை

பின்வரும் இரு பிரிவினரான குழந்தைகள் பஞ்சாயுதப் பரிசைப் பெறத் தகுதியுடையவராவர்



1 1989 ஜூலை 30க்கும் முன்னர் சின்னமுத்து நோய்க்கு எதிரான தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொண்ட 15 மாதங்களுக்குட்பட்ட குழந்தைகள்

2 1989 ஜூலை 30க்கும் செப்டெம்பர் 10க்கும் இடைப்பட்ட காலத்தில் சின்னமுத்துத் தடுப்பு மருந்தைப் பெறும் 15 மாதங்களுக்குட்பட்ட குழந்தைகள்

இந்தக் குழந்தைகளின் தாய்மார் குழந்தைக்குச் சின்னமுத்துத் தடுப்பு மருந்து செலுத்தப்பட்டதும் அல்லது தடுப்பு மருந்து செலுத்தப்பட்டதற்கான அத்தாட்சியாகக் குழந்தையின் பொதுவான தடுப்பு மருந்தேற்றல் அட்டையைக் காட்டி 'சின்னமுத்துத் தடுப்பு மருந்து அட்டை' ஒன்றைச் சிகிச்சை நிலையத்தில் கேட்டு வாங்கிக்கொள்ள வேண்டும். பின்னர், இந்த அட்டையில் குழந்தையின் பெயர் முகவரி போன்ற விபரங்களை எழுதி அதனை அங்கேயே திருப்பிக் கொடுக்க வேண்டும்.

உங்கள் குழந்தைக்கும் தங்கப் பஞ்சாயுதம் ஒன்றைப் பெறும் வாய்ப்புக் கிட்டலாம்.

அதைவிட முக்கியமாக, உங்கள் குழந்தையைப் பயங்கரமான நோய் ஒன்றிலிருந்து காப்பாற்றிவிட்ட மனநிம்மதி உங்களுக்குக் கிடைக்கும்.

சுகாதார, மகளிர் விவகார அமைச்சு
யுனிசெப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சமூகக்கல்வி

(க. பொ. த: சாதாரணதரத்திற்கு உரியது)

### "அபிவிருத்தி"

**வினாக்கள்:**

1. அபிவிருத்தி என்றால் என்ன? அபிவிருத்தியை மதிப்பீடு செய்யும் குறிகாட்டிகள் எவை?
2. ஆள்வீத வருமானத்தின் அடிப்படையில் உலகநாடுகளை பாகுபடுத்தி மூன்று உதாரணங்களும் தருக?
3. அபிவிருத்தி அடைந்த நாடுகளின் ஐந்து சிறப்பியல்புகளைத் தருக.
4. பொருளாதார அபிவிருத்தி - பொருளாதார வளர்ச்சி ஆகிய இரண்டு பதங்களுக்குமான கருத்தினை விளக்குக:
5. குறைவிருத்தி நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது இலங்கையின் பௌதீக வாழ்க்கை பண்புச் சுட்டெண் உயர்ந்த நிலையில் காணப்படுவதற்கான காரணங்களைத் தெளிவு படுத்துக:
6. 'உலகின் முதலாவது செல்வந்தநாடு ஐக்கிய அரபு எமிரேற்றுக்கள் ஆகும். ஆனாலும் அந்த நாடு ஒரு அபிவிருத்தி அடைந்துவரும் நாடு எனவும் கூறப்படுகின்றது' இக்கூற்றின் தார்ப்பரியத்தினை விளக்குக:
7. தமது பொருள்களின் சந்தைப்படுத்தல் சம்பந்தமாக குறைவிருத்தி நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தருக.
8. அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பெயர்ப்பட்டியலைத் தருக:
9. சமூக அபிவிருத்தி குறிகாட்டியான 'பௌதீக வாழ்க்கை பண்புச் சுட்டெண்' இல் இருந்து பெறப்படும் அபிவிருத்தி பற்றிய தகவல்களைத் தருக.
10. இலங்கை கைத்தொழில் துறையில் பூரணவிருத்தியை அடையவில்லை. இதற்கான பிரதான காரணங்களைத்தருக.

**விடைகள்:**

1. 'குறிப்பிட்ட ஒரு நாட்டில் வாழுகின்ற மக்களுக்கு உயர்ந்தவாழ்க்கைத் தரத்தினை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் அந்நாட்டின் பொருளாதார சனத்தொகைக் காரணிகளில் மட்டுமல்லாது சமூகப்பண்பாட்டிலும் மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் ஏற்படுத்துகின்ற ஒரு நடவடிக்கையினைக் குறிப்பதாகும்' ஒரு நாடு அபிவிருத்தி அடைந்த நாடு தானா என்பதனை மதிப்பீடுசெய்ய பின்வரும் குறிகாட்டிகள் பயன்படுத்தப்படும்:
   (அ) ஆள்வீத வருமானம் அல்லது தலாவருமானம்.
   (ஆ) பௌதீக வாழ்க்கை பண்புச் சுட்டெண்:
2. (அ) செல்வந்தநாடு - (7000 டொலருக்கு கூடிய தலா வருமானம்)

| | |
|---|---|
| ஐக்கிய அரபு எமிரேற்றுக்கள் | — 27.000 டொலர் |
| சவூதி அரேபியா | — 16.000 டொலர் |
| நோர்வே | — 13 333 டொலர் |

   (ஆ) நடுத்தரவருமான நாடு-(7000டொலர் - 791 டொலருக்கு இடைப்பட்ட - தலாவருமானம்)

| | |
|---|---|
| ஜப்பான | — 4910 டொலர் |
| சிங்கப்பூர் | — 5615 டொலர் |
| ரஷ்யா | — 4450 டொலர் |

   (இ) வறிய நாடு - (791 டொலர் -410 டொலருக்கு இடைப்பட்ட தலாவருமானம்)

| | |
|---|---|
| பிலிப்பைன்ஸ் | — 604 டொலர் |
| இந்தோனேசியா | — 580 டொலர் |
| சூடான் | — 478 டொலர் |

   (ஈ) மிகவறியநாடு - (410 டொலருக்கு குறைந்த தலா வருமானம்)

| | |
|---|---|
| இலங்கை | — 320 டொலர் |
| இந்தியா | — 260 டொலர் |
| எத்தியோப்பியா | — 120 டொலர் |

   (ஆதாரம்:- உலகவங்கி அறிக்கை - 1982)

3. மூலதனம் மிகையாகக் காணப்படும், பிரதான உற்பத்தி கைத்தொழில், நகராக்கம் காணப்படும், பிறப்பு இறப்பு வீதங்கள் குறைவாக இருக்கும், போஷாக்கான உணவூட்டங்கள் காணப்படும்.
4. 'குறிப்பிட்ட ஒரு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் காணப்படும் முன்னேற்றங்களை பொருளாதார அபிவிருத்தி என அழைக்கப்படும்: மாறாக பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்படுத்தப்படும் தொடர்ச்சியான அதிகரிப்பினை குறிப்பது ஆகும்'
5. இலங்கையின் இலவச கல்வித்திட்டம், இலவச சுகாதார மருத்துவ வசதிகள் திட்டம், இலவச குடிநீர் குடியிருப்புத் திட்டம், இலவச உணவுவிநியோகத் திட்டம், இலவச ஏனைய சமூகநலக்கொடுப்பனவுகள் ஆகியவற்றில் காணப்படும் முன்னேற்றங்களை குறிப்பிட்டுக் கொள்ள முடியும்.
6. ஐக்கிய அரபு எமிரேற்றுக்கள் செல்வம் கொழிக்கும் நாடாகக் காணப்பட்டபோதிலும் அச் செல்வம் ஒருசிலரின் கைகளிலேயே குவிந்துள்ளது. அத்துடன் அந்நாட்டின் எழுத்தறிவு, ஆயுள் எதிர்பார்ப்பு, சுகாதாரமருத்துவத் துறைகள், போஷாக்கான உணவூட்டங்கள் ஆகியன பின்தங்கிய நிலையில் காணப்படுவதுடன் சிசுமரண வீதம் உயர்ந்த நிலையிலும் காணப்படுகின்றது. எனவே அந்தநாடு ஒரு குறைவிருத்தி நாடாகக் காணப்படுகின்றது.
7. நிலையான சந்தை வாய்ப்பின்மை, நியாய விலைவாய்ப்பின்மை, மூலப்பொருள் ஏற்றுமதியாகக் காணப்படுதல், பூரண கப்பல் சேவை வசதிகள் காணப்படாமை, வளர்ச்சி அடைந்த நாடுகளின் அதிகரித்த போட்டியினைச் சமாளிக்க முடியாமை ஆகிய காரணிகளைக் குறிப்பிட்டுக்கொள்ளமுடியும்.
8. (அ) வடஅமெரிக்கா — கனடா,. அமெரிக்கா
   (ஆ) தென் அமெரிக்கா — உருகுவே, ஆஜென்ரீனா
   (இ) ஆசியா — சிங்கப்பூர், ஜப்பான்
   (ஈ) ஆபிரிக்கா — தென்னாபிரிக்க குடியரசு
   (உ) ஐரோப்பா — பிரித்தானியா, பிரான்ஸ், போர்த்துக்கல், ஜேர்மனி, இத்தாலி,சுவிஸ்லாந்து,டென்மார்க், நோர்வே, சுவீடன்.
   (ஊ) சோவியத்யூனியன்.
   (எ) அவுஸ்திரேலியா.
9. கல்வி சுகாதார துறைகளின் அபிவிருத்தி, பெண்கள் கல்விநிலை, சனத்தொகை பெருக்கவீதம், உணவிலுள்ள போஷாக்கு மட்டம், தாய்சேய் பற்றிய சுகநிலை ஆகிய தகவல்களைக் குறிப்பிட்டுக்கொள்ளமுடியும்.
10. மூலதனப் பற்றாக்குறை, தொழில்நுட்பப் பற்றாக்குறை, தொழில்நுட்பவியலாளர் பற்றாக்குறை, போதிய சந்தை வாய்ப்பின்மை, வளர்ச்சியடைந்த நாடுகளின் போட்டியினைச் சமாளிக்கமுடியாமை ஆகிய காரணிகளைக் குறிப்பிட்டுக்கொள்ளமுடியும்.

**ஆக்கம்: கே. நகிரதன்**

# கருச்சிதைவைத் தடுக்க தாய்மார் கடைப் பிடிக்க வேண்டியவை!

திருமணமானதும் பெரும்பாலான தம்பதிகள் ஒவ்வொருவரும் தமக்கு ஒரு குழந்தை வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் சில பெண்களுக்கு கருக்கட்டியபின் இரண்டு, மூன்று மாதங்களில் கருச்சிதைவு ஏற்பட்டுவிடுகிறது.

எவ்வளவு பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தாலும் பல பெண்களுக்கு இக் 'கருச்சிதைவு' பெரும் பிரச்சினையாகவே இருக்கிறது.

இப்படியான பெண்கள் ஆரம்பத்திலேயே மகப்பேறு மருத்துவரை சந்தித்துத் தகுந்த ஆலோசனைகளைப் பெறுவது அவசியமாகும்.

பெண்ணாகப் பிறந்த ஒவ்வொருவரும் குறிப்பாகத் திருமணமான பெண்கள் இக்கருச்சிதைவு பற்றிய பூரண அறிவைப் பெறவேண்டும்.

கருச்சிதைவைப் பற்றி அறியும் முன்' கரு எங்கு வளருகிறது...? அதன் வளர்ச்சிக்குத் தாயார் எவ்வாறு உதவ முடியும் என்பதை அறிந்துகொள்ளவேண்டும்,

கரு தாயின் கர்ப்பப்பையில் ஒரு சிறிய முட்டை வடிவில் வளர்ச்சியைத் தொடங்குகிறது. அதனைச் செல்சள் அடங்கிய அமைப்பு என்று கூடச் சொல்லலாம்.

இந்தப் பருவம் தொடங்கி முழு வளர்ச்சியடைந்த குழந்தை பிறக்கும்வரை, அதாவது சுமார் 280 நாட்களும் குழந்தைக்கு நச்சுக்கொடி மூலம் தாயின் உடலில் இருந்து இரத்தக்குழாய் வழியாக உணவு செல்கிறது.

கழிவுப் பொருட்களும் இதே நச்சுக் கொடி மூலமே வெளியேறுகிறது:

கருவுற்ற பெண்கள் சிலருக்கு இயற்கையாகவே கருச்சிதைவு ஏற்படுவதற்குப் பல காரணங்கள் கூறலாம்:

இயற்கையாக ஏற்படும் கருச்சிதைவுக்கு தாய், தந்தை, கரு இவர்களில் யார் வேண்டுமானாலும் காரணமாக இருக்கலாம்.

தாயைப் பொறுத்தவரையில் கர்ப்பப்பை சரியான நிலையில் இல்லாமல் இருப்பதாலும், வயிற்றில் கட்டி (Tumors) இருப்பதாலும், நச்சுக்கொடி சரியானபடி அமையாததாலும்,

மஞ்சள் காமாலை, டைபாயிடு, மலேரியா போன்ற நோய்கள் கருவுற்ற சமயத்தில் வருவதாலும்,

கீழே விழுவதால் வயிற்றுப் பகுதியில் அடிபட்டுக்காயம் ஏற்படுவதாலும், மனதை மிகவும் பாதிக்கக்கூடிய அதிர்ச்சிகள் காரணமாகவும் இயற்கையாகவே கரு கலைந்து விடுகிறது.

கருவைப் பொறுத்தவரை அதன் அமைப்பில் குறை இருப்பின் கருச்சிதைவு ஏற்படும்:

அடுத்து தந்தையின் இரத்தம் RH+ ஆகவும், தாயின் இரத்தம் RH— ஆகவும் இருந்தால் குழந்தை RH— ஆக இருக்கும்.

இத்தகைய கருவை எரித்ரோபிளாஸ்டோஃபீட்டஸ் என்பார்கள். இந்தக் கருவும் பெரும்பாலும் சிதைந்துவிடும்.


இப்படியான RH— உள்ள பெண்களுக்கு முதற்குழந்தை ஒரு பிரச்சினையும் இல்லாமல் நல்லபடியாகப் பிறந்திருக்கலாம்: ஆனால் அடுத்தடுத்து பல முறை கருச்சிதைவு ஏற்படலாம்.

இத்தகைய குறைபாடுகள் இருக்கிறதா...? என்பதை அறிய அடிக்கடி கருச்சிதைவு ஏற்படும் பெண்கள் தகுந்த டாக்டரிடம் காட்டி விபரத்தை அறிந்துகொள்ள வேண்டும்:

இத்தகைய பெண்களுக்கு இம்யுனோக்ளோபுலின்(Imuno-Globulin) ஊசி போட்டால் இக்குறை நீங்கிவிடும்:

—நன்றி:
மங்கையர் மலர்

## மாதம் ஒரு கோலம்



இக்கோலத்தை பொதுவாக எல்லாவற்றிற்கும் போடலாம். என்றாலும் மலர்க்கோலமாக இருப்பதால் வருடப்பிறப்பு மாதப் பிறப்பு போன்றவற்றிற்குப் போடும்போது சிறப்பாக அமையும்:

இக்கோலத்தினை மாக்கோலமாகவோ வர்ணம் சேர்த்தோ போட்டுக்கொள்ளலாம். வர்ணம் சேர்ப்பதானால் பூக்களுக்கு மஞ்சள் அல்லது வெள்ளை நிறமாகவும் ஏனையவற்றிற்கு பச்சை நிறமாகவும் போடலாம்:

—திருமதி
நா. சோமசுந்தரக் குருக்கள்

## வாழ்வது எப்படி?

'நீங்கள் மோட்டார் மேல் ஏறலாம்; ஆனால் மோட்டார் உங்கள் மேல் ஏறக்கூடாது.

கடல் மேல் கப்பல் இருக்கலாம்; ஆனால் கப்பல்மேல் கடல் இருந்தால் ஆபத்து:

அதுபோல நீங்கள் குடும்பத்தில் இருங்கள். குடும்பம் உங்கள்மேல்இருக்கக்கூடாது.

தாமரை இலைத் தண்ணீர் போல் வாழுங்கள்.'

—வாரியாரின் உரையிலிருந்து

★

## பொன்மொழி

இன்பத்தைத்தேடித்திரிந்து அலைய வேண்டாம். உறுதியான விசுவாசமான உள்ளத்தை நீங்கள் காத்து வந்தால் எல்லா இடங்களிலும் - செல்லும் இடங்களிலெல்லாம் - அதைக் காணலாம்:

— வைன்

★

துணிவு மிக்க மனிதர்களே எப்போதும் தங்கள் செல்வத்தை வாரி வழங்குவதிலும் வள்ளலாக உள்ளனர்.

- அமெரிக்கப் பழமொழி




# மின்னும் நட்சத்திரங்கள் பற்றி....

இரவு நேரத்தில் வானத்தைப் பார்க்கையில் சில நட்சத்திரங்கள் மற்றவைகளை விடப் பிரகாசமாகக் காணப்படுகின்றன.

சக்தி வாய்ந்த தொலைநோக்கிகளின் மூலமாக அவைகளைக் காணும்பொழுது நட்சத்திரங்களின் பிரகாசத்தில் வித்தியாசம் இருப்பதைத் தவிர நிறங்களிலும் வித்தியாசம் இருப்பது தெரிய வருகிறது.

ஒரு சில நட்சத்திரங்கள் மற்றவைகளை விட மிகப் பிரகாசமாக ஏன் தெரிகின்றன என்று தெரியுமா......?

நட்சத்திரங்களின் பிரகாசமும் நிறமும் அவைகளின் வெப்பநிலையைப் பொறுத்து இருக்கின்றன.

வெப்பம் அதிகமாக அதிகமாக இவை பிரகாசமாக இருப்பதைச் சில எடுத்துக் காட்டுகளால் அறியலாம்.

ஒரு குளிர்ச்சியான எஃகுத் துண்டு பார்வைக்குக் கறுப்பாகத் தோன்றுகிறது: ஆனால் அதைச் சூடுபடுத்தியவுடன் அது சிவப்பு நிறமாக மாறுகிறது.

அதை மேலும் உஷ்ணப்படுத்தினால் சிவப்பு நிறம் முதலில் மஞ்சளாக மாறிப் பிறகு வெண்மையாகும்: இன்னும் வெப்பமேற்றினால் அது நீல நிறமுடையதாகிறது:

இதிலிருந்து ஒரு பொருளின் நிறம் அதன் வெப்பநிலையைப் பொறுத்து இருக்கிறது என்று தெரிய வருகிறது.

ஒரு பொருளைத் தொடர்ந்து உஷ்ணப்படுத்திக் கொண்டே போனால் அது முறையே சிவப்பு, மஞ்சள், பச்சை, வெளுப்பு, நீலம் ஆகிய நிறங்களைப் பெறுகிறது:

ஒரு நட்சத்திரத்தின் நிறத்திற்கும் அதன் வெப்பநிலைக்கும் உள்ள தொடர்பின் அடிப்படையில் அதன் பிரகாசத்தை உறுதிப்படுத்த இயலும்.

சிவப்பு அல்லது ஆரஞ்சு நிறம் கொண்ட நட்சத்திரங்கள் மஞ்சள் அல்லது பச்சை நிறம் கொண்ட நட்சத்திரங்களை விட வெப்பம் குறைந்தவை.

மஞ்சள் அல்லது பச்சை நிறம் கொண்ட நட்சத்திரங்களை விட வெண்மை நிறம் கொண்ட நட்சத்திரங்கள் அதிக வெப்பமுடையன:

நீலநிறமுடைய நட்சத்திரங்கள் எல்லாவற்றையும் விட மிக அதிக வெப்பமாக இருக்கின்றன:

நீலநிறமுடைய நட்சத்திரங்கள் மேல்பரப்பு வெப்பநிலை 27,750 டிகிரி சென்டிகிரேட் அல்லது அதைவிட அதிகமாக இருக்கின்றது.

சூரியன் மஞ்சள் நிறமுடைய ஒரு நட்சத்திரம்: ஆகவே அது நீல நிறமுடைய நட்சத்திரங்களை விட வெப்பம் குறைந்ததாக உள்ளது. சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை கிட்டத்தட்ட 6,000 டிகிரி சென்டிகிரேட்:

சிவப்பாகத் தோன்றும் நட்சத்திரங்கள் மற்றவைகளை விட வெப்பம் குறைந்ததாகவும் குறைவான பிரகாசமுடையனவாகவும் இருக்கின்றன.

அவைகளின் மேற்பரப்பு வெப்பம் 1650 டிகிரி சென்டிகிரேட்டை விடக் குறைவு:

இந்த உண்மைகளிலிருந்து நட்சத்திரங்களின் பிரகாசம் அவைகளின் மேற்பரப்பு வெப்பத்தைப் பொறுத்து இருக்கிறது என்று உறுதியாகிறது.

தூரம் அதிகமாக அதிகமாகப் பிரகாசம் குறைகிறது. மேற்பரப்பு வெப்பநிலை மிக அதிகம் கொண்டது. ஆனால் மிகத் தொலைவில் இருக்கும் நட்சத்திரங்கள்.

அவைகளை விடக் குறைந்த மேற்பரப்பு வெப்பநிலையை உடைய ஆனால் பூமிக்கு அருகில் இருக்கும் நட்சத்திரங்களைக் காட்டிலும் மங்கிய பிரகாசமுடையவையாகத் தோன்றுகின்றன.

★

ஆண்டாளுக்கு நீண்ட நாட்களாகவே ஒரு சந்தேகம்: உலகில் சண்டை சச்சரவுகள் எல்லாம் ஏன் ஏற்படுகிறது என்பதே அது.

அவள் பலரிடம் அது பற்றிக் கேட்டுப் பார்த்தாள். ஆனால் யாருமே அவள் திருப்தி அடையும் விதத்தில் பதில் கூறவில்லை:

ஒரு நாள் ஒரு சன்னியாசி அவள் வீட்டு வாசலில் நின்று பிச்சை கேட்டார்: அவரிடம் ஆண்டாள்,

'சுவாமி......! உலகில் சண்டை சச்சரவுகள் ஏன் ஏற்படுகிறது...?' என்று கேட்டாள். அதற்கு அந்தச் சன்னியாசி,

'ஏன் அம்மா பிச்சை கேட்டால் அதைப் போடாமல் இப்படி முட்டாள்தனமாகக் கேள்வி கேட்கிறாய். உனக்கு வேறு வேலையே இல்லையா...?' என்றார்.

உடனே ஆண்டாள்,

# நாவடக்கம்

'ஏய்! ஊர் ஊராகத் திரிந்து பிச்சை எடுக்கும் உனக்கு இவ்வளவு வாய்க்கொழுப்பா' என்று அவரோடு பெரிய சண்டைபோட ஆரம்பித்தாள்.

அப்போது சன்னியாசி சிரித்தவாறு,

'அம்மணி...! நான் ஒரு வார்த்தை சொன்னதற்காக நீ எவ்வளவு கோபப்பட்டுப் பொரிந்து தள்ளுகிறாய். மனிதர்களிடையே சண்டை சச்சரவுகள் வர எவ்வளவோ காரணங்கள் உள்ளன. அவற்றில் மிக முக்கியமானது வாய்ச்சொல்தான், இதை உனக்கு எடுத்துக்காட்டவே அவ்வாறு கூறினேன். நாவடக்கம் இருந்தால் பெரும்பாலான சண்டைகளே இல்லாமல் போய்விடும் என்றார். ✶

# அன்றாட வாழ்வில்...

### கொசுத்தொல்லை நீங்க...

'இப்பொழுதெல்லாம் காரியாலயங்களிலும், வீட்டிலும் வேலை செய்ய முடியாதபடி கொசுத்தொல்லை தாங்கமுடியாமல் இருக்கிறது' என்று ஒவ்வொருவரும் சலித்துக் கொள்ளுகிறார்கள்.

கொசுத்தொல்லை நீங்க அரளிச் செடியின் இலைகளை நசுக்கி அதனுடன் தண்ணீர் கலந்து அந்தச் சாற்றை வீடு முழுவதும் தெளியுங்கள், கொசுக்கள் நெருங்காது:

### கிழங்கு வேக

சமையல் செய்யும்போது கிழங்குவகைகள் நம் அவசரத்துக்கு ஏற்ப விரைவில் வேக மறுக்கின்றன:

கிழங்குகளை அரிசி கழுவிய தண்ணீர் விட்டு வேகவைத்தால் விரைவில் அவிந்து விடுகின்றன: ★

### தேமல் மறைய...

சிலரது முகத்திலும் உடலிலும் கரும் தேமல், வெண் தேமல் படர்ந்து உடல், முக அழகை கெடுத்து விடுவதைக் காணலாம்.

இவர்கள் இலுப்பை இலைகளைப் பறித்துவேகவைத்து, அரைத்து தேமல் மீது பூசி சிறிது நேரம் ஊறிய பின்பு குளித்தால் தேமல் மறைந்து விடும்.

### சொறி சிரங்கு அகல ..

வெதுவெதுப்பான நீரில் எலுமிச்சம்சம் பழரசத்தைப் பிழிந்து குளித்தால் சொறி, சிரங்கு போன்ற சருமநோய்கள் அகலும்.

### மகிழ்ச்சியான பெண்களுக்கு...

அன்றாடம் கணவனுடன் சண்டைபோடும் பெண்கள் கணவனைப் பிரிந்து வாழும் பெண்கள் பலவித நோய்களுக்கு ஆளாகின்றார்கள்.

கணவனுடன் மகிழ்ச்சியாக வாழும் பெண்களை நோய்கள் தாக்குவது குறைவு என்று அமெரிக்காவில் நடந்த ஒரு ஆராய்ச்சிக் குறிப்புத் தெரிவிக்கிறது:




## காட்டில் ஒரு கல்யாணம்

காட்டு இராசாவின் கலியாணம்
கானகம் எங்கும் விழாக்கோலம்
கண்ணைப் பறிக்கும் அலங்காரம்
காற்றில் அசையும் பூச்சரம்
விண்ணோ மண்ணோ எனவெண்ணி
வியந்து நின்றன விலங்கினம்
பண்ணொடு பாடின குயிலக்கா
பரதம் ஆடின மயிலக்கா
பாட்டுக் கேற்ற வாத்தியம்
பாங்காய் யானைகள் மீட்டிட
கொட்டும் தவிலுடன் நாதசுரம்
குரங்குகள் கோஷ்டியாய் வாசிக்க
வாட்டும் பசியைப் போக்கிட
வகைவகை உணவு கிடைத்தன
காட்டுப் பறவைகள் கூட்டமாய்
கலியாணத்திற்கு மெருகு ஏற்றின
மணமக்கள் வாழ்வாங்கு வாழ்ந்திட
மானும் புலியும் வாழ்த்தின
வணக்கம் சொல்ல மணமக்கள்
வணங்கிக் கையைக் கூப்பின:

— ஏ. டபிள்யு. அரியநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தாழம்மிக்க, காந்தம் போல் கவரும் வசனம் எழுதி திரையுலகில் புகழ்பெற்றவர் கவிஞர் கோபாலகிருஷ்ணன்!

'எழுத்தாளர்' என்ற நாடகம் அன்று சென்னை சபாவில் நடந்து கொண்டிருந்தது:

முன் வரிசையில் அமர்ந்து அதை ரசித்துக் கொண்டிருந்தார் நடிகவேள் எம். ஆர். ராதா:

நாடக முடிவில் மேடைக்கு அவர் அழைத்து வரப்பட்டார். நாடகம் பற்றி சில வார்த்தைகள் பேசுமாறு கோரப்பட்டார்.

மைக்முன் நின்ற ராதாவின் ஒரு கையில் ஒரு பீடியும் மறுகையில் தீப்பெட்டியும் இருந்தன: அவற்றைத் தூக்கிக்காட்டியபடி அவர் சொன்னார்:

நாடகம் தொடங்கியபோது இந்த பீடியைப் பற்றவைக்கத் தீப்பெட்டியை எடுத்தேன்.

### காந்த வசனம்

ஆனால் காட்சிக்குக் காட்சி நாடகத்தின் விறுவிறுப்பும், 'கருத்தாழம் மிக்க வசனமும் என்னைக் காந்தம் போல் கவர்ந்தன: அதனால் என்னையே இழந்து போனேன்...! பீடியைப் பற்ற வைக்கவும் மறந்து போனேன்' எனக் குறிப்பிட்டார் ராதா!

அந்தப் புகழுரையோடு அவர் நின்று விடவில்லை!

நேராகக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் வீட்டுக்கு ஓடோடிச் சென்றார் ராதா: 'கலைவாணரைச் சந்தித்து, தான் கண்டு ரசித்த நாடகம் பற்றியும், அதை எழுதியவரைக் குறித்தும் 'ஓகோ' வெனப் புகழ்ந்து தள்ளினார்!

தமிழ்நாட்டில் இப்படியும் ஓர் எழுத்தாளரா என்று வியந்து போற்றினார்!

அவ்வளவுதான்... ராதாவின் பேச்சில் கலைவாணரும் பிரமித்துப் போனார்—

'அப்படி ஓர் எழுத்தாளரா? அவரை நேரில் நான் பார்த்தாக வேண்டும்... அதுவும் உடனடியாக' என்று சொல்லிக் கலைவாணரும் ஏறி விட்டார் காரில்...!

எழுத்தாளரைத் தேடிப் புறப்பட்டார்கள் அவர்கள்:

எழுத்தாளர் அப்போது தங்கியிருந்த சாந்தோம் பகுதி அறைக்கே சென்று விட்டார்கள் கலைவாணரும், ராதாவும்:

### கலைவாணர்

அங்கு எழுத்தாளரையும் சந்தித்து, 'இப்போதே அந்த நாடகத்தை இங்கே கொண்டு வாருங்கள்... நீங்கள் படித்துக் காட்டுங்கள்... நான் அதைக் கேட்க வேண்டும்' என்று விடாப்பிடியாகக் கோரினார் கலைவாணர்.

நாடகத்தை ஆசிரியர் படிக்கப்படிக்க ஆங்காங்கே சபாஷ் போட்டுக் கைதட்ட ஆரம்பித்து விட்டார் கலைவாணர்:

அந்த நாடக ஆசிரியர் வேறு யாரும் அல்லர்...! பின்னாளில் தமிழ்த் திரையுலகில் முன்னணி கதை - வசனகர்த்தா - டைரக்டராகக் கொடிகட்டிப் பறந்த கே. எஸ். கோபால கிருஷ்ணன் தான் அவர்!

முன்பு இந்திப் படவுலகில் தலைசிறந்தகதைவசனகர்த்தாவாகத் திகழ்ந்தவர் இந்த ராஜ் ஆனந்த்:

அப்போது அடிக்கடி சென்னை செல்வதாக அவர்...!

ஒரு முறை இங்கே அவர் நண்பர்களிடம் பேசிக்கொண்டிருந்தார்.

மாலையில் கே.எஸ்.கோபால கிருஷ்ணன் படம் ஒன்றுக்குப் போகப் போவதாக அவர்களிடம் தெரிவித்தார் ஆனந்த்...'

'வெறும் வசனப் படம் தானே அது... அதற்கா போகிறீர்கள்?' என்று கேட்டிருக்கிறார்கள் நண்பர்கள்:

அவ்வளவுதான் ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்திருக்கிறது இந்தர் ராஜ் ஆனந்துக்கு:

### ராஜ்ஆனந்த் ஆத்திரம்

'கோபால கிருஷ்ணனை நீங்கள் புரிந்து கொண்டது இவ்வளவுதானா? அறிவிலிகள் போல இத்தனை சாதாரணமாகக் கேட்டு விட்டீர்களே? ஏதோ அர்த்தமில்லாமல் நீண்ட வசனங்களை எழுதுபவரா அவர், இல்லவே இல்லை!

ஒரு சரியான கதை - சரியான கதாபாத்திரங்கள் - சரியான திருப்பங்கள் - அவைகளை மிகச் சரியாகப் பிரதிபலிக்கும் வசனங்கள், செதுக்கி எடுத்த வார்த்தைகள் இவைதானே கோபால கிருஷ்ணனின் மகத்துவங்கள்...'

எனப் பொரிந்து தள்ளியிருக்கிறார் ஆனந்த்.

அதோடு சில படக் காட்சிகளையும் உதாரணம் காட்டினார்:

### 'கைகொடுத்த தெய்வம்'

'கை கொடுத்த தெய்வம்' படத்தில் சில காட்சிகள்- கதாநாயகியை ஓரிரு முறையே சந்தித்து இருக்கிறான் கதாநாயகன். அவளையே தன் வாழ்க்கைத் துணைவியாக்க விரும்புகிறான்.

கதாநாயகி நடத்தை கெட்டவள் என்ற எண்ணம் ஏற்கனவே வெளியில் பரவி இருக்கிறது. எனவே திருமணத்துக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள் கதாநாயகனின் பெற்றோர்...!

ஆனால் அவள் களங்கம் அறியாதவள் எனப் பூரணமாக நம்புகிறான் கதாநாயகன்... அவள் ஒரு வெகுளிப் பெண் எனப் பெற்றோரிடமும் வாதிடுகிறான்.

அவள் களங்கம் இல்லாதவள் என்பதற்கு என்ன ஆதாரம்? என்று கேட்கிறார்கள் பெற்றோர்.

'என் தாய் களங்கமற்றவள் என்பதற்கு என்ன ஆதாரமோ அதுதான் இதற்கும்' என்று பட்டென்று பதில்



சிவாஜிகணேசன்

கூறுகிறான் கதாநாயகனாக நடித்த சிவாஜிகணேசன். அவ்வளவுதான் வாயடைத்துப் போகிறார்கள் பெற்றோர்!

இந்தக் காட்சியைச் சுட்டிக் காட்டி கோபாலகிருஷ்ணனின் கதை-வசன ஆற்றலை விளக்கியிருக்கிறார் ஆனந்த். அதைக் கேட்டு அவரின் நண்பர்களும் வாயடைத்துப் போயிருக்கிறார்கள்...!

கதை - வசனத் துறைக்கே வராமல் போயிருந்தாலும் திரையுலகில் மிகப் புகழ் பெற்ற பாடலாசிரியராக நிச்சயம் கொடி கட்டிப் பறந்திருப்பார் இந்தக் கோபால கிருஷ்ணன்.

'உன்னழகைக் கன்னியர்கள் சொன்னதினாலே உள்ளமெல்லாம் உன் வசமாய் ஆனதினாலே' என்ற 'உத்தம புத்திரன்' படப் பாடல் கோபாலகிருஷ்ணன் தீட்டியதுதான்...!

'அமரதீபம்' படத்தில் 'நாணயம் மனுஷனுக்கு அவசியம்' என்ற பாடல் இவரின் கைவண்ணம்தான்...!

## சென்னையிலிருந்து
## தி. மேனகன்

'எதிர்பாராதது' படத்தில் 'காதல் வாழ்வில் நானே கனியாத காயாகிப் போனேன்' நீருக உடல் வெந்த போதும் உன் நினைவால் என் உயிர் வாழும் நாளும்...! வேருக நாம் வாழ்ந்த போதும் விலகாது நம் ஜீவன் கூடும்' என்ற பாடல் இவர் வடித்துத் தந்த இலக்கியம்தான்...!

இந்தப் படத்தின் விழா நடந்த சமயம்...!

உடுமலை நாராயண கவிராயர் அரங்கில் அமர்ந்து அதைப் பார்த்துக்கொண்டு இருந்திருக்கிறார்!

### கவிஞனாக...

அவரின் அருகில் கோபால கிருஷ்ணன் இருந்திருக்கிறார்.

படத்தின் பாடலில் 'நீருக உடல் வெந்தபோதும்... என்ற வரிகள் முடிந்த பிறகு 'வேருக நாம் வாழ்ந்த...' என்ற வரி வருகிறது அல்லவா?

அதில் 'நீருக', 'வேருக' என்ற வார்த்தைகளை இணைத்துக் கட்டியிருந்த விதத்தையும், பொருள் நயத்தையும் வெளியில் சொல்லிச் சொல்லி வியந்து பாராட்டியிருக்கிறார் கவிராயர்.

ஆனால் கோபாலகிருஷ்ணன் தான் அந்தப் பாடலை எழுதியவர் என்று கவிராயருக்குத் தெரியாது!

இவ்வளவு அழகான வரிகளைத் தீட்டியவன் மாபெரும் கவிஞன் தான் என்று குறிப்பிட்டிருக்கிறார் கவிராயர்,

அப்போதும், தான் தான் அந்தக் கவிதையை எழுதியவன் என்பதைக் கவிராயரிடம் சொல்லவில்லையாம் கோபால கிருஷ்ணன்...!

ஆனால் அவர்களின் அருகில் இருந்த மற்றொருவர், உண்மையைச் சொல்லிவிட்டார் கவிராயரிடம்!

'இதை ஏன் இவ்வளவு நேரம் என்னிடம் கூறவில்லை?' என்று கோபால கிருஷ்ணனைப் பார்த்துக் கேட்டிருக்கிறார் கவிராயர்!

'தங்களின் முன்னால் நான் ஒரு கவிஞன் என்று சொல்லும் அருகதை எனக்கில்லை என்று பணிவுடன் கூறியிருக்கிறார் கே. எஸ். ஜி.

'உனக்கு அந்தத் தகுதி நிறைய இருக்கிறது: நீ ஒரு 'பிறவிக் கவிஞன்'. அதைத் தைரியமாகச் சொல்லலாம் நீ' என தட்டிக் கொடுத்தாராம் அவர்...! ★

## சீதன ராமன்கள்

அன்று...
சீதையைச் சிம்மாசனம்
ஏற்ற மறுத்து கற்பை
நிலை நாட்ட ''அக்னி''
மூழ்கச் சொன்னான்
அன்றைய அவதார ராமன்
இன்று...
திருமணமாம் சிம்மாசனம்
ஏற்ற மானிடச் சீதையரை
சீதனத் தீயிலே
தீக்குளிக்க வைக்கிறார்கள்
இன்றைய சீதன ராமன்கள்

பா. பூரணி

## மௌன நீரூற்று

கண்ணுக்கு வேதனை
கவலைக்கு ஆறுதல்
துன்பத்தின் எதிரொலி
இன்பத்தின் தடை
வேதனையின் வெளிப்பாடு.
வெறுப்புக்கு ஆரம்பம்,
கல் மனதைக் கரையவைக்கும்
காரியத்தைச் சாதிக்கும்
கடல் நீரின் உறவாகும்
கண்ணீரே அதுவாகும்.

- ரூபா

## காரணம்

நான்—
கோயிலுக்கு வருவது
கடவுளைத் தரிசிக்க
மட்டுமல்ல
கண்மணியையும்
காணத்தான்.

பின்னர்
தெரிந்தது
நீ—
கோயிலுக்கு
வராமல் விட்டது
கடவுளைத் தரிசிக்காமல்
இருக்கவல்ல
என்னைக்
காணாமல் இருக்கத்தான்
என்று.

- சாவ. சண்முகதாசன்


## "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

### நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230.000 | 4.365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577.492 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,718 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,878 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

நம்பிக்கையுடன் சேமிக்க
"ஷப்ரு"வை நாடுங்கள்
நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!

பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.),
பொது முகாமையாளர்

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
(A. I. B. Lond.),
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
(B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனை இரந்து வேண்டினால்
# துன்பத்தில் இருந்து மீளலாம்

வாழ்வின் ஒவ்வொரு அசைவும் இறைவனின் பாற்பட்டது. அவனின்றி ஓர் அணுவும் அசையாது.

மனிதன் துன்பப்படுவதற்கு உரிய அடிப்படைக் காரணம் ஆசையே என அனைத்துச் சமயங்களும் வற்புறுத்துகின்றன.

ஆசையினை அகற்றி இறைவனை வேண்டிப் பரவின் துன்பம் அகலும்; இன்பம் பெருகும்.

மனித வாழ்வின் எழுத்தினை விதி என்றும்; வினை என்றும்; ஊழ் என்றும் கூறுவர். இதனையே யாழ்ப்பாணத்து ஞானச் செம்மல் 'முடிந்த முடிவு' என்று கூறுவர். இதில் மாற்றம் செய்வதற்கு ஒன்றுமில்லை.

**இன்பமும் துன்பமும்**

இன்பமும் துன்பமும் இறைவன் வகுத்தபடியே நடக்கும். இறைவனை நம்புவோர் இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கருதுவர்.

இருவகை நிலைகளையும் சமமாகக் கருதுவோர் மனச்சஞ்சலப்படார் - தாழ்வு மனப்பான்மையும் கொள்ளார்.

சான்றோர் எதுவித துன்பம் வந்தாலும் பொறுமையாக; அமைதியாக; இறைவன் மேல் அத்துன்பங்களைச் சுமத்திவாளாவிருப்பர். இவ்வாறு இருக்கும் போது யாவும் நன்மையாகவே நடக்கும்.



சாதாரண மனிதன் தன் வாழ்வில் நடக்க வேண்டியதைத் தடுக்கவும் முடியாது. நடக்காததை நடக்கப்பண்ணவும் முடியாது. எனவே தனக்கு வரும் இடர்களை நீக்க இறைவனை வேண்டி இரந்து அதன் தாக்கத்தைக் குறைத்துக் கொள்ளலாம் அத் துன்பத்திலிருந்து தப்பித்தும் கொள்ளலாம்.

ஒருவரது வாழ்வில் அவனது முதலாவது கடமை தன்னைத்தான் அறிதல் ஆகும். தன்னைத்தான் அறிந்துகொள்ளின் மற்றவர்களை நாடி அலைய வேண்டியதில்லை. மற்றவர்களால் அவமானப்பட வேண்டிய அவசியமும் இல்லை. அவன் இவன் எனக் கூறி யுத்தம் புரிய வேண்டிய அவசியமும் இல்லை.

- ச. பாலசுந்தரம் -

நல்லூர் கந்தசுவாமி கோவிலுடன் யோகர் சுவாமிகளின் வாழ்வும் வளமும் 'பின்னிப்' பிணைந்துள்ளது.

# 'நிலா'விற்குப் பதில்

## ராஜ்குமார்

அன்புள்ள நிலாவுக்கு!
அண்மையில்
வான் கடிதம் ஒன்று
வந்திருந்தது.
(பத்திரிகையைப்) பிரித்துப் படித்தேன்.
அது உன் கடிதம்.
ஆவலோடு காத்திருப்பாய்
அவசரமாய் - பதில்
அனுப்புகின்றேன்.

கவிஞர்கள் பற்றி
கவலையுடன் எழுதியிருந்தாய்,
உண்மை தான்.
உன்னைவிட-
அழகான
பெண்களைப் போய்
உன்னோடு ஒப்பிடுகிறார்கள்!
பொய்யர்கள் மட்டுமல்ல,
புளுகர்களும் தான்.
ஒத்துக் கொள்கிறேன்.
அம்புலி மாமா கேட்டிருந்தாய்
அது இப்போ இங்கு
விற்பனையாவதில்லை.
இந்...... இல்லை...... வேண்டாம்......
குளத்தோடு கோபமாம் அவர்களுக்கு-
அதனால்
குளிக்கவேண்டாம் என்றுவிட்டார்கள்.
பொழிப்பு கேட்காதே - புரியாது
சஞ்சீவிக்கு வேண்டுமானால்
சந்தாதாரர் ஆகிவிடு!
அனுப்பி வைப்பார்கள்
அடுத்த வாரமே.

விலைவாசி உன்வரை
விஜயம் செய்ததாமே!
ஆனால்
அடுத்த வாரமே
அவர் உன்னைவிட்டு
ஆயிரம் மைல்களுக்கு
அப்பாலுள்ள
ஆதவனைச்
சந்தித்துவிட்டாராம்.
அடுத்த வாரத்தில்
அதற்கும் அப்பாலுள்ள
பால்வெளி மண்டலத்தில் - ஒருவரைப்
பார்க்கப் போகிறாராம்.
என்றாலும் அவர் ரொம்ப வேகம்!



ஆம்ஸ்ரோங் பற்றி
ஆவலாகக் கேட்டிருந்தாய்.
அவருக்குப் பின்னர்
பலரை - அனுப்பி வைத்திருந்தோமே
காணவில்லையா - நீ?
அது சரி
ஆம்ஸ்ரோங்கில் மட்டும் என்ன
ஆறாத காதலா?
தப்பும்மா
அவர் கல்யாணமானவர்
மறந்து விடு.

நீளமான கியூக்கள்
நிதர்சனமாய் தெரிகிறதாய்
நீ எழுதியிருந்தாய்
வாஸ்தவம்தான்
அத்தோடு அவதானித்துப் பார்
அண்மையில் நம் நாட்டில்
ஆறுகளும் அதிகரித்தது தெரியும்
தண்ணீர் ஆறுகள் அல்ல,
வரதட்சணைக் கொடுமையால்
வாடும் எம் சகோதரிகளின்
கண்ணீர் ஆறுகள் அவை.

பகல் டியூட்டி உனக்கு
பாதுகாப்பு இல்லை
நைட் டியூட்டி தான் நல்லது
ஏனென்றால்
நட்சத்திரங்களிடம் உன்னை
நம்பி ஒப்படைக்கலாம்
அவர்கள் சிறுவர்கள் - ஆனால்
பகலிலோ
பகலவன்
கற்பழித்து விட்டால்.........
களங்கம் வந்துவிடுமே
வேண்டாம் வினை!

ஆணா? பெண்ணா?
அல்லது - நீ
அர்த்த நாரியா?
என்று நாம்
ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்தபோது
அந்த அமாவாசையன்று
வீட்டுக்குத் தூரமாய்
உட்கார்ந்து விட்டாயே!
அப்படியென்றால் - நீ
..................

கூலிங் கிளாஸ் கேட்டாய்
குடுத்தனுப்ப முயல்கின்றேன்
சற்று முன்னர் சொல்லியிருந்தால்
கொலம்பியா அப்பக்கம் வந்ததே
கொடுத்தனுப்பி இருப்பேனே
அடுத்த விண்கலத்தில்
அனுப்பி வைக்கலாம் - ஆனால்
கஷ்டம்ஸ் காரர்கள்
சஷ்டப்படுத்துவார்கள்
காசைக் கொடுத்து
சமாளிக்கப் பார்க்கிறேன்.

கடலும் கன்னி
நீயும் கன்னிதான்
இருவருக்கும் இடையே
யார் அழகி என்று
பரஸ்பரம் ஒரு
பனிப்போர் உண்டாமே?
பின்னர்
எப்படி நீ அவளிடம்
முகம் பார்க்க முடியும்?
சீறி எழாமல்
சிரித்துக் கொண்டா இருப்பாள்?

காற்றில்லை
வரவேண்டாம் - என்று
வழி மறித்து விட்டாய்!
தப்பித்தேன்.
இல்லையென்றால்
எம்மூர் ஏஜென்ஸிக்காரர்கள்
பாஸ்போர்ட், டிக்கெட், விஸா
என்று வகையாக
வாட்டி எடுத்திருப்பார்கள்
தப்பித்தேன்.

- அன்புடன் ராஜ் -

[ 12 - 08 - 1989 சனிக்கிழமை சஞ்சீவி சஞ்சிகையில் பிரபல எழுத்தாளர் ராஜேஷ்குமார் எழுதிய ''நிலா'' - வின் கடிதம் பிரசுரமாகியிருந்தது. இவ்வாரம் நிலாவிற்குப் பதில் எழுதுகிறார் ராஜ்குமார் சலேஷியஸ். ]

இன்றைய நாகரிக உலகத்தில் தொழிற்துறைகள் மிகவும் வளர்ச்சியடைந்து வருகின்றன. இதை இயக்கும் முக்கிய ஜீவநாடிகளாகத் தொழிலாளர்கள் பல தொல்லைகளுக்கும் மத்தியில் தொண்டு செய்து வருகின்றனர்.

# உழைக்கும் கரங்களே உயர்வைத் தரும்;
# இஸ்லாம் மதம் போதிக்கும் உண்மை!

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, தனது சக்தியை சக்கையாகப் பிழிந்து பாடுபடும் இந்தத் தொழிலாளர்களின் மேன்மையையும், உயர்வையும் பற்றி பாராட்டும் இஸ்லாம், அவர்களின் உரிமைகளைப் பேணுமாறு எச்சரிக்கின்றது.

'பகலை நாம் உங்களுக்கு அளித்ததே உங்கள் வாழ்க்கைத் தேவைகளைத் திரட்டிக் கொள்வதற்காகத்தான்' என்று அல்- குர் ஆன் கூறுகின்றது.

இதிலிருந்து, மனிதன் தன் ஒரு சாண் வயிற்றுக்காய் பகல் இரவு என்று பாராது ஓயாது உழைத்துக் கொண்டு இருக்க வேண்டுமென்பது அல்ல. மனிதன் உடலுக்கும், உள்ளத்திற்கும் செய்ய வேண்டிய கடமையும் இருக்கிறது. பகலில் உழைத்து, இரவில் உறங்கி ஓய்வெடு என்பதையே அறிவுறுத்துகிறது.

**உழைப்பின் உயர்வு**

உழைப்பின் உயர்வைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறும்போது:

'எவரும் தனது கரத்தால் உழைத்துச் சாப்பிடுவதை விடச் சிறந்த உணவை ஒரு போதும் சாப்பிட்டிருக்க மாட்டார்கள். நிச்சயமாகவே அல்லாஹ்வின் நபி தாவூது (அலை) அவர்கள் தனது கரத்தால் உழைத்தே சாப்பிட்டார்கள்' என்று அருளினார்கள்.

மேலும் உழைத்து வாழ்வதைப் பற்றி நபி (ஸல்) கூறும்போது:

'குடும்பத்தினர்களை காப்பாற்றிட, பிச்சை எடுக்காமல் உழைத்து பொருளீட்டுபவர், பிரகாசம் பொருந்திய முகத்துடன் மறுமையில் இறைவனைச் சந்திப்பார்' என்று கூறினார்கள்.

ஆகவே மற்றவர்களிடம் கைகட்டி, கை நீட்டி வாங்கி உண்ணாமல் உழைத்தே குடும்பத்தை பேணிக் காப்பாற்றுமாறு இஸ்லாம் வலியுறுத்துகிறது.

ஆனால் இன்று 'தொழில்' என்ற காரணத்தினால் மனிதன் சமூகத்தில் பலவாறு பெயர் கூறிப்பாகுபடுத்தப் படுகின்றான். நபிமார்கள் பல தொழில்களைச் செய்தே வந்ததாக வரலாறு கூறுகின்றது.

நபி தாவூது (அலை) - உருக்குச்சட்டி, ஆதம் (அலை) ஏர் பிடித்து உழுதல், நூஹ் (அலை) - தச்சர், இத்ரீஸ் (அலை) - ஆடை தைப்பவர், மூஸா (அலை) - ஆடு மேய்ப்பவர் ஆகவும் இருந்திருக்கிறார்கள்.

**பாகுபாட்டுக்கு இடமில்லை**

எனவே இஸ்லாத்தில் தொழிலில் எந்த பாகுபாட்டுக்கும் இடமே இல்லை.

இன்று நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பான தொழிலாளர்கள் காலையில் இருந்து மாலைவரை உடலை மாய்த்துப் பாடுபடுகிறார்கள். ஆனால் அவர்களின் ஒரு நேர உணவுக்காகக் குடும்பமே கண்ணீரில் கலங்குகிறது.

பேசும் கூலி ஒன்று. கொடுக்கும் சம்பளம் வேறு. இது தான் நம் மத்தியில் நடக்கும் 'கபட நாடகமாகும்'. கொடுக்க வேண்டிய சம்பளத்தையே பலவாறு பிரித்து நாளைக்கு வா! நாளை மறுதினம் வா! என்று கூறுபோடுகின்றோம்.

கஷ்டப்பட்டு வேலை செய்தவன் இதனால் மனம் வேதனைப் படுகின்றான். இவனை நம்பி இருக்கும் உள்ளங்கள் பசியால் ஏங்குகின்றன. இங்கு தான் நாம் இறைவனின் கோபத்தை எதிர் நோக்குகின்றோம்.

'கூலித் தொழிலாளிக்கு அவன் வியர்வை உலருமுன்பே அவனுடைய கூலியைக் கொடுத்து விடு' எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் அடித்துக் கூறினார்கள்.

மேலும் கூலியைத் தெளிவாகப் பேசிக்கொள்ளாமல் வேலை வாங்காதே என இஸ்லாம் வேண்டுகோள் விடுக்கின்றது.



**இஸ்லாம் வேண்டுகோள்**

உழைப்பாளிகளின் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கொடுக்காதவர் பற்றி நபி (ஸல்) அவர்கள் அருளியதாக ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) கூறினர்.

'நான் (நபிகள்) மறுமை நாளில் மூன்று மனிதர்களுக்கு எதிரியாக வருவேன்; அவர்களில் ஒருவர், உழைப்பாளிகளின் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கொடாதவர் என்று.

- அத்தாஸ் ரூமி -

ஆகவே நாம் தொழிலாளர் சம்பள விடயத்தில் மிகவும் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும்.

ஆகவே நாம் கழிந்த காலத்தை மறந்து; மலரப் போகும் எதிர்காலத்திலாவது தவறை உணர்ந்து செயல்பட வேண்டும். நாம் இந்த மனிதனை மயக்கும் மாய உலகத்திலே படைக்கப்பட்ட நோக்கத்தை மறந்து விடச்கூடாது.

நாம் நிரந்தரமாக வாழ இங்கு வரவில்லை. ஒரு நாளைக்காவது மரணத்தைச் சந்திக்க வேண்டியவர்களாவே இருக்கின்றோம்.

ஆகவே முதலாளி - தொழிலாளி அந்தஸ்தை மதித்து, கடமையை உணர்ந்து கண்ணியமாக வாழ்ந்து, கண்ணியமாகவே மரணிப்போம்! ★

# "நானே உலகிற்கு ஒளியாக இருக்கின்றேன்"

## யேசுபிரானின் அருளுரை

இயேசு 'ஒலிவ்' மலைக்குப் போனார். மறுநாள் காலையிலே அவர் திரும்பி தேவாலயத்துக்கு வந்தபோது ஜனங்களெல்லோரும் அவரிடத்தில் வந்தார்கள்.

இயேசுவும் உட்கார்ந்து அவர்களுக்கு உபதேசம் செய்தார். அவர் மக்களை நோக்கி,

'நான் உலகத்திற்கு ஒளியாக இருக்கின்றேன். என்னைப் பின்பற்றுகின்றவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்' -என்றார்.

அப்போது பரிசேயர் அவரை நோக்கி,

'உன்னைக் குறித்து நீயே சாட்சி கொடுக்கிறாய், உன்னுடைய சாட்சி உண்மையானதல்ல'- என்றார்.

அதற்கு இயேசு,

'என்னைக் குறித்து நானே சாட்சி கொடுத்தாலும், என் சாட்சி உண்மையாயிருக்கிறது. ஏனெனில் நான் எங்கேயிருந்து வந்தேன் என்றும், எங்கே போகிறேன் என்றும் அறிந்திருக்கிறேன். ஆனால் நீங்கள் அறியமாட்டீர்கள்.

மேலும், நீங்கள் மாம்சத்துக்கேற்றபடி நியாயந்தீர்க்கிறீர்கள். நான் ஒருவனையும் நியாயம் தீர்க்கிறதில்லை. நான் நியாயம் தீர்த்தால் என் தீர்ப்பு சத்தியத்தின்படி இருக்கும். ஏனெனில் நான் தனித்திருக்கவில்லை. நானும் என்னை அனுப்பிய பிதாவுமாக இருக்கிறோம். இரண்டு பேருடைய சாட்சியும் உண்மையென்று உங்கள் நியாயப் பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே...! நான் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவனாயிருக்கிறேன். என்னை அனுப்பிய பிதாவும், என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறார்'.

அப்பொழுது அவர்கள் 'உம்முடைய பிதா எங்கே என்றார்கள்...?' அதற்கு இயேசு,

'என்னையும் அறியமாட்டீர்கள், என் பிதாவையும் நீங்கள் அறியமாட்டீர்கள். நீங்கள் என்னை அறிந்தீர்களேயானால் என் பிதாவையும் அறிவீர்கள்' என்றார்.

இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி,

'உங்களைக் குறித்துப் பேசவும், நியாயந்தீர்க்கவும் எனக்கு அநேகமுண்டு; என்னை அனுப்பியவர் சத்தியமுள்ளவர்; நான் அவரிடத்தில் கேட்டவைகளையே உலகத்திற்குச் சொல்கிறேன்'.



'விரைவில் மனுஷகுமாரனை அறிந்து, நானே அவரென்றும், நான் என் சுயமாக ஒன்றும் செய்யாமல் என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்; என்னை அனுப்பியவர் என்னுடனேயே இருக்கிறார்; பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியே இருக்கவிடவில்லை.'

இப்படியாக இயேசு உபதேசம் செய்துகொண்டு இருக்கும்போது அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். ★

# கர்த்தா உன்னிடத்தில் என்ன கேட்கிறார்?

நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் எல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்புகூர்ந்து உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து, கர்த்தருடைய கற்பனைகளையும் கைக்கொள்ள வேண்டும் என்பதையே அல்லாமல் வேறு எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்...?

# பொது அறிவுப்போட்டி இல. 31

1. எளிதில் வெல்லமுடியாத விரோதி? ... ... ... ... ... ...காமம் / கோபம்
2. தந்தைக்குக் குருவான பிள்ளை? ... ... ... ... ... ... கண்ணன் / கந்தன்
3. நாம் ஒருமுறை கண்ணிமைக்கும் நேரம்? ... ... 1/40 விநாடி / 1/50 விநாடி
4. குழந்தைக் கவிஞர் யார்? ... சுப்பிரமணியபாரதியார் / அழ வள்ளியப்பா
5. கடலினும் பெரியது எது? ... ... ... ... ... ... ... பொறுமை / கடமை
6. பெண்களை மனத்தாலும் தீண்டாதவர்? ... ... ... ஸ்ரீ இராமர் / பீஷ்மர்
7. தத்துவ ஞானிகளில் ஒருவர்? ... ... ...அரிஸ்ரோட்டில் / ஜூலியஸ் சீஸர்
8. மனதைக் கொள்ளைகொள்வது? ... ... ... ... ... ... மலர்கள் / மழலைகள்
9. உலகில் மிகப்பெரிய ஜனநாயகநாடு? ... ... ... ... அமெரிக்கா / இந்தியா
10. இம்முறை உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு நிகழும் நாடு? ... ... ... ... மொரீசியஸ் / மலேசியா
11. சொற்களைவிடச் சிறந்தது எது? ... ... ... ... ... .. மௌனம் / செயல்
12. இதற்கும் சுடும் தன்மையுண்டு? ... ... .. ... ... ... சொல் / நெருப்பு

பெயர்:- ........................................
விலாசம்:- ........................................
........................................

பொது அறிவுப்போட்டி இல: 31
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

........................ இங்கே வெட்டுக ........................

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 06 - 09 - 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றாம் பரிசு: 25 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தியாளராக வாழ்வை ஆரம்பித்து நாவலாசிரியராக மாறிய டிக்கன்ஸ்

மிக்கோவர் என்பவரை உங்களுக்குத் தெரியுமா?

இவரைப் பற்றி அறியும் அரிய சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைக்காவிடில் சார்ள்ஸ் டிக்கின்ஸ் (Charles Dickens) எழுதிய டேவிட் கொப்பர்பீல்ட (David Coppesfield) என்ற நாவலை வாசித்துப் பாருங்கள்.

இவரது ஒரு பொன்மொழி 'உங்களது ஆண்டு வருமானம் இருநூறுபவுண்களானல் நீங்கள் ஒரு பென்னி கூடச் செலவுசெய்தால் கஷ்டப்படுவீர்கள். ஆனல் ஒரு பென்னி மிச்சம் பிடித்தால் சந்தோஷத்தை அடைவீர்கள்' என்பது.

ஆனல் மிக்கோவர் இதன்படி நடப்பதே இல்லை. இவர் ஒரு நாகரிகமான போக்கிரி. ஏமாற்றுக்காரன் எப்பொழுதும் கடன்பட்டோர் சிறைச்சாலையின் கத வடியில் நிற்பவர்.

### நாவலாசிரியன்

இப்படியான ஓர் அப்பாவைப் பெற்ற ஒரு சிறுவன் பிற்காலத்தில் பிரபலமான நாவலாசிரியனுக வர முடியுமா? ஆனல் சார்ள்ஸ் டிக்கன்ஸ் விடயத்தில் இது நனவாகவேமுடிந்திருக்கிறது. சார்ள்ஸ் டிக்கன்ஸின் அப்பா போன்ற பாத்திரம் தான் மிக்கோவர்.

சார்ள்ஸ் டிக்கன்ஸ் தனது நாவலான டேவிட் கொப்பர்பீல்டில் தனது வாழ்க்கைச் சம்பவங்கள் பலவற்றை வைத்து அழகாக எழுதியுள்ளார்.

இவர் இங்கிலாந்தில் உள்ள போத்ட்ஸீ என்ற இடத்தில் பிறந்து இரண்டு வயதில் லண்டனுக்கு வந்தார். பின்னர் அங்கிருந்து பல இடங்களுக்குச் சென்று தமது பதினேராவது வயதில் மீளவும் லண்டனுக்கு வந்தார்.

மிகவும் வறிய மக்கள் வாழும் சேரியில் சுகாதாரக் கேடான இடத்தில் வசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இவருக்கு ஏற்பட்டது. அங்குள்ள சின்னஞ்சிறுசுகள் கூட வேலைக்குப் போகவேண்டும்.

வாசிக்கும் அறிவு வந்தவுடன், நேரம் வசதி என்பன கிடைக்கும்போது அந்த நாளில் பிரபலம் வாய்ந்த நாவல்களையும், கதைகளையும் வாசிக்க ஆரம்பித்தார்.

### லேபல் ஒட்டும் வேலை

அவ்வேளையில் பட்டகடனை அடைக்காத காரணத்தால் இவரது தந்தையார் சிறைக்குச் சென்ருர். தாயாரோ ஒரு பாடசாலை அமைக்கும் நோக்குடன் விளம்பரங்களை எழுதி இவரிடம் கொடுத்து வீட்டுக்கு வீடு கொண்டு செல்லுமாறு கூறினர். இதில் அதிக பயன்கிடைக்கவில்லை.

### ஆங்கிலக் கவிஞர் வரிசையில்

எனவே சிறுவன் டிக்கன்ஸ் வைன் (Wine) தயாரிக்கும் தொழிற்சாலையில் போத்தல்களுக்கு லேபல் ஒட்டும் வேலையிற் சேர்ந்தான்.

அந்த இடம் மிகவும் கெட்டுப்போன சிறுவர்கள் நிறைந்த இடம்.

அங்கு வேலை செய்யும் சிறுவர்களோ மிகவும் முரட்டுத்தனம் நிறைந்தவர்கள்.

ஒரு சில சதங்களுக்காக கிழமைக்குப் பலமணி நேரம் வேலை செய்யவேண்டிய நிலை, இப்படியானதொரு இடத்தில் டிக்கன்ஸ் வேலை செய்திராவிட்டால் மக்கள் ரசிக்கக்கூடிய பிரபலகேடிகள், போக்கிரிகள், ஞானிகள், கயவர்கள், வஞ்சகர்கள் போன்ற பல்சுவைப் பாத்திரங்களைக் கொண்ட நாவல்களை இவரால் எழுதியிருக்க முடியாது.

ஏதோ ஓர் அதிர்ஷ்ட வசத்தால் இவரது தகப்பனுருக்கு சிறிது பணம் சேர்ந்தது. எனவேமகனைப் பாடசாலைக்கு அனுப்பினர். கல்வி முடிந்ததும் ஒரு சட்டத்தரணிக்குக் காரியாலயப் பியோனுக வேலை கிடைத்தது. இதன் பலன் இவரது நாவல்களில் சட்டத்தினுல் ஏமாற்றிப் பிழைக்கும் போக்கிரிப்பாத்திரங்களும் வந்தன.

தான் ஓர் எழுத்தாளனுக வரவேண்டும் என்று மிகுந்த ஆவல். இதற்கு ஒரே ஒருவழி பத்திரிகை ஒன்றில் செய்தியாளர் (Reporter) ஆவதே என்பதை உணர்ந்த இவர் சுருக்கெழுத்தைப் படிக்கலானர்.

ஓய்வு வேளையில் மட்டும் சுருக்கெழுத்தைப் பயின்ற இவர் அதில் வெற்றிபெற்று ஒருபத்திரிகையிற் சேர்ந்தார். சிறு சிறு கதைகளை Boz என்னும் புனைப்பெயரில் பத்திரிகைகளில் எழுதினர்.

பின்னர் இவரது நகைச்சுவை நாவலான 'Pickwick Papers' வெளிவந்தது. இத்துடன் மிகப் பிரபலம் அடைந்தார்.

அதன் பின்னர் எழுதிய நாவல்கள் அநேகம் அதில் குறிப்பிடக்கூடியவை (David Copperfield, Oliver Twist) போன்றவை.

இவர் பிரான்சியப் புரட்சியின் பின்னணியில் எழுதப்பட்ட ஒரே ஒரு சரித்திர நாவலான 'இரு நகரங்களின் கதை' (A Tale of Two Cities) மிகவும் தியாகம் நிறைந்த அற்புத நாவலாகும்.

இவர் தமது இறுதி நாட்களில் எட்வின்ட்ரூட் என்ற நாவலை எழுதி முடிக்காமலேயே காலமானர். எத்தனையோபேர் இதன் முடிவை ஊகித்தும் அறியமுடியவில்லை. இருப்பினும் பூரணமாக அந்த நாவலைக்கூட எத்தனையோபேர் வாசித்து அதன் மர்மத்தை துலக்குவதில் பொழுதைப் போக்குகின்றனர்.

எளிய குடும்பத்தில் பிறந்தும் பெரிய மனிதனுக வரலாம் என்பதற்கு உதாரண புருஷன் சார்ள்ஸ் டிக்கன்ஸ்.

- உதங்கா -

## எத்தனை பட்டங்கள்

வாதாடினுல்
வாயாடி என்கிருர்கள்
சிரித்தால்
வெகுளி என்கிருர்கள்
அழுதால்
நீலி என்கிருர்கள்
சகஜமாகப் பழகினுல்
ஒரு மாதிரி என்கிருர்கள்
எங்களுக்குத்தான்
எத்தனை பட்டங்கள்

— கயல்விழி

# குருக்ஷேத்திர போரை 'கதகளி'யில் சித்தரித்த சுபேதன் - சுகந்தன்

குருக்ஷேத்திரத்தில் போர் மேகம் குமுறுகிறது.

அர்ச்சுனனுக்குப் பார்த்தசாரதியாக கண்ணபிரான் தேர் செலுத்துகிருர்.

போர்முனையில் அர்ச்சுனன் 'இவர்களை எல்லாம் கொன்று குவித்து நான் வெற்றிவாகை சூடவேண்டுமா?— என்று கண்ணனைப் பார்த்துக் கேட்கிருன்.

அதற்கு கிருஷ்ண பரமாத்மா,

'பார்த்திபா, நீ செய்யப் போவது கொடூரயுத்தம் அல்ல, தர்மயுத்தம். நீ கொல்லப்போவது உற்ருர், உறவினர்களின் உடலை அல்ல, அவர்களின் வஞ்சக உள்ளங்களையே. மதிமயங்காது எழுந்து நில் வீரா'— என்று உபதேசிக்கிருர்.



கீதையின் இக்கருத்தை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட கதகளி ஆடல் வடிவமாக கீதோபதேசக் காட்சியை அண்மையில் இரண்டு சகோதரர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் கைலாசபதி கலை அரங்கில் மேடையேற்றினர்.

சளிப்பு உணர்வு என்பது பெருமளவில் எம்மை விட்டு சழிந்துவிட்ட இன்றைய நிலையில் சுபேதன்-சுகந்தன் சகோதரர்களின் கதகளி நாட்டிய நிகழ்ச்சி இடம் பெற்றது.

தமிழுக்குப் பரதநாட்டியம் போல் மலையாளத்துக்கு கதகளி அமைகிறது.

கதகளி நடனம் ஆடுவதற்கு கடினமான பயிற்சி தேவை. அதனைச் சிறப்பாகப் பயின்றுள்ள இந்தச் சகோதரர்கள் பாராட்டுக்குரியவர்களே.

பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. கந்தசாமி, யாழ். பல்கலைக்கழக மொழியியற்றுறை விரிவுரையாளர் திருமதி பார்வதி கந்தசாமி ஆகியோரின் புதல்வர்களான இவர்கள் நளாயினி இராஜதுரை அவர்களின் மாணவர்[illegible]

— ஆர். சா[illegible]

# நேர்மையானவர் யாரோ?

என் மனைவி எவ்வளவு சொல்லியும் நான் அவள் பேச்சைக் கேட்காமல் செய்த வேலையால் இப்பொழுது முறையாக மாட்டிக்கொண்டேன்.

கடந்தகாலப் பிரச்சினைகளில் எமக்கு இழப்புகளும் பாதிப்புகளும் பெரிதாக இல்லை. ஆனல் பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் இரண்டாயிரம் ரூபாய் கொடுப்பதற்கு விண்ணப்பம் கோரப்பட்டது.

நானும் வயோதிபகாலத்தில் பணத்தாசை பிடித்து ஒரு விண்ணப்பத்தை நிரப்பினேன். அப்பொழுது என் மனைவி எவ்வளவோ திட்டினுள். அவள் எனக்கு மரியாதைகூடக் கொடுப்பதில்லை.

'பேராசை பிடிச்சவரே...! உனக்கு என்ன குறைச்சல் எல்லாச் சொத்துக்களும் இருக்கு, பிள்ளைகளும் வெளியில் இருந்து காசு அனுப்புதுகள், என் 'பென்ஷன்' காசும் வருகுது. சும்மா இருந்து சாப்பிடுகிருேம்' என்று திட்டினுள்.

ஆனல் நானே எனது வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்து விண்ணப்பத்தை நிரப்பிக்கொடுத்தேன்.

அதில் கேட்கப்பட்ட பாதிக்கப்பட்டதொகையைத் தவிர மற்றவற்றைச் சரியாகவே ஒன்றையும் சிந்தியாமல் எழுதினேன்.

இன்று காசு பெறுவதற்கு தகுதியுடையோருடைய பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டு இருந்தது. கூப்பன் உள்ளவர்களுக்கு முதலிடம்.

கேள்விப்பட்டு அரசாங்க அலுவலகம் சென்றேன். அங்கு காத்திருந்து அவமானப்பட்டேன்.

எனது பெயர் பட்டியலில் இல்லை. அந்த ஊழியரிடம் சென்ற நான்,

'எங்களுக்குக் காசு இல்லையா...?' என்றேன்.

அவர் என்னை மேலும் கீழும் பார்த்துவிட்டு,

'நீர் பிச்சைமுத்து எல்லோ' என்ருர்.

- ஜெயபாரதி -

ஊழியர் என் பெயரைத் தெரிந்து வைத்திருக்கிருர் என்ற பெருமையில் கர்வத்துடன் 'ஆமா' என்றேன்.

'ஓ...பகிடியா விடுகிறியள்... உங்களுக்கு கூப்பன் இருக்கல்லோ...' என்ருர்.

என்மேல் இப்படி ஒரு இடியா... கனவிலும் நான் நினைக்கவில்லை. 'ஆமாம்' என்றேன்.

'உம்மடை சம்சாரத்துக்கு 'பென்ஷ'னும் வருகிறது தானே...?...

'ஆமாம்'...என்றேன் உடலில் வியர்வைக் கொப்பளங்கள் மினுங்க, உடல்நடுங்க, சனங்கள் வாய்பிளந்து கொண்டு வேடிக்கை பார்க்கத் தொடங்கினர்.

'பிறகு எப்படிக் கூப்பன் எடுத்தீர்...?' விதானையார் கேட்டார்.

'உங்களுக்குக் கொஞ்சம் காசு மறைச்சுத்தந்ததினுல் அல்லோ... மறந்துவிட்டீர்களோ...'

## குட்டிக்கதை

என்ற உண்மையைச் சொல்லவேண்டும்போல இருந்தது. சொல்லத்துணிவு இல்லை. திருட்டுமுழி முழித்தேன். இப்பொழுதுதான் ஞாபகம் வந்தது மனைவி கூப்பன் எடுப்பதற்குத் திட்டியது.

சுடலைஞானம் வந்து என்ன பிரயோசனம்...?... இல்லை... நான்... வந்து அந்த ஊழியருக்குப் பதில் சொல்ல முடியாது தவித்தேன்.

நீர் உம்முடைய கூப்பனை முதலில் கொண்டுவந்து தாரும், மற்றதைப் பிறகு பார்ப்போம் என்ருர் முறுக்கிய மீசை துடிக்க அந்த ஊழியர்.

இவருக்கு கீழாலே கொஞ்சம் பணம் கொடுத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்ற நம்பிக்கையுடன் தலையைக் குனிந்தபடி வீட்டை நோக்கி நடையைக் கட்டினேன். ★

## பதில் சொல்லுங்கள் !

முடியாதென்ருர் ஒருவர்
இல்லை முடியும் என்ருர் இன்னெருவர்!
வீடும் வளவும் நாற்பதாயிரமும்
வீட்டில் இருக்கும் தந்தைக்கோர்
பத்தாயிரம்!
அருமைத்தங்கை ஒருத்தியிருக்கிருள்
அவளுக்கோர் சிறுதொகை
இருபத்தையாயிரம்!
தந்தால் திருமணம்!
இல்லை என்ருல் இல்லைவே இல்லை
திருமணம்!
என்ருர் பிள்ளையைப் பெற்றவர்
என்ன சொல்லியும்
ஈட்டி முனையில்
பொன்னைக் கேட்போர்
இறங்கிட வில்லை!
எப்படியோ இவற்றைக் கொடுத்து
மாப்பிள்ளைப் பையனை
மாட்டைப் போல
வாங்கி விட்டார் பெண்ணைப் பெற்றவர்!
வாங்கிய மாப்பிள்ளை
விபத்தில் சிக்கி
கால்களை இழந்தனன்
கட்டிலில் கிடந்தனன்!
எத்தனை நாட்கள் இப்படியே தான்
இருக்க முடியும்?
குடும்பப் பொறுப்பை
அவளேற்றுக் கொண்டாள்
வேலை ஒன்றையுந் தேடிக் கொண்டாள்!
பெற்ற சீதனம் யாருக்குச் சொந்தம்?
பெண்ணுக்குப் புருஷனே
உலகம்!
வாழ்க்கை!
வரதட்சணை வாழ்க்கையே யல்ல
அதனுல்,
அவளால் திருப்பிக் கேட்கவா முடியும்?

— ஆனந்தி சிவஞானசுந்தரம்

## விலாசம் மாறும் விண்ணப்பங்கள்

உறவையும், உள்ளத்தையும்
கேட்டார்—
கொடுத்தேன்;
உயிரையும் அவருக்காகக்
கொடுக்க
நான் தயாராய் இருந்தேன்
அவரோ!
இவற்றுக்கெல்லாம் மேலாக
என் கூட்டைப் பயன்படுத்தப்
போவதாக—
உத்தரவாதம் கேட்டார்
அந்த உத்தரவு மட்டும்
உங்கள் பெற்ரேரிடமிருந்து
எனக்குக் கிடைக்க வேண்டும்
என விண்ணப்பித்தேன்.
படிவமும், பதிலும்
பெற்றுவருவதாகச் சென்ருர்.
சென்றவர் திரும்பவில்லை
இதுவரை—
ஓ! ஒருவேளை!
விண்ணப்பப் படிவம்
வேற்று முகவரிக்குப் போய்ச்
சேர்ந்து விட்டதோ!
யார் அறிவார்?

— செவ்வந்தி மகாலிங்கம்

## 'தேன்' தமிழ் பற்றி முத்தமிழ்க்காவலர்

'தமிழ்' என்பதற்கு 'இனிமை' என்ற பொருள் உண்டு.

கொல்லிமலைக் காட்டில் உள்ள ஓர் ஆளிடம் தேன் கொண்டு வரும்படி சொல்லியிருந்தேன்.

அவன் அன்று வராமல் மறுநாள் வந்து வெறுங்கையோடு நின்றதால் சிறிது கோபித்தேன் அவன் பேசினுன்:—

'நேற்று மலைக்கு நடந்'தேன்'. பல இடங்களில் அலைந்'தேன்'. ஒரு கொடியைப் பிடித்'தேன்'. ஏறிச்சென்று கலைத்'தேன்' சட்டியில் பிழிந்'தேன்'. நன்ருக வடித்'தேன்' அதனைக் கண்டு மகிழ்ந்'தேன்'. அதில் சிறிது குடித்'தேன்'. களித்'தேன்'. களைத்'தேன்'. அயர்ந்'தேன்' மறந்'தேன்'. இன்று காலை எழுந்'தேன்'. நினைத்'தேன்'. தேனை அடைந்'தேன்'. எடுத்'தேன்'. விரைந்'தேன்'. நடந்'தேன்'. வந்'தேன்' சேர்ந்'தேன்'. இப்போது தான் உங்கள் ஆளிடம் கொடுத்'தேன்' —'


— இப்படி அந்த ஆள் கூற நான் கேட்டு மகிழ்ந்'தேன்'. அவனுக்கு உரியதையும் கொடுத்'தேன்'.

அப்பொழுதுதான் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு படி 'தேன்' என ருசிக்கும் என்னே 'தேன்' தமிழ். ★

— கி. ஆ. பெ.

## சொற்சிலம்பம்

### போட்டி இல: 106



சொற்சிலம்பம் இல: 106
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..................................
விலாசம்: ..................................
..................................

——— இங்கே வெட்டுக ———

**முடிவு திகதி: 13 - 09 - 1989**

**இடமிருந்து வலம்:**

1. புகழ்பெற்ற முருகன் ஆலயங்களில் ஒன்று 6. சரஸ்வதி குழம்பியுள்ளார் 7. வீடுபேறு 8. குந்தி புத்திரரில் ஒருவர் 9. துயரம் 11. தொடர்பினை இல்லாமல் செய் (தலைகீழாக) 14. அச்சம் 17. சொல்லுவது 18. ஒரு வகை வாத்தியம் 19. கடலில் தோன்றுவது 21. பாத்திரம் 22. சீனி தயாரிப்பதற்கு.

**மேலிருந்து கீழ்:**

1. சிலம்பு வித்தையை இப்படியும் சொல்வர் 2. பிதிர்களுக்குச் செய்யும் சிரார்த்த தினம் 3. பூமி தலைகீழாகவுள்ளது 5. தலையெழுத்து 7. இள மரத்தை இப்படிக் கூறுவர் 8. நிலவிரிப்பில் இதுவும் ஒன்று 10. தோழன் அல்லது தோழியை அழைப்பது 12. ஒரு வகை மரம் 16. பூ மொட்டுக் குழம்பியுள்ளது. 17. நஞ்சு 18. ஒன்றுசேர்.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினுல் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்சன் கல்விநிலையம்
தெல்லிப்பழை.
91 O/L DAY CLASS
நடைபெறுகின்றன.
விஞ்ஞானம் — திரு. J. R. சூரி
கணிதம் — திரு. மகேந்திரன், மதி
தமிழ் — திரு. கணேஷ்
ஆங்கிலம் — திரு. M.A. ஹரிதாஸ்
சமூகக்கல்வி — திரு. V. S. R.
வர்த்தகம் — திரு. வரதன்

சஞ்சீவி சஞ்சிகை

02 - 09 - 1989 சனிக்கிழமை

தான்சன் கல்விநிலையம்
கே. கே. எஸ்.றேட், தெல்லிப்பளை
91 A/L வகுப்புகள்
நடைபெறுகின்றன.
பொருளியல் — திரு. சண்
அளவையியல் — திரு. சயந்தன்
வர்த்தகம் — திரு. சிவா
கணக்கியல் — திரு. யோகராஜா
தமிழ் — திரு. கணேஷ்
இந்துநாரீகம் — திரு. M. R.
அரசியல் — திரு. செபராஜா

# சியாச்சென் பனிப் பிரதேச பேச்சுக்கள் தோல்வியால்

# இந்திய-பாக் உறவில் தேக்க நிலை!

## உலகிலே அதி உயர்ந்த யுத்த முனை எரிமலையாகக் குமுறும் அபாயம்

காஷ்மீருக்கே வடக்கே உள்ள சியாச்சென் (Slachen) பனிப்பிரதேசத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் பிரகடனப்படுத்தப்படாத எல்லை யுத்தம் ஒன்றை நடத்தி வருகின்றன.

கடந்த 5 வருடகாலமாக நடைபெறும் இந்த யுத்தம் குறித்து பாகிஸ்தான் மக்களுக்கோ அல்லது இந்திய மக்களுக்கோ அதிகம் தெரியாது. உலகநாடுகள் இது பற்றிப் பெரிதாக அறிந்திருக்கவில்லை: உலக நாடுகளின் செய்தித்தகவல் ஸ்தாபனங்கள் கூட இந்த யுத்தம் பற்றிய சரியான தகவல்களைக் கொடுக்க முடியாத நிலையில் உள்ளன.

17 ஆயிரம் அடி முதல் 20 ஆயிரம் அடி வரையிலான உயரத்தில் முழுதும் பனிப் பாறைகள் நிறைந்த மலைப் பகுதியில் இந்த யுத்தமுனை இருப்பது தான் இதற்குக் காரணம்.

உலகிலேயே அதி உயரத்தில் உள்ள யுத்தமுனை இது.

சியாச்சென், பனிபடர்ந்த மலைப்பிரதேசம் ஆகையால் யுத்தமுனையில் இரு தரப்பினரும் பெரும்பாலும் ஷெல்களையும், கனரக பீரங்கிகளையும், ருக்கட் லோஞ்சர்களையுமே பயன்படுத்துகின்றனர்.

### விபத்துக்களால் இறப்போரே அதிகம்

யுத்தத்தில் இறப்பவர்களை விட விபத்துக்களில் இறப்பவர்களும் நோய்கள், குளிர் ஆகியவற்றால் இறப்பவர்களுமே அதிகம். 10 பேரில் 8 பேர் இவ்விதம் உயிர்ச் சேதமோ, உடல் சேதமோ அடைகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்மலைப் பிரதேசத்தில் பிரகாசமான சூரியனின் கதிர்கள் வெண்பனியில் பட்டுத் தெறிக்கும்போது போர்வீரர்களின் கண்கள் பாதிக்கப்படுகின்றன. சருமங்கள் கருமை அடைகின்றன.

நோய்வாய்ப்படும் அல்லது காயம் அடையும் இந்தியத் துருப்புக்கள் லடாக்கின் தலைநகரான லே (Leh) வில் உள்ள ஆஸ்பத்திரிக்கு ஹெலிக்கொப்டர் மூலம் கொண்டு வரப்படுகிறார்கள். இந்த நகரம் 11,555 அடி உயரத்திலே இருக்கிறது. யுத்தமுனை 17 ஆயிரம் அடி முதல் 20 ஆயிரம் அடிவரை உயரத்தில் இருக்கிறது.

### தோல்வியில் முடிவடைந்த பேச்சுக்கள்

மனித சஞ்சாரமற்ற இப்பிரதேசத்துக்கு உரிமைகோரி நடக்கும் இந்த யுத்தத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் கோடிக்கணக்கான பணத்தைச் செலவிடுகின்றன.

இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக இந்திய - பாக் இராணுவ அதிகாரிகள் சமீபகாலமாக பேச்சுக்கள் நடத்தி வந்தனர்.



பெனஸீர் பூட்டோ

இவை தோல்வியில் தற்போது முடிவடைந்துவிட்டன:

சியாச்சென் எல்லைத் தகராற்றுக்குத் தீர்வு காண்பது என்பதில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் பாகிஸ்தான் பிரதமர் பெனஸீர் பூட்டோவும் கடந்த ஜூன் மாதம் இணக்கம் கண்டிருந்தனர்.

இது தொடர்பான முதலாவது கட்டப் பேச்சுக்கள் இரு நாடுகளுக்கும் இடையில் கடந்த ஜூலை மாதம் புதுடில்லியில் நடைபெற்றிருந்தன: இம்மாதம் நடுப்பகுதியில் இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் இஸ்லாமபாத்தில் நடைபெற்றன. இம்மாதம் 19 ஆம் திகதி முடிவடைந்த இந்த இரண்டாம் கட்டப் பேச்சுக்களே தற்போது தோல்வி அடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### "மேகதூதன்"

சியாச்சென் பனிப்பிரதேசத்தில் இந்தியாவே முதலில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தது என்று கூறப்படுகின்றது.

1984 ஏப்ரலில் இந்தியா 'மேகதூதன்' (Operation Megh doot) என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்றை இங்கு ஆரம்பித்தது. அந்த நடவடிக்கையின்போது இரு பிரதான மலைக்கணவாய்களைக் கைப்பற்றித் தனது படைகளை இந்தியா நிறுத்தியது.

'மேகதூதன்' ராணுவ நடவடிக்கையின் போது சியாச் சென் பனிப்பிரதேசத்தில் தனது கட்டுப்பாட்டில் இருந்த சுமார் ஆயிரம் சதுர மைல் பிரதேசத்தை இந்தியாவிடம் பாகிஸ்தான் இழந்தது

1984 ஆம் ஆண்டில் இருந்து இரு நாடுகளும் இப்பகுதியில் படைகளையும் ஆயுதங்களையும் குவிக்க ஆரம்பித்தன.

1987 ஆம் ஆண்டு பாகிஸ்தான் படைகள் இந்திய நிலைகள் மீது பரந்த அளவில் தாக்குதலை ஆரம்பித்தன.

அப்பொழுது 20 ஆயிரம் அடி உயரத்தில் உள்ள ஓர் இந்தியக் காவல் நிலையத்தை மட்டும் பாகிஸ்தான் படையினரால் கைப்பற்ற முடிந்தது.

### சியாச்சென் பிரச்சினை வளர்ந்த வரலாறு

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சியாச்சென் எல்லைத்தகராறு இன்று, நேற்று ஏற்பட்டதல்ல. இதன் ஆரம்பம் 1947 ஆம் ஆண்டு.

1947 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் தனி நாடாகப்பிரிக்கப்பட்டது. அன்றில் இருந்து இப்பிரச்சினை இருந்து வருகிறது:

ஆனால் தற்போதுதான் பூதாகாரமெடுத்துள்ளது.

1947 பிரிவினையை அடுத்து காஷ்மீருக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் உரிமை கோரின. இந்தத் தகராறு அப்போது யுத்தமாக வெடித்தது. காஷ்மீர் யுத்தத்தின் தொடரே தற்போதைய சியாச் சென் எல்லைத் தகராறும் ஆகும்.

1947 ஆம் ஆண்டு யுத்தத்தின் போது காஷ்மீரில் மூன்றில் ஒரு பகுதியைப் பாகிஸ்தான் கைப்பற்றிக் கொண்டது. யுத்தத்தை நிறுத்த ஐ. நா. தலையிடவேண்டியதாயிற்று.

1949 ஆம் ஆண்டு ஐ. நா. தலைமையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்பட்டது.

### கராச்சி ஒப்பந்தம்

'கராச்சி ஒப்பந்தம்' என்ற பெயரில் இருநாடுகளும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன.

காஷ்மீர் இந்தியாவிடமா அல்லது பாகிஸ்தானிடமா இருக்கவேண்டும் என்பதை முழு காஷ்மீர் மக்கள் மத்தியிலும் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கவேண்டும் என்று அந்த ஒப்பந்தம் மூலம் இணக்கம் காணப்பட்டது.

'கராச்சி ஒப்பந்தம்' கையெழுத்தாகி தற்போது 40 வருடங்கள் கழிந்துவிட்டன. பாகிஸ்தான் கைப்பற்றிய காஷ்மீரின் மூன்றில் ஒரு பகுதி 'அஸாத் காஷ்மீர்' என்ற பெயரில் தொடர்ந்து பாகிஸ்தான் வசமே இருந்து வருகிறது: எஞ்சிய பகுதி ஜம்மு - காஷ்மீர் என்ற [illegible]ரில் இந்தியாவிடம் இருந்து வருகிறது. சர்வஜன வாக்கெடுப்பு இதுவரை நடத்தப்படவில்லை.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று பாகிஸ்தான் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வந்தது. தற்போது இது சாத்தியப்படாததால் அக் கோரிக்கையை பாகிஸ்தான் பெரும்பாலும் கைவிட்டிருந்தது.



ராஜீவ்காந்தி

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று கோரி காஷ்மீர் சிங்கம்ஷேக் அப்துல்லா காலத்தில் நீண்ட காலமாக காஷ்மீரில் இந்திய எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றுவந்தன. தற்போது அங்கு இந்திரா காங்கிரஸும் ஷேக் அப்துல்லாவின் மகன் பாரூக் அப்துல்லா தலைமையிலான தேசிய பேரவைக் கட்சியும் இணைந்து கூட்டரசாங்கம் நிறுவியதை அடுத்து இந்திய எதிர்ப்பு பெரும் அளவு தணிந்துவிட்டது:

எனினும் சர்வஜனவாக்கெடுப்பு நடத்தப்படும் பட்சத்தில் அதன் முடிவு பாகிஸ்தானுக்கு சார்பாகவே இருக்கும் என்பது பொதுவான முடிவு. காஷ்மீர் மக்கள் இந்தியாவைவிட பாகிஸ்தானுடனேயே நெருங்கிய பிணைப்பு கொண்டவர்கள்:

### பூரணத்துவம் இல்லாத யுத்த நிறுத்த எல்லை

1949 ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட 'கராச்சி ஒப்பந்தத்'தின் பிரகாரம் இரு நாடுகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த எல்லை (Cease-Fire Line) ஒன்று வகுக்கப்பட்டது:

அந்த யுத்தநிறுத்த எல்லை சியாச்சென் பனிப்பிரதேசத்துடன் நின்றுவிட்டது: சீன எல்லையில் உள்ள காரகோரம் கணவாய் வரை எல்லை வகுக்கப்படவில்லை: இதற்குள் அடங்கி இருப்பதே சியாச்சென் பனிப்பிரதேசம் ஆகும். இப்பகுதியில் அப்போது சண்டை நடைபெறாததால் யுத்த நிறுத்த எல்லையை வகுக்கவேண்டிய அவசியம் ஐக்கிய நாடுகள் சபைக்கு இருக்கவில்லை என்று கூறப்படுகிறது:

1965 - 1971 ஆம் ஆண்டுகளில் நடந்த இந்திய-பாக் யுத்தங்களை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைகளில் சிறிய மாற்றங்கள் செய்யப்பட்டபோதிலும் சியாச்சென் பனிப்பிரதேசத்தின் உரிமை கேள்விக் குறியாகவே விடப்பட்டிருந்தது.

★ சியாச்சென் பகுதிக்கு மலை ஏற வருவோர் கடந்த பல ஆண்டுகளாக பாகிஸ்தானிடமே அனுமதிபெற்று வருகிறார்கள்.

★ 1963 ஆம் ஆண்டு சியாச்செனின் வட பிரதேசத்தில் 1,544 சதுர மைல் பிரதேசத்தை ஒப்பந்தம் ஒன்றின்கீழ் பாகிஸ்தான் சீனாவிடம் கையளித்திருந்தது:

★ 1980 ஆம் ஆண்டு பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் பிரசுரிக்கப்பட்ட உலக வரைபடத்தில் சியாச்சென் பிரதேசம் பாகிஸ்தானுக்குச் சொந்தமானது என்றே காட்டப்பட்டிருக்கிறது:

இவற்றை எல்லாம் ஆதாரம்காட்டி சியாச்சென் பனிப்பிரதேசம் தனக்கே சொந்தம் என்று பாகிஸ்தான் வாதாடுகிறது.

சியாச்செனில் ஓர் அங்குல நிலத்தைக்கூட இந்தியாவிடம் இழக்கத் தயாரில்லை என்று பாகிஸ்தான் பிரதமர் பெனஸீர் பூட்டோ தற்போது சூளுரைத்து வருகிறார்:

சியாச்சென் தொடர்பாக இஸ்லாமபாத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வி அடைந்த பின்னர் அவர் சியாச்செனில் பாகிஸ்தான் வசம் உள்ள பிரதேசத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

### பேச்சுவார்த்தை தோல்வியுற காரணம் என்ன?

சியாச்சென் பனிப்பிரதேசம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்ததுக்கு இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் இருந்து வரும் உள்நாட்டு அரசியல் நிலைமைகளே காரணம் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இந்தப் பிரச்சினையில் விட்டுக்கொடுத்தால் எதிர்க்கட்சிகள் அரசியல் லாபம் பெறும் நிலைமை இரண்டு நாடுகளிலுமே இருந்து வருகிறது.

'போபோர்ஸ்' ஊழல், தீர்வு காணப்படாத பஞ்சாப் பிரச்சினை, மாநிலங்களில் உருவாகிவரும் பிராந்தியப் பிரச்சினைகள் காரணமாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி எதிர்வரும் பொதுத் தேர்தலில் கடந்த 40 வருடகாலத்தில் இல்லாத பலப் பரீட்சையை எதிர்நோக்கி உள்ளார்.

மேற்கண்ட பிரச்சினைகள் ராஜீவ் காந்தியை தாக்குதல் நிலையில் இருந்து தற்காப்பு நிலைக்குத் தள்ளிவருகின்றன என்று கூறப்படுகிறது:

பாகிஸ்தானில் பெனஸீர் பூட்டோவுக்கும் இதே நிலைதான். பொதுத் தேர்தலின் பின் அறுதிப்பெரும்பான்மை இல்லாத நிலையில் பெரும் இழுபறியின் மத்தியில் ஆட்சி அமைத்தவர் பெனஸீர் பூட்டோ.

எதிர்க்கட்சிகளுடன் அரசியல் பலப்பரீட்சை நடத்தும் நிலையிலேயே அவரும் இருந்து வருகிறார்;

தீர்வுகாண முடியாது என்று கருதப்பட்ட கம்போடியா, ஆப்கனிஸ்தான், நிக்கரகுவா, நமீபியா பிரச்சினைகளில் பெரும் திருப்புமுனைகள் ஏற்பட்டுள்ள இவ்வேளையில் மனித சஞ்சாரமற்ற பகுதியில் அமைந்துள்ள சியாச்சென் எல்லைத் தகராறு ஒரு சின்ன விஷயமே.

அரசியல் லாபம் கருதாது இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க ராஜீவ் காந்தியும் பெனஸிர் பூட்டோவும் முன்வர வேண்டும். ★

# அக். 15இல் ஆரம்பமாகும் நேரு கிண்ண கிரிக்கெட் போட்டி!

இந்தியாவில் நடைபெறவுள்ள நேரு கிண்ணத்துக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் முதலாவது போட்டியில் இலங்கை அணி இங்கிலாந்து அணியை எதிர்த்து ஆடவுள்ளது.

இந்தியாவின் முதலாவது பிரதம மந்திரியான ஜவகர்லால் நேருவின் நூறாவது பிறந்ததினக் கொண்டாட்டங்களை ஒட்டி நடைபெறவுள்ள இந்த ஒரு நாள் கிரிக்கெட் போட்டி அக்டோபர் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இந்தியா உட்பட பாகிஸ்தான், இலங்கை, இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள், ஆஸ்திரேலியா ஆகிய ஆறு டெஸ்ட் அந்தஸ்தைப் பெற்றுள்ள நாடுகள் இப்போட்டியில் கலந்து கொள்கின்றன.

போட்டி அட்டவணை பின்வருமாறு;-

அக்டோபர் 15 இலங்கை எதிர் இங்கிலாந்து (புதுடில்லி)

அக்டோபர் 19 ஆஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து (ஹைதராபாத்)

மேற்கிந்திய தீவுகள் எதிர் இலங்கை (ராஜ்கொட்)

அக்டோபர் 21 மேற்கிந்திய தீவுகள் எதிர் ஆஸ்திரேலியா (சென்னை).

அக்டோபர் 22 இலங்கை எதிர் இந்தியா (அகமதாபாத்).

பாகிஸ்தான் எதிர் இங்கிலாந்து (கல்கத்தா).

அக்டோபர் 23 இந்தியா எதிர் மேற்கிந்திய தீவுகள் (புதுடில்லி).

பாகிஸ்தான் எதிர் ஆஸ்திரேலியா (பம்பாய்);

அக்டோபர் 25 இந்தியா எதிர் இங்கிலாந்து (கான்பூர்)

பாகிஸ்தான் எதிர் மேற்கிந்தியா (சண்டிகார்);

ஆஸ்திரேலியா எதிர் இலங்கை (கோவா).

அக்டோபர் 27 இந்தியா எதிர் ஆஸ்திரேலியா (பெங்களூர்);

பாகிஸ்தான் எதிர் இலங்கை (லக்னோ).

இங்கிலாந்து எதிர் மேற்கிந்திய தீவுகள் (குவாலியூர்);

அக்டோபர் 28 இந்தியா எதிர் பாகிஸ்தான் (கல்கத்தா).

அக்டோபர் 30 அரையிறுதிப் போட்டிகள்.

நவம்பர் 1 மூன்றும் இடத்துக்கான போட்டி.



ஸ்ரீகாந்த்

நவம்பர் 2 இறுதிப்போட்டி (கல்கத்தா).

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டதன் காரணமாக இந்திய அணி வீரர்கள் அறுவரின் மீது விதிக்கப்பட்டுள்ள ஒரு வருடத் தடைஉத்தரவு விலக்கப்படாத பட்சத்தில் ஸ்ரீகாந்த்திடம் இந்திய அணித்தலைமைப் பொறுப்பு ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் பல இளம் வீரர்களையும் புதிய வீரர்களையும் கொண்ட ஓர் அணியாக இந்தியா விளங்கும். இவ்வாறான ஒரு நிலை ஏற்படுமாயின் நேரு கிண்ணத்தைச் சுவீகரிப்பதற்கான சாத்தியக்கூறு மேற்கிந்தியா, ஆஸ்திரேலியா பாகிஸ்தான் ஆகிய அணிகளுக்குக் கூடுதலாகக் காணப்படும்.

ஆஷஸ்கிண்ணப் போட்டித் தொடரில் ஆஸ்திரேலியாவிடம் படுதோல்வியடைந்த இங்கிலாந்து அணி மீண்டும் இப்போட்டியில் தமது திறமையை வெளிக்காட்டுவதற்குப் பெருமுயற்சி எடுக்க வேண்டியுள்ளது.

(எ-6)

விளையாட்டுச் செய்தியாளர்:
- இளங்கோ -

விளையாட்டுத் துறை

## சொற்சிலம்பம் இல: 105

சரியான விடைகள்:

**இடமிருந்து வலம்**

1. மகாபாரதம் 7. திட 8. குவி 9. திரிபு 11. புரு(ச)ஷன் 13. டசின் 14. வான்முகில் 16. தாமரை 18. தவமுனி 20. புனல் 21. கதிரை

**மேலிருந்து கீழ்**

1. மந்திரவாதி 2. காரிகை 3. ரதி 4. தடபுடல் 5. கவின் 8. குஷ(ச)ன் 10. புன்முறுவல் 12. ருசி 15. மரை 17. மதுரை 18. தனம் 19. கனி

## சொற்சிலம்பம் இல: 105

பரிசு பெற்றவர்கள் விபரம்:

**முதலாவது பரிசு:**
திருமதி ந. நரேந்திரன்,
3 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

**இரண்டாவது பரிசு:**
செல்வி. கி. பாமினி,
18, கண்டிவீதி, கண்டுக்குழி, யாழ்ப்பாணம்;

**மூன்றாவது பரிசு:**
திரு. எஸ். ராசரட்ணம்,
செந்தில் வாசம், சண்டிலிப்பாய்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org